᠎# இயேசுவே வாரும்

ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும். வெளி. 22:20

*காலேப் யோசுவா*
Cell :9444701953

*பிளாட் எண். 4, 2வது தெரு, மணலி சரவணா நகர், மாங்காடு, சென்னை - 600 122.*

## ஜீவனுள்ளோருக்கெல்லாம் தாயாகிய ஏவாளின் கர்ப்பத்தில் பொல்லாங்கனாகிய சாத்தானின் வித்து

*தேவனாகிய கர்த்தர் சர்ப்பத்தைப் பார்த்து : ... உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன் ; அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய் என்றார். (ஆதி 3 : 14 & 15)*

1. பிரியமானவர்களே, நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்கு கிருபையும் இரக்கமும் சமாதானமும் உண்டாவதாக.

2. நம்முடைய தேவனும் இரட்சகருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவினுடைய மாபெரும் கிருபையினால் 1982-ம் ஆண்டு **இயேசுவே வாரும்** ஜூலை / ஆகஸ்ட் இதழில் **ஏதேன் தோட்டத்து இரகசியம்** என்ற தலைப்பில் ஏதேன் தோட்டத்தில் நடந்த உண்மையான சம்பவத்தை தேவனாகிய கர்த்தர் லவோதிக்கேயா சபை தூதனும், தீர்க்கதரிசியுமாகிய சகோ. வில்லியம் மாரியன் பிரன்காமுக்கு (வெளி 3 : 14, 10 :6, மல். 4 : 5, 6ன் பின் பகுதி பிள்ளைகளுடைய இருதயத்தை அவர்கள் பிதாக்களிடத்திற்கும் திருப்புவான் என்று வேதவாக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளவன்) வெளிப்படுத்தின பிரகாரமாகவும், மேலும் தேவன் என் உள்ளத்தில் இந்த சம்பவம் குறித்து வைத்த சிந்தனைகள் பிரகாரமாகவும் எழுதினேன். பலஇடங்களில் இருந்து எதிர்ப்புகள் வந்தன. **இயேசுவே வாரும்** இதழ் வாசகர்களுக்கு பிரியமாக காணப்படுகிற காரியம் என்னவென்று அறிந்திருக்கிற அறிவை உடையவனாய் நான் இருந்து, அவர்களுக்கு ஏற்ற ஒரு செய்தியை தாயார் செய்து எழுதினாலோ அல்லது ஒரு கூட்டத்தை கூட்டுவதற்கென்று ஒரு செய்தியை நான் அவர்கள் விருப்பத்திற்கேற்ப அளித்தாலோ நான் தேவனுடைய வார்த்தைக்கு விரோதமாக இருப்பேன். நான் தேவனுக்கு முன்பாக ஒரு மாய்மாலக்காரனாக இருப்பேன். ஆதலால் தேவன் என் உள்ளத்தில் வைத்ததை எழுதுகிறேன், பேசுகிறேன். நான் எழுதுவதும், பேசுவதும் உங்களுக்கு மனகஷ்டமாக இருந்தால் என்னை மன்னித்து எனக்காக ஜெபம் பண்ணுங்கள். உங்களுக்கு பிரயோஜனமாக இருந்தால் கர்த்தருக்கு நன்றி செலுத்துங்கள். பொதுவாக நான் ஒரு பொருளை தொடும்போது அது யாருக்காயிலும் சற்று இடறலாக காணப்படும். அது சகஜம் தான். நான் எல்லாரையும் திருப்தி படுத்தமுடியாது.

3. தென்னிந்திய திருச்சபையில் உயர் பதவியில் உள்ளவர்கள், பெந்தெகொஸ்தே ஸ்தாபனசபை ஊழியர்கள், பள்ளி நிர்வாகிகள், புத்தக பதிப்பாளர்கள், இன்னும் அநேக கிறிஸ்தவர்கள் **ஜீவனுள்ளோருக்கெல்லாம் தாயாகிய ஏவாளின் கர்ப்பத்தில் பொல்லாங்கனாகிய சாத்தானின் வித்து** இதழ் தங்கள் ஆத்துமாவுக்கு பிரயோஜனமாக இருந்தது என என்னிடம் தொலைபேசியில் பேசி என்னை உற்சாகப்படுத்தினார்கள். இதனால் இரண்டாவது பதிப்பு ஒன்று வெளியிட்டேன். இப்பொழுது இந்த மூன்றாவது பதிப்பையும் சில கூடுதல் தகவல்களுடன், கருத்துக்களுடன் வெளியிடுகிறேன். எனது பொருளாதார நெருக்கடி நிமித்தமாக இந்நாட்களில் அடிக்கடி செய்தி தொகுப்புக்கள் வெளியிப்பட முடியவில்லை என்பதை மிக்க மனபாரத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு இதழ் வெளியிட எனக்கு சுமார் 10 முதல் 15 ஆயிரங்கள் தேவைப்படுகிறது.

4. நான் எந்த சபையோடும் ஐக்கியம் கொள்வதில்லை. நான் என் குடும்பத்தாருடன் ஒரு சிறு மந்தையாக என்னுடைய இல்லத்திலே கூடி நாங்கள் தேவனை ஆராதித்து வருகிறோம். நாங்கள் ஞாயிறு ஆராதனை, கர்த்தருடைய இராப்போஜனம், கால்களை கழுவுதல் போன்ற சடங்குகளை ஆசரிக்கிறோம். பொதுவாக எனக்கு எந்த சபையிலும் ஒரு மனம் ஏற்படுவது இல்லை. காரணம், தேவன் வார்த்தையாயிருக்கிறார். சபையானது தேவனுடைய வார்த்தைக்கு முரணாக நடந்துக்கொள்ளும் போது அங்கு தேவனுடைய பிரசன்னம் எப்படியிருக்கும்? சபை மக்கள் மத்தியில் ஐக்கியம் எப்படி இருக்கும்? அவிசுவாசிகளின் ஐக்கியத்தை விட்டு நான் விலகி இருக்கவே விரும்புகிறேன். நான் ஒருத்துவக்காரனோ அல்லது இருத்துவக்காரனோ அல்லதுதிரித்துவக்காரனோ இல்லை. நான் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்னுடைய பாவங்களுக்காக மரித்தார், அடக்கம் பண்ணப்பட்டார், மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார், இவரே மெய்யான தேவனும் நித்திய ஜீவனுமாய் இருகிறார். தேவரீர் மகத்துவமுள்ளவரும், அதிசயங்களை செய்கிறவருமாயிருக்கிறீர் நீர் ஒருவரே தேவன். (Thou art God alone) சங் 86 : 10. இஸ்ரவேலே, கேள் : நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே

**கர்த்தர். (The LORD our God is one LORD) உபா. 6:4. கர்த்தரே தேவன், அவரையல்லாமல் வேறொருவரும் இல்லை. (Thou mightest know that the LORD, he is God ; There is none else beside him) உபா 4 : 35. நானே தேவன், வேறொருவரும் இல்லை. (I am God, and there is none else) ஏசா 45 : 22. நானே தேவன், வேறொருவரும் இல்லை ; நானே தேவன், எனக்கு சமானமில்லை. (I am God and there is none else ; I am God, and there is none like me) ஏசா 46 : 9. என்னைத் தவிரத் தேவனுண்டோ? வேறொரு கன்மலையும் இல்லையே ; ஒருவனையும் அறியேன் ஏசா 44 : 8. அந்த கன்மலை கிறிஸ்துவே 1கொரி 10 : 4. தேவனோ ஒருவர். (But God is one) கலா 3 : 20. ஆக, தேவன் ஒருவர். அவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என நான் விசுவாசிக்கிறேன்.**

5. ஒருவன் தன்னை தேவனுடைய ஊழியக்காரன் என்பானாகில் அவனிடத்தில் மூன்று காரியங்கள் மிக மிக அத்தியாவசியமாக காணப்படவேண்டும். **1. அவனில் தேவனுடைய வார்த்தை நிலைத்து நிற்க வேண்டும்.** எந்த ஒரு சபையின் கோட்பாடுகள் அல்ல, எந்த ஒரு தனிமனிதனின் உபதேசங்கள் அல்ல மாறாக அவன் தேவனுடைய வார்த்தையில் நிலைத்திருந்து, அதையே போதிக்கவேண்டும். நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் உங்களிலும் நிலைத்திருந்தால் (யோ 15 : 7) , பாருங்கள், இது தான் ஒரு ஊழியக்காரனிடம் எதிர்பார்ப்பு **2. அவன் தேவனின் ஒரு பாகமாக இருக்கவேண்டும்.** ஏனெனில் நாம் அவருடைய சரீரத்தின் அவயவங்காளாயும், அவருடைய மாம்சத்திற்கும், அவருடைய எலும்புகளுக்கும் உரியவர்களாயும் இருக்கிறோம் (எபே 5 : 30) **3. நீ தேவனுடைய ஊழியக்காரன் என்றால் தேவனுடைய பிரதிநிதியாக இருக்கவேண்டும்.** நீ ஒரு ஸ்பாதன சபைக்கு, சகோ. பிரன்காமிற்கு, சகோ. டால்டன் புரூஸ்க்கு பிரதிநிதியாக இருக்கக்கூடாது. நீ யாருக்கும் அடிமைபட்டவனாக இருக்கக்கூடாது. நீ தேவனையும் தேவனுடைய வார்த்தையையும் சார்ந்து இருக்கவேண்டும். இந்த அத்தியாவசியமான தன்மைகளை நான் இக்காலத்திற்குறிய செய்தியில் இருக்கிறோம், இக்காலத்திற்குரிய செய்தியை பிரசங்கிக்கிறோம் என்பவர்கள் மத்தியில் காணமுடியவில்லை. ஆதலால் தேவனுடைய வார்த்தையில்லாத சபைகளுக்கு நான் செல்லுவது இல்லை. போலி சபைகளுக்கு சென்றுவருவதில் என் ஆத்துமாவிற்கு எந்த விதமான பலனும் இல்லை. ஒருவன் சபை ஆராதனை முடித்து வெளியே வரும்போது அவனுடைய இருதயம் அவனுக்குள்ளே கொழுந்துவிட்டு எரிய வேண்டும். இன்று சபை கூடுதலுக்குச் சென்றது ஆசீர்வாதமாக இருந்தது என்ற ஒரு உணர்வு அவன் உள்ளத்தின் ஆழத்திலிருந்து எழும்பவேண்டும்.

6. ஒரு சபைக்கு சென்றால் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து 1963 ல் வந்து விட்டார், கர்த்தருடைய வருகையானது வந்துவிட்டது, இனி ஞானஸ்நானம், இராப்போஜனம், கால்களை கழுவுதல் போன்ற ஆசரிப்புகள் தேவையில்லை என்கிறார்கள். இரண்டாவது சபைக்கு சென்றால் அங்கு சகோ. வில்லியம் மாரியன் பிரன்காம் தான் கிறிஸ்து என்கிறார்கள். மூன்றாவது சபைக்கு சென்றால் நானும் என்வீட்டாருமோவென்றால், கர்த்தராகிய பிரன்காம் கிறிஸ்துவையே சேவிப்போம் என்கிறார்கள். நான்காவது சபைக்கு சென்றால் இயேசு கிறிஸ்துவின் இரத்தம் இப்பொழுது பூமியில் இல்லை, கிறிஸ்துவின் மணவாட்டி ஜனங்களுக்காக தேவனிடம் பரிந்து பேசுகிறாள் என்கிறார்கள். ஐந்தாவது சபைக்கு சென்றால் சபை பாஸ்டர், மூப்பர்கள், டீக்கன்கள் அனைவரும் இளம் வயதுடைய வாலிபர்களாகவே காணப்படுகிறார்கள். ஆறாவது சபைக்கு சென்றால் அங்கு திருமணத்தின் போது ஆணும் / பெண்ணும் ஒருவரை ஒருவர் கிஸ் அடிக்க வேண்டும் என்கிறார்கள். ஏழாவது சபைக்கு சென்றால் அங்கு கால்கள் கழுவுதலை கர்த்தருடைய இராப்போஜனபந்திற்கு முன்பே ஆசரிக்கவேண்டும் என்கிறார்கள். எட்டாவது சபைக்கு சென்றால் ஆண்களே லுங்கி கட்டாதீர்கள், பெண்களே நீங்கள் சேலை அணியாதீர்கள், ஆண்களே பேண்ட், பைஜாமா தான் உங்கள் ஆடை, மேலும் உங்கள் தாடி, மீசையை சிறைத்துப்போடுங்கள் என்கிறார்கள். பெண்களே நீங்கள் சேலைக்கு பதிலாக கவுன் அணிந்துக்கொள்ளுங்கள் என்கிறார்கள். ஒன்பதாவது சபைக்கு சென்றால் அங்கு பாஸ்டர், தன் மனைவி மக்களை விட்டு பிரிந்து இருக்கிறார். அதாவது கலியாணம் பண்ணியும் பிரம்மசாரியாக இருக்கிறார். பத்தாவது சபைக்கு சென்றால் பாஸ்டர் ஒரு விசுவாசத்தில். மனைவி மற்றொரு விசுவாசத்தில் இருக்கிறார்கள். மேலும் ஒருவரை விட்டு ஒருவர் பிரிந்து தனித்தனி சபையில் ஐக்கியம் வைத்துள்ளார்கள்.

7. பதினொன்றாவது சபைக்கு சென்றால் தலைக்கல் வந்துவிட்டது. ஆனால் சபை இன்னும் பூரணப்படவில்லை என்கிறார்கள். பன்னிரெண்டாவது சபைக்கு சென்றால் நாங்கள் இப்பொழுது ஆயிரம் வருட அரசாட்சியில் இருக்கிறோம் என்கிறார்கள். பதிமூன்றாவது சபைக்கு சென்றால் தசமபாகம் கொடுங்க, கொடுங்க என ஒரே நச்சரிப்பு. பாஸ்டர் தசமபாகம் எனக்கு மட்டுமே உரியது என்கிறார். அவர் பகுதி நேர ஊழியம் செய்கிற ஒரு நபராகவே காணப்படுகிறார். பதினான்காவது சபைக்கு சென்றால் பாஸ்டர் அரசு / தனியார் கம்பெனியில் பணிப்புரிகிறார். நல்ல வருமானம். சைடு பிஸினஸ் ஆக சபை நடத்தி வருகிறார். கௌரவமான பாஸ்டர் உத்தியோகம். மேலும் கனிசமான தசமபாக வருமானம். ஆடம்பரமான வாழ்க்கை. பரமத்திருப்தியாக காணப்படுகிறார். பதினைந்தாவது சபைக்கு சென்றால் ஸ்திரீக்கு தலைமுக்காடு அவள் சேலை முந்தாணி தான் என்று ஆணித்தனமாக அடித்து பாஸ்டர் பிரசங்கம் செய்கிறார். பதினாறாவது சபைக்கு சென்றால் திருமணம் ஒரு விசுவாசிக்கும் அவிசுவாசிக்கும் பாஸ்டர் செய்து வைக்கிறார். நாங்கள் அவிசுவாசியை விசுவாசியாக்கிவிடுவோம் என்கிறார். பதினேழாவது சபைக்கு சென்றால் பாஸ்டர் தன் பிள்ளைகளை திருமணத்தில் ஸ்தாபனசபை ஜனங்களுக்கு கொடுக்கிறார். அவிசுவாசிகளோடு கலந்து ஒரு சாட்சியற்ற ஒரு வாழ்க்கை வாழ்கிறார். பதினெட்டாவது சபைக்கு சென்றால் சகோ. வில்லியம் மாரியம் பிரன்காம் ஒரே நேரத்தில் இரு சரீரத்தில் (மாம்ச மற்றும் ஆவிக்குரிய சரீரத்தில்) இருந்தார் என்கிறார்கள். தேவனுடைய வார்த்தையையும், இக்காலத்துக்குரிய செய்தியையும் புரட்டுகிறார்கள். பத்தொன்பதாவது

சபைக்கு சென்றால் சகோ. பிரன்காமின் **ஏழு முத்திரை** செய்தி முழுவதும் **கர்த்தர் உரைக்கிறதாவது** என்கிறார்கள். இருபதாவது சபைக்கு சென்றால் பாஸ்டர் முழு நேர ஊழியம் என்கிறார். வீட்டில் தரித்திருக்க வேண்டிய அவர் மனைவி அரசு / தனியார் கம்பெனியில் வேலை செய்கிறார்கள். பணத்தாசை அவரை விட்டு வைக்கவில்லை.

8. இருபத்தொன்றாவது சபைக்கு சென்றால் பாஸ்டர் மற்றும் அவரது மனைவி அரசு / தனியார் கம்பெனியில் வேலை பார்க்கிறார்கள். பகுதி நேர ஊழியமாக சபை நடத்துகிறார்கள். இருபத்திரெண்டாவது சபைக்கு சென்றால் பாஸ்டர் அரசு / தனியார் கம்பெனியில் பணிபுரிகிறார். மனைவி வீட்டில். இருபத்து மூன்றாவது சபைக்கு சென்றால் உபதேசங்கள் / போதனைகள் நாளுக்கு நாள் மாறிக்கொண்டே போகிறது. இன்று ஒரு உபதேசம். பின் அதை மறுத்து நாளை மற்றொரு உபதேசம். இப்படியாக எங்கும் எதிலும் குழப்பம். இருபத்து நான்காவது சபைக்கு சென்றால் சகோ. டால்டன் புரூஸ் என்பவரது செய்தி புத்தகங்களை கரங்களில் வைத்துக்கொண்டு பிரசங்கிக்கிறார் பாஸ்டர். இருபத்து ஐந்தாவது சபைக்கு சென்றால் அங்கு சகோ வில்லியம் மாரியன் பிரன்காம் கொடுத்த செய்தி புத்தகங்களை கரங்களில் வைத்துக்கொண்டு பிரசங்க மேடையில் நின்று பேசுகிறார்கள். பரிசுத்த வேதாகமத்தை கரங்களில் எடுத்து பிரசங்கிக்கும் பாஸ்டர்களை காண்பது அறிதாக இருக்கிறது. கடமைக்காக ஒரு வார்த்தையை மட்டும் வேதாகமத்திலிருந்து எடுத்து வாசித்து விட்டு, அதன் மீது சகோ. வில்லியம் மாரியன் பிரன்காம் செய்தி புத்தகங்களை வைத்து பிரசங்கிக்கிறார்கள். எல்லாம் மாயையும், மனதுக்குச் சஞ்சலமுமாயிருக்கிறது. இருபத்து ஆறாவது சபைக்கு சென்றால் பாஸ்டர் இரு மனைவிகளை உடையவராக இருக்கிறார். ஒரு மனைவி வீட்டில், அடுத்த மனைவி பக்கத்து ஊரில். இருபத்து ஏழாவது சபைக்கு சென்றால் பாஸ்டரின் மனைவி இரண்டு / மூன்று முறை அடுத்த நபருடன் ஓடிச்சென்று பின் பாஸ்டரிடம் திரும்பி வந்தவளாக காணப்படுகிறாள். பாஸ்டரின் இல்லற வாழ்க்கை தாறுமாறாக காணப்படுகிறது. இருபத்து எட்டாவது சபைக்கு சென்றால் பாஸ்டருக்கு குழந்தை பாக்கியங்கள் எதுவும் இல்லை. மனைவி மாத்திரம் உண்டு. இருபத்து ஒன்பதாவது சபைக்கு சென்றால் பாஸ்டர் இரு தோனிகளில் கால் வைக்கிறார். ஒரு பக்கம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றவர்களோடு ஐக்கியம். மறுபுறம் ஸ்தாபன சபைகளோடு ஐக்கியம். அதுவும் வேண்டும், இதுவும் வேண்டும். ஒன்று ஐக்கியத்திற்கு. மற்றொன்று சில்லரை வரவுக்கு. முப்பதாவது சபைக்கு சென்றால் பரிசுத்த வேதாகமம் கவனிப்பாறின்றி ஒரு மூலையில் கிடக்கிறது. சகோ. பிரன்காம் கொடுத்த செய்திகளே போதும் என்கிறார்கள்.

9. முப்பத்து ஒன்றாவது சபைக்கு சென்றால் பாஸ்டராகிய நான் நல்லவனோ, கெட்டவனோ, நான் கூறுவது சரியோ அல்லது தவறோ, என்னை எதிர்த்து எதுவும் பேசக்கூடாது. நான் சொல்கிறதை அப்படியே சபையார் கேட்க / செய்யவேண்டும் என்கிறார். முப்பத்து இரண்டாவது சபைக்கு சென்றால் சகோ. பிரன்காம் உயிர்த்தெழுந்து மீண்டும் ஊழியத்திற்கு வரயிருக்கிறார், அவருக்கென்று ஸ்பெஷல் உயிர்த்தெழுதல் ஒன்று உண்டு என்கிறார்கள். முப்பத்திமூன்றாவது சபைக்கு சென்றால் உன் பெண் பிள்ளைகளை படிக்க வைக்காதே. ஏனென்றால் அவர்கள் பொதுஸ்தலங்களில் பணிக்கு செல்ல கூடாது அல்லவா என்கிறார்கள். முப்பத்து நான்காவது சபைக்கு சென்றால் திருமணத்தில் கலப்பு செய்யாதவன் கிறிஸ்துவின் மணவாட்டி சபையில் அங்கத்தினனாக இருக்க முடியாது என்கிறார்கள். முப்பத்து ஐந்தாவது சபைக்கு சென்றால் வாரத்தில் ஆறு நாட்கள் பாஸ்டரை பார்க்க முடியவில்லை. ஏனென்றால் அவர் எப்பொழுதும் கலெக்ஷனுக்காக ரவுண்ட்ஸ்யில் இருக்கிறார். ஞாயிறு மட்டும் சபை கூடுதலில் கலந்துக்கொள்கிறார். முப்பத்து ஆறாவது சபைக்கு சென்றால் ஞாயிறு பாஸ்டர் சபையில் இல்லை. எங்கே சென்றுவிட்டார் என்று விசாரித்தால் இன்னென்ன ஊருக்கு கன்வென்ஷனுக்காக போயிருக்கிறார் என்றார்கள். முப்பத்தி ஏழாவது சபைக்கு சென்றால் பாஸ்டர் தன்னை ஒரு நாள் அப்போஸ்தலன் என்கிறார். மற்றொரு நாள் தான் இன்டர்நேஷனல் பிரசங்கி என்கிறார். அடிக்கடி அவர் தனது பதவிகளை மாற்றிக்கொண்டே செல்கிறார். முப்பத்து எட்டாவது சகைக்கு சென்று பாஸ்டர் எங்கே என்று விசாரித்தால் சபைக்கு வந்துக்கொண்டிருந்த ஒரு பெண்ணோடு காதல் கொண்டு, இருவரும் ஓடிவிட்டார்கள் என்கிறார்கள். முப்பத்து ஒன்பதாவது சபைக்கு சென்றால் சகோ. காலேப் யோசுவாவோடு யாரும் ஐக்கியம் வைத்துக்கொள்ளக்கூடாது. ஐக்கியம் வைத்துக்கொள்பவர்கள் இந்த சபைக்கு தேவையில்லை என்கிறார்கள். நாற்பதாவது சபைக்கு சென்றால் உங்கள் தனிப்பட்ட காரியமாக இருந்தாலும், குடும்ப காரியமாக இருந்தாலும் பாஸ்டரிடம் கேட்காமல் எதுவும் செய்ய கூடாது என ஒரு மனிதனுடைய தனி சுதந்திரதிற்கு தடை விதிக்கிறார்கள்.

10. நாற்பத்து ஒன்றாவது சபைக்கு சென்று பாஸ்டர் ஐயா உங்கள் மனைவி மக்கள் எங்கே என்று கேட்டால், ஐயா எனக்கு இன்னும் திருமணமே ஆகவில்லை. நான் பெண்கள் அனைவரையும் என் சகோதரிகளாக நேசிக்கிறேன். ஆதலால் நான் இன்னும் திருமணம் செய்யவில்லை, விருப்பமில்லை என்கிறார். நாற்பத்து இரண்டாவது சபைக்கு சென்ற போது பாஸ்டர், நான் கடந்த இரண்டு / மூன்று மாதங்களுக்கு முன் இந்த இந்த சபையில் உங்களை ஒரு விசுவாசியாக கண்டேன். இப்பொழுது நீங்கள் இந்தசபைக்கு பாஸ்டர் என்கிறீர்கள், என்ன சமாச்சாரம்? பதவி உயர்வு ஏதும் உண்டா? பிரதர், ஒரு ஆண்டுகளாக எங்களுக்கும் எங்கள் பாஸ்டருக்கும் தசமபாகம் மற்றும் காணிக்கை வரவு செலவுகளில் கொஞ்சம் பிரச்சனைகள் இருந்து வந்தது. இப்பொழுது அது முடிவு பெற்றது. நாங்கள் ஐந்து பேர் பிரிந்து வந்து ஐந்து சபைகளை ஆங்காங்கு ஆரம்பித்து, எங்களை நாங்களாவே பாஸ்டர்களாக பிரகடனம் செய்துகொண்டோம் என்கிறார். நாற்பத்து மூன்றாவது சபைக்கு சென்றபோது என்ன பாஸ்டர் சகோதரி மற்றும் பிள்ளைகளை சபை கூடுதலில் காணோமே? பிரதர், மகன்கள் இருவரும் மும்பையில் நல்ல உத்தியோகத்தில் அமர்ந்துவிட்டனர். அவர்களுக்கு சமையல் செய்து போட சகோதரியாகிய மனைவியை அனுப்பிவிட்டேன். ஆதலால் நான் தனியாக குடும்பவாழ்க்கை வாழ்ந்து,

சபை நடத்தி வருகிறேன் என்கிறார். நாற்பத்து நான்காவது சபைக்கு சென்றேன். ஹலோ, அதோ அந்த மூலையில் உள்ள ஷோபாவில் ஒருவர் சூட்டுடன் டிப்டாப்பாக உட்கார்ந்திருக்கிறாரே, அவருக்கு ஒருவர் ஷூ மாட்டிவிடுகிறாரே அவர் யார் என கேட்க, ஐயா அவர் தான் எங்கள் சபை பாஸ்டர். அவரை எங்கள் மக்கள் மிக அதிக அதிகமாக நேசிக்கிறார்கள். அவருடைய ஊழியத்தில் மேகஸ்தம்பமும், அக்கினி ஸ்தம்பமும் தோன்றிய வண்ணமாகவே இருக்கிறது. ஆதலால் அவர் மேல் அக்கறைக்கொண்டு, அவர் வேலைகளை நாங்களாகவே அவருக்கு செய்து கொடுக்கிறோம். அவரை குளிப்பாட்டிவிட, அவருக்கு டிரஸ் பண்ணி அலங்கரிக்க, அவருக்கு ஆகாரம் ஊட்ட, அவருக்கு ஷூ பாலிஷ் பண்ணி, மாட்டிவிட இப்படியாக அவருக்கு தேவையான அனைத்து பணிகளையும் செய்ய விசுவாசிகள் இருக்கிறார்கள். அந்த அளவுக்கு விசுவாசிகள் அவருக்கு மதிப்பும் மரியாதையும் கொடுத்து நேசிக்கிறார்கள். பாஸ்டர் பிரங்க நேரத்தில் மட்டும் தான் சபையில் இருப்பார். ஆமா, பிரசங்கபீடத்தின் மேல் இத்தனை குளிர்பானங்கள் எதற்கு? அது எங்கள் பாஸ்டர் பிரசங்கம் பண்ணும்போது அவருக்கு உண்டாகும் தாகத்தை தனிக்க. அதற்காக எப்பொழுதுமே அவர் பிரசங்கத்திற்கு மேடைக்கு வந்துவிட்டால் குறைந்தபட்சம் ஒரு டஜன் குளிர்பான பாட்டில்கள் வாங்கி வைப்போம். அவர் பேச பேச உடம்பு சூடாகிறதாம்.

11. நாற்பத்து ஐந்தாவது சபைக்கு சென்றால் சகோதரனே எங்கள் பாஸ்டர் பிரசங்கத்தை கேட்டீர்களா என்றார்கள். ஆமா, என்ன? பிரசங்கத்தின் மத்தியில் அறிவிப்பு ஒன்று கொடுத்தாரே? மாடியில் ஓலைக் கொட்டகையில் உள்ள சபை கூடும் இடத்தை மாடியாக எழுப்ப ரூபாய் 5000/-, ரூ. 10000/- என தாராளமாக கொடுங்கள் என்றாரே. சகோதரனே பாருங்கள், இது அவருடைய சொந்த வீட்டு மாடி. மாடியில் கொட்டகைப் போட்டு சபை நடத்துகிறார் இப்பொழுது இந்த மாடியில் ஒரு கட்டிடம் எழுப்ப விரும்புகிறார். அதற்காகும் செலவை எங்களிடமிருந்து பிடுங்க தூண்டில் போடுகிறார். எங்கள் பணத்தைக்கொண்டு அவருக்கு ஒரு கட்டிடம் கட்டி அதற்கு தான் உரிமையாளராக விரும்புகிறார். இந்த சபையில் இப்படிப்பட்ட பணத்தேவை நாடகங்களை அவ்வப்போது அறங்கேற்றி வைப்பார். நாற்பத்து ஆறாவது சபைக்கு சென்றேன். அது புதிதாக ஆரம்பமானது. சபை பாஸ்டர், ஐயா, நான் இதற்கு முன் மற்றொரு சபையில் விசுவாசியாக இருந்தேன். இந்த ஊரிலிருந்து விசுவாசிகள் நிறைய பேர் அந்த சபைக்கு சென்றுவந்தோம். ஆதலால் அந்த சபை பாஸ்டர், இங்கு ஒரு புதிய சபை ஆரம்பித்து இதை தனது கிளைசபையாக வைத்துக்கொண்டு, என்னை அதற்கு பாஸ்டராக்கிவிட்டார். நான் சபை நடத்தி வருகிறேன் என்றார். ஒரு பாஸ்டர் மற்றொரு பாஸ்டரை நியமிக்கிறார். அப்படி நியமிக்கும் அளவுக்கு பாஸ்டர் உத்தியோகம் சீப்பான ஒரு ஊழியம் ஆகிவிட்டது. தேவனுடைய நியமிக்கும் ஸ்தானத்தை இந்த கள்ளகபடமுள்ள பாஸ்டர்கள் எடுத்துக்கொள்கிறார்கள். நாற்பத்து எழாவது சபைக்கு சென்றேன். வெளி 19 : 10 மற்றும் 22 :8 ல் யோவான், சகோ. வில்லியம் மாரியன் பிரன்காம் காலில் தான் விழுந்தார் என்று விசுவாசிக்கிறீர்களா, இல்லையென்றால் இங்கு உங்களுக்கு ஐக்கியம் இல்லை என்கிறார்கள். நாற்பத்து எட்டாவது சபைக்கு சென்றேன். பாஸ்டர், சகோதரனே சகோ. டால்டன் புரூஸ் மனுஷகுமாரன் என்று எங்களுக்கு இந்நாட்களில் ஒரு வெளிப்பாடு கிடைத்தது. உங்களுக்கு அதில் விசுவாசம் இருந்தால் மாத்திரம் எங்கள் சபைக்கு வாருங்கள் என்கிறார். நாற்பத்து ஒன்பதாவது சபைக்கு சென்றேன். சகோதரனே, தயவுசெய்து எங்கள் சபைக்கு வராதீர்கள். நீங்கள் வந்தால் இங்கு நடக்கும் தவறு மற்றும் முறைகேடுகளை உங்கள் அடுத்த இதழில் எழுதுவீர்கள். ஆதலால் தயவு செய்து இங்கு வரவே வராதீர்கள் என்கிறார்கள். ஐம்பதாவது சபைக்கு சென்றேன். சகோதரனே, நாங்கள் யாவரும் கிறிஸ்துவின் மணவாட்டி. நாங்கள் எந்த பாவம் செய்தாலும் சரி, அது எங்களுக்கு கிருபையினால் மன்னிக்கப்படுகிறது. எங்கள் சரீர பலவீனம் எல்லாம் தேவனுக்கு தெரியும். ஆதலால் நாங்கள் விபச்சாரம் செய்தாலும், பீடி சிகரெட் பிடித்தாலும், வேறுஎந்தவிதமான மாம்ச கிரியைகள் செய்தாலும், அதை தேவன் எங்களுக்கு மன்னிக்கிறார். உங்களுக்கு அதில் விசுவாசம் உண்டா? இல்லாவிட்டால் எங்களோடு ஐக்கியமில்லை என்கிறார்கள். ஐம்பத்து ஒன்றாவது சபைக்கு சென்றேன் சகோதரனே ஒருவன் கிறிஸ்துவுக்குள் மறுபடியும் பிறந்துவிட்டால், இனி அவன் தன் மனைவியுடன் மாம்ச உறவு கொள்ளக்கூடாது. தன் மனைவியை சகோதரிப்போல் கருதி, அவளை நேசிக்கவேண்டும். உங்களுக்கு உடன்பாடா என்கிறார். ஐம்பத்து இரண்டாவது சபைக்கு சென்றேன். பிரதர், கர்த்தர் எனக்கு தம்முடைய வருகைக்குறித்ததான வருடம், மாதம், வாரம், நாள், மணி, நிமிடம் போன்ற அனைத்து விபரங்களையும் வெளிப்படுத்திக்கொடுத்திருக்கிறார். மேலும் இதை யாரிடமும் கூறக்கூடாது எனவும் எனக்கு கட்டளையிட்டிருக்கிறார். ஆதலால் நான் இதை யாரிடமும் கூறமாட்டேன். நீங்கள் இது உண்மையென்று விசுவாசிக்கிறீர்களா என்கிறார்.

12. கள்ளச் சபைகளைப் பற்றி இதுவரை எழுதியது போதும் போதும் நிறுத்து, நிறுத்து. இவைகளைவிட்டு உன்னை வேறுபிரித்துக்கொள் என்கிறது என் உள்ளத்தின் ஆழத்தில் இருந்து ஒரு சத்தம். இந்த நிலையில் நான் எந்த சபைக்குப் போய் ஐக்கியம் கொள்வேன்? நான் ஆராதிக்கும் தேவன் உங்களில் இரண்டுபேர் தாங்கள் வேண்டிக்கொள்ளப்போகிற எந்தக் காரியத்தைக் குறித்தாகிலும் பூமியிலே ஒருமனப்பட்டிருந்தால், பரலோகத்தில் இருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும் என்று உங்களுக்குச் சொல்கிறேன். ஏனெனில், இரண்டு பேராவது மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்கிறார் (மத் 18 : 19,20) போதும், போதும் எனக்கு இந்த வாக்குத்தத்தம். நானும் என் குடும்பத்தினரும் அந்த வாக்குத்தத்தத்தை சார்ந்து அதில் நிலைத்திருக்கவே விரும்புகிறோம். எனது கண்ணோட்டத்தில் இக்காலத்திற்குரிய செய்தியில் உள்ள சபைகளில் ஒரு பாஸ்டரது ஊழியம் கூட வேதவாக்கியங்களின் அடிப்படையில் இல்லை. இப்படியிருக்க இவர்கள் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையை எப்படி பக்திவிருத்திக்குள் கொண்டுவர முடியும்? குருடர்கள் குருடர்களுக்கு வழிக்காட்டிக் கொண்டிருக்கிறார்கள். நான் மேற்கூறிய பண்புகளையுடைய விதவிதமான பாஸ்டர்கள் யாவரும்

கிறிஸ்துவுக்குள் அல்லாமல் சாத்தானுக்குள் இருந்து அவனுக்கு ஊழியம் செய்யும் கள்ளகபடமுள்ள வேலையாட்களாய் இருக்கிறார்கள். இவர்கள் உங்களை நித்தியத்திற்குள் வழி நடத்த முடியாது, ஒருகாலும் முடியாது . மாறாக அவர்கள் உங்களை மரணத்திற்கே வழிநடத்திக்கொண்டிருக்கிறார்கள் என உங்களை எச்சரிக்க வேண்டியது என் கடமையாயிருக்கிறது. என் எச்சரிப்புக்கு செவி கொடுப்பது, கொடாதிருப்பது உங்கள் கடமையாயிருக்கிறது.

13. ஏழாம் தூதனுடைய சத்தத்தின் நாட்களிலே அவன் எக்காளம் ஊதப்போகிறபோது தேவரகசியம் நிறைவேறும் (வெளி 10 : 6) நான் சகோ. வில்லியம் மாரியன் பிரன்காம் தான் லவோதிக்கேயா சபை தூதன் எனவும் அவர் ஒரு தீர்க்கதரிசியும் கூட என என் உள்ளத்தில் ஆழத்திலிருந்து நான் அவரை மாம்சத்தில் காணாவிட்டாலும் விசுவாசிக்கிறேன். அவருடைய அழைப்பு, ஊழியம், குணாதிசயங்கள் யாவும் வேதவாக்கியங்களோடு இசைந்து செல்வதை காண்கிறேன். இவருடைய ஊழியத்தை குறித்தும், **ஏதேன் தோட்டத்து இரகசியம்** குறித்தும் பலர் தங்கள் பத்திரிக்கைகளில் விமர்சனம் செய்தனர். அது அவர்கள் உரிமை. அவர்களில் சிலர் 1. டாக்டர். புஷ்பராஜ் (ஜாமக்காரன்) 2. சகோ. பால் வில்லியம் மற்றும் 3. டாக்டர். சாமுவேல் (வேதமே வெளிச்சம்) 4. சகோ. சாது செல்லப்பா (அக்கினி) 5. சகோ. M.S. டேனியல் (பாதைக்கு தீபம்) 6. சகோ. A. ஞானராஜ் (எச்சரிப்பின் சத்தம்) 7. சகோ. சாம்ஜெபத்துரை (அன்றன்றுள்ள அப்பம்) 8. சகோ. அருள்ராயன் S.J. (பாய்ஸ் டவுண், மதுரை) 9. சகோ. அகஸ்டின் ஜெபக்குமார். முதலாவது இவர்கள் அறிந்துக்கொள்ள வேண்டியது தேவரகசியங்களின் ஆவிக்குரிய விளக்கத்தை, ஞானஅர்த்தத்தை பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை பெற்றவர்கள் மாத்திரமே அறிந்து, புரிந்து கொள்ள முடியும். ஒரு முறை சீஷர்கள் இயேசுவிடம் ஏன் ஜனங்களிடம் உவமைகளாகப் பேசுகிறீர் என்று கேட்டார்கள். அதற்கு அவர் பரலோக ராஜ்யத்தின் இரகசியங்களை அறியும்படி உங்களுக்கு அருளப்பட்டது, மற்றவர்களுக்கோ அருளப்படவில்லை. அவர்கள் கண்டும் காணாதவர்களாயும், கேட்டும் கேளாதவர்களாகவும், உணர்ந்துக்கொள்ளாதவர்களாயும் இருக்கிறபடியினால் அவர்களுக்கு அவைகள் உவமையாய் சொல்லப்படுகிறது என்றார்.( மத் 13:10,11, லூக் 8 : 10) இந்த ஜனங்கள் தங்கள் கண்களினால் காணாமலும், தங்கள் காதுகளினால் கேளாமலும், தங்கள் இருதயத்தினால் உணர்ந்து குணப்படாமலும், நான் அவர்களை ஆரோக்கியமாக்காமலுமிருக்க நீ அவர்கள் இருதயத்தை கொழுத்ததாக்கி, அவர்கள் காதுகளை மந்தப்படுத்தி, அவர்கள் கண்களை மூடிப்போடு என்றார் (ஏசா 6 : 10) ஆம், பிரியமானவர்களே தேவனுடைய இராஜ்யத்தின் இரகசியங்களை அறிகிற அறிவு தேவனால் தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களுக்கு மட்டுமே உண்டாகிறது. அனைவருக்கும் அல்ல.

14. ஏழாம் சபை காலத்தூதன் தான் எப்பொழுதும் காணும் கர்த்தருடைய தூதனைக் குறித்து : அவன் ஒரு வளர்ந்த மனிதன், பலசாலி, இருநூறு பவுண்ட் எடையுள்ளவன், நீண்ட கைகளை உடையவன், வெள்ளை அங்கி தரித்திருந்தான், வெறும் காலில் காணப்பட்டான், அவனுடைய மயிர் கருமை நிறமுள்ளதாய் இருந்தது என வர்ணிக்கிறார் (The Angel of the Lord... I have always seen the same one. a tall man, strong, the size a 200 pound man, large arms, dressed in white robes, bare feet, dark hair.) தேவதூதனுடைய இந்த தோற்றமும், கிரியையும் வேதத்தில் கூறப்பட்டதிலிருந்து முற்றிலும் மாறுபட்டது என டாக்டர். புஷ்பராஜ் அவர்கள் **ஜாமக்காரன்** மே / ஜூன் 1990 ல் எழுதியிருந்தார்கள். நான் 29.06.1990 - ல் டாக்டர் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதி சகோ. பிரன்காம் கூறியபடி தேவதுதனுடைய தோற்றம் வேதவாக்கியங்களில் கூறப்பட்டிருப்பதற்கு மாறாக இருக்குமானால், கர்த்தருடைய தூதன் மற்றும் அவரது கிரியை குறித்து எனக்கு வேதவாக்கிய ஆதாரங்களுடன் எழுதுங்கள் என கேட்டிருந்தேன். அதற்கு 04.09.1990 ல் அவர்கள் தேவதூதனின் தோற்றத்தை வேதபுத்தகஅகராதியில் தேடினேன். தேவதூதன் கருப்பாக, வாட்டசாட்டமாக இருந்ததாக எழுதப்பட்டதை காணவில்லை. நான் அறியாத விஷயம் வேதத்தில் ஏராளம் உண்டு. உங்களுக்கு அப்படிப்பட்ட தோற்றத்துக்கு ஆதாரம் இருக்குமானால் தயவு செய்து எனக்கு எழுதி அறிவியுங்கள். தயவு செய்து எனக்காகவும் ஜெபியுங்கள். என் அனுபவம் மிக மிக குறைவு. நன்றி என எழுதியிருந்தார்கள். டாக்டர் அவர்கள் ஒன்றை தவறு என்று எழுதும் போது, பின் எது சரி என அவர்கள் எழுதி, தவறைத்திருந்த வேண்டும். அதுதான் ஒழுங்கு. இதை விட்டுவிட்டு ஒருவர் கூறும் ஒன்றை தவறு என எழுதி, பின் தன் அனுபவம் மிக மிக குறைவு என எழுதுவது பண்பு அல்ல . ஒருவன் தான் ஏதேனும் ஒன்றை அறிந்தவன் என்று எண்ணிக்கொள்வானால் ஒன்றையும் அறிய வேண்டிய பிரகாரமாக அவன் இன்னும் அறியவில்லை என 1 கொரி 8 : 2 கூறுகிறது.

15. அடுத்து **எச்சரிப்பின் சத்தம்** சகோ. A. ஞானராஜ் அவர்கள் தன் பத்திரிகை முழுவதமே **கர்த்தர் சொல்லுகிறார்** என பல காரியங்களை குறித்து எழுதி வருவார்கள். ஒரு முறை வி.பி. சிங் மத்தியில் மீண்டும் வெற்றி பெறுவார், அவரது அரசாங்கம் வரும் என கர்த்தர் சொல்லுகிறார் என தனது மே மாதம் 1991 வது இதழில் எழுதினார்கள். ஆனால் அது வெடிக்கவில்லை. புஸ்வானமாக போய்விட்டது. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம். இவரது காரியம் நாறிப்போய்விட்டது. காரணம் என்ன? கர்த்தர் சொல்லாத வார்த்தையை இவர் தனது துணிகரத்தினால் கூறினார் (உபா. 18 : 22) ஆதலால் நான் இவரது எழுத்துக்களை பொருட்படுத்துவது இல்லை, கண்டுகொள்வதும் இல்லை,

16. இதற்கு பின் Dr. John E. Douglas. Sr.,U.S.A. என்பவரை ஸ்தாபகராகவும், தலைவராகவும் கொண்ட உலக சுவிசேஷ ஊழியம் என்ற ஸ்தாபனத்தில் பாஸ்டராக பணிபுரியும் சகோ. M.S. டேனியல் அவர்கள் **பாதைக்கு தீபம்** என்ற தனது பத்திரிகையில் ஜூன் / ஜூலை 1983 இதழில் கீழ்கண்டவாறு என்னை விமர்சித்தார்கள் அவலட்சினமாக கட்டுகதைகளை பிரசுரித்து, அதினாலே வரும் ஆதாயத்தை கொண்டு,

தன்னுடைய பிழைப்புகளை நடத்திக்கொண்டும், அந்த கட்டுகதைகளினால் அநேக ஆத்மாக்களை கெடுத்துக்கொண்டும் இருக்கிறவர்களின் பிடியிலிருந்து இந்த மக்களை காப்பாற்றும்படி உண்மை, சத்தியத்தை எழுது, எழுது என்ற ஆவியானவருடைய ஏவுதலுக்கு கீழ்படிந்து இந்த பகுதியை எழுதினேன் எனக்கூறி **ஏதேன் தோட்டத்து இரகசியத்தை** விமர்சித்தார். வெளிநாட்டு ஸ்தாபனம் ஒன்றில் கூலிக்கு மாரடிக்கும் மாம்சத்தின் வழி பிறந்த இவர் ஆவியின் வழி பிறந்தவனை அன்று போல் இன்றும் துஷித்ததில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை.

17. மேலும் பாஸ்டர் டேனியல் அவர்கள் இந்த அருவருப்பான நாற்றம் பிடித்த போதனைகளை குழிதோண்டி புதைத்து அதை பூமியில் இராதபடி அழிப்போம் என போர் முழக்கம் தொடுத்தார். முடிவு? எந்த வேகத்தில் எழும்பினாரோ, அதே வேகத்தில் படுத்துவிட்டார். காரணம்? இவர் என்னோடே அல்ல, தேவனோடே போர் செய்கிறவராக காணப்பட்டார். **சர்ப்பத்தின் வித்து குறித்த போதனை மனுஷருடைய யோசனையின் படியானது அல்ல. அது தேவனால் உண்டானது. ஆதலால் அதை ஒழித்துக்கட்ட ஒருவனாலும் கூடாது.** இந்த போதகத்துக்கு சாட்சியாக அற்புதங்களும் அடையாளங்களும் சகோ. பிரன்காம் கைகளினால் செய்யப்படும்படிக்கு தேவன் அநுக்கிகரம் பண்ணினார் (அப் 14 : 3) நான் அவலட்சனமான கட்டுக்கதைகளை பிரசுரித்து, அதினால் வரும் ஆதாயத்தை கொண்டு என்னுடைய பிழைப்பை நடத்திவருகிறேன் என்று ஆவியானவர் சகோ. M.S. டேனியல் அவர்களிடம் கூறினாராம். இதை நிருபிக்க அவர் முன்வர வேண்டும். இல்லாவிட்டால் இவர் தன்னுடைய பிதாவாகிய பிசாசானவனால் உண்டானவர். இவரை போன்று நவம்பர் 2009 ல் கூட ஒரு சகோதரன் எனக்கு போன் பண்ணினார். அவர் பெயர், விலாசம் கேட்டேன். கொடுக்கவில்லை.

18. கிறிஸ்துவுக்குள் எனக்கு பிரியமான டாக்டர் S. சாமுவேல், ஆசிரியர் D. பால் வில்லியம், மதுரை கத்தோலிக்க திருச்சபை பாதிரியார் அருள் ராயன். S.J. போன்றவர்கள் பல காரியங்கள் குறித்து விளக்கம் கேட்டு எழுதியிருந்தார்கள். வரவேற்கத்தக்கதாக இருந்தது. எனது மதிப்பிற்குரிய டாக்டர் அவர்களும், ஆசிரியர் அவர்களும் பிதா ஒன்றான மெய்த்தேவன் என்றும், குமாரன் தேவனால் அனுப்பப்பட்ட மேசியாவாகிய இயேசு கிறிஸ்து என்றும், பரிசுத்த ஆவி தேவனால் நமக்கு அருளப்பட்ட உன்னத பெலன் (Divine power) எனவும் விசுவாசிக்கிறார்கள் / உபதேசிக்கிறார்கள். திரித்துவக்காரர்களை போன்று மூவரில் ஒருவர் ஒருவரில் மூவர் என்ற குருட்டு விசுவாசம் இவர்களிடம் கிடையாது. தேவத்துவம் குறித்து மேலும் இவர்களது உபதேசம் என்னவென்றால் : பிதாவும் குமாரனும் இருவர். பிதா - ஏவுதற்கர்த்தர். குமாரன் - இயற்றுதற்கர்த்தர் என்பதாகும். ஆனால் பரிசுத்த வேதாகமத்தில் எங்கும் ஏவுதற்கர்த்தர், இயற்றுதற்கர்த்தர் என்று இரு கர்த்தர்களை குறித்த உபதேசம் காணப்படவேயில்லை.

19. இயேசு : நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம் என்கிறார் (யோ 10 :30) பிதா என்னிலும் நான் அவரிலும் இருக்கிறதை விசுவாசியுங்கள் / நம்புங்கள் என்கிறார் (யோ 10 : 38, 14 : 10, 11) என்னை (இயேசு) அறிந்தீர்களானால் என் பிதாவையும் அறிந்திருப்பீர்கள். இது முதல் அவரை அறிந்தும் கண்டும் இருக்கிறீர்கள் என்கிறார் (யோ 14:7) என்னை கண்டவன் பிதாவை கண்டான். இப்படியிருக்க பிதாவை நான் உங்களுக்கு எப்படி காண்பிக்க முடியும் என்கிறார். (யோ 14 : 8) என்னை (இயேசு) பகைக்கிறவன் என் பிதாவையும் பகைக்கிறான் என்கிறார் (யோ. 15:23) பிதாவும் குமாரனும் ஒருவராயிருக்க, டாக்டரும் ஆசிரியரும் இவர்கள் இருவர் என்கிறார்கள் . பாருங்கள் தேவனால் உண்டானவன் தேவனுடைய வசனங்களுக்கு செவிகொடுக்கிறான். இவர்கள் தேவானால் உண்டாயிராதபடியினால் செவிகொடாமலிருக்கிறார்கள் (யோ 8 : 47)

20. மேலும் நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர் (மாற். 12 : 29) என்றே வேதவாக்கியங்களில் காண்கிறோம். இரு கர்த்தர் என்ற உபதேசங்களுக்கு வேதவாக்கியங்களில் இடமே இல்லை. இந்த கர்த்தர் தான் இயேசு கிறிஸ்து என அப்போஸ்தலர்கள் பிரசங்கித்தார்கள் (2கொரி 4 : 5) ஒருவரேயன்றி வேறொரு தேவன் இல்லை (1கொரி 8 : 4) ஆதலால் டாக்டர் மற்றும் ஆசிரியர் இருவரின் உபதேசம் / ஞானம் பரத்திலிருந்து இறங்கிவரவில்லை, தேவத்துவத்தை குறித்த வேதவெளிச்சம் இவர்களுக்கு இல்லை என்பது அதிநிச்சயம்

21. மேலும் இங்கு தேவத்துவம் குறித்து ஒரு விளக்கம் / எடுத்துக்காட்டு எழுத விரும்புகிறேன். இது திரித்துவக்காரர்களுக்கும் இருத்துவக்காரர்களுக்கும் பிரயோஜனமாக இருக்கும் என நினைக்கிறேன். சர்ப்பமானது தன்னுடைய தந்திரத்தினாலே ஏவாளை வஞ்சித்தது போல உங்கள் மனதும் கிறிஸ்துவை பற்றிய உண்மையினின்று விலகும்படி கெடுக்கப்படுமோ என்று பயப்பட்ட (2 கொரி 11 : 3) தேவனுடைய சித்தத்தினாலே இயேசு கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலனாகிய பவுல் கிறிஸ்துவைப்பற்றி கூறுவதை காண்போம் (எபே 1 : 1) பாருங்கள் இவன் தன்னை தானே அப்போஸ்தலனாக்கி கொண்டவன் அல்ல. எந்த ஒரு ஸ்தாபனத்தாலும் அப்போஸ்தலனாக நியமிக்கப்பட்டவன் அல்ல. எந்த ஒரு பெரிய மனிதனாலும் அப்போஸ்தலனாக ஏற்படுத்தப்பட்டவனும் அல்ல. மாறாக தேவனுடைய சித்தத்தினாலே இயேசு கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலனானவன். தெரிந்துக்கொள்ளப்பட்டவன். இயேசு நீங்கள் என்னை தெரிந்துக்கொள்ள வில்லை, நான் உங்களை தெரிந்துக்கொண்டேன் என்கிறார். (யோ 15 : 16) ஏன் நமது மத்தியில் பல குழப்பங்கள், உபதேசங்கள், போதனைகள்? கள்ளகபடமுள்ள வேலையாட்கள் நம் மத்தியில் எங்கும் பரவி உள்ளனர். இவர்கள் ஒளியின் தூதனுடைய வேஷத்தை தரித்தவர்கள். தங்களை தாங்களே

தீர்க்கதரிசிகளாகவும், அப்போஸ்தலர்களாகவும், சுவிசேஷகர்களாகவும், மேய்ப்பர்களாகவும், போதகர்களாகவும் ஏற்படுத்திக்கொண்டவர்கள் அல்லது ஒரு ஸ்தாபனத்தினால் நியமிக்கப்பட்டவர்கள். இவர்களால் தான் எங்கும் எதிலும் குழப்பம். ஒன்றில் மூன்று, மூன்றில் ஒன்று என்பதே ஒரு குழப்பம் தானே? நமது தேவன் குழப்பத்தின் தேவன் அல்ல

22. கிறிஸ்துவை பற்றி அப்போஸ்தலனாகிய பவுல் என்ன கூறுகிறான்? நமக்கு ஸ்தாபனசபைகள் என்ன கூறுகிறது என்பது தேவையில்லை. மற்றும் தனிப்பட்ட முறையில் ஊழியம் செய்யும் ஊழியக்காரர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதும் தேவையில்லை. தேவனுடைய சித்தத்தினாலே இயேசு கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலனாகிய பவுல் என்ன கூறுகிறான் என்பதே காரியம். அவன் கூறுவதை கவனிப்போம். ஏனென்றால் இவனால் பிரசங்கிக்கப்பட்ட சுவிசேஷம் மனுஷருடைய யோசனையின்படியானதல்ல. அதை ஒரு மனுஷனால் அவன் பெற்றதும் இல்லை. ஒரு மனுஷனிடமிருந்து அவன் கற்றதும் இல்லை. வேதாகம கல்லூரிக்கு சென்று பயின்று வந்ததும் இல்லை. வேதபண்டிதர்களிடம் சென்று பயின்றதும் இல்லை மாறாக இயேசு கிறிஸ்து தாமே அவருடைய சுவிசேஷத்தை, அவரைக் குறித்த வெளிப்பாட்டை அவனுக்கு கொடுத்தார் (கலா 1 : 11, 12)

23. பாருங்கள் மோசே தான் பெரியவனானபோது, பார்வோனுடைய குமாரத்தியின் மகன் என்னப்படுவதை வெறுத்து, அநித்தியமான பாவசந்தோஷங்களை அநுபவிப்பதைப் பார்க்கிலும் தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அநுபவிப்பதையே தெரிந்துக்கொண்டு, இனி வரும் பலன் மேல் நோக்கமாயிருந்து, எகிப்திலுள்ள பொக்கிஷங்களிலும் கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தையை அதிக பாக்கியமென்று எண்ணினான் (எபி 11 : 24-26) ஆம் மோசே தனக்கு எகிப்திலுள்ள மதிப்பு, மரியாதை, கௌரவம், செல்வம், சீர்சிறப்பு அனைத்தைக் காட்டிலும் கிறிஸ்துவின் நிமித்தம், அதாவது தன்னை இஸ்ரவேல் ஜனங்களை வழிநடத்த தெரிந்துக்கொண்டவரின் நிமித்தம், தன்னை கடினமான ஒரு ஊழியத்திற்கு அழைத்தவர் நிமித்தம் வரும் நிந்தையை அதிக பாக்கியம் என்று எண்ணினான். அவன் அரசியல்வாதிகளின் நிமித்தம், வேதபாண்டித்தியம் உடையவர்களின் நிமித்தம் வரும் மேன்மையை நாடவில்லை. மாறாக கிறிஸ்துவின் நிமித்தம் வரும் நிந்தையை அதிக பாக்கியம் என்று எண்ணினான். அப்படியானால் மோசேயை அழைத்த இந்த கிறிஸ்து யார் என்று வேதவாக்கியங்களை கொண்டே நாம் தியானிப்போம். பாருங்கள் தேவபர்வதமாகிய ஓரேப்பில் ஒரு முட்செடியின் நடுவில் இருந்து உண்டான அக்கினி ஜுவாலையிலே **தேவன்** மோசேக்கு தரிசனமானார் (யாத் 3 : 4) மோசேக்கு தரிசனமான இவர் **1. கர்த்தருடைய தூதன்** என்றும் (யாத் 3 : 2) 2. **கர்த்தர்** என்றும் (யாத் 3 : 4) 3. **தேவன்** என்றும் (யாத் 3 : 4) அழைக்கப்படுகிறார்.

24. மற்றொரு சம்பவத்தையும் பார்ப்போம். எதுவும் இரண்டு மூன்று சாட்சிகளால் உறுதிப்படுத்தப்படவேண்டும். இஸ்ரவேல் ஜனங்கள் **தேவனுக்கும் மோசேக்கும்** விரோதமாக பேசினார்கள். **கர்த்தர்** கொள்ளிவாய்ச் சர்ப்பங்களை அனுப்பினார். அது ஜனங்களை கடித்தது. அநேக ஜனங்கள் செத்தார்கள் (எண் 21 : 6) இந்த சம்பவத்தின் வெளிப்பாட்டை பெற்ற அப்.பவுல் இஸ்ரவேல் ஜனங்கள் **கிறிஸ்துவை** பரிட்சைப்பார்த்து பாம்புகளால் அழிக்கப்பட்டார்கள் என்கிறான். (1கொரி 10 : 9-11)

25. இப்பொழுது நன்கு கவனியுங்கள் **தேவன்** தன்னை மோசேயிடம் : நான் ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவனும் யாக்கோபின் தேவனுமாகிய உன் பிதாக்களுடைய தேவனாயிருக்கிறேன் என்றார் (யாத் 3 : 6) மோசே அவரை நோக்கி : நான் இஸ்ரவேல் ஜனங்களிடம் உங்கள் பிதாக்களுடைய தேவன் என்னை உங்களிடம் அனுப்பினார் என்று கூறும் போது, அவர்கள் உம்முடைய நாமத்தை கேட்பார்களே என்றான் (யாத் 3 : 13) அதற்கு தேவன் : **இருக்கிறவராக இருக்கிறேன் என்னும் இருக்கிறேன் என்பவர்** உன்னை அனுப்பினதாக கூறு என்றார் (யாத் 3 : 14) **இதை உறுதிப்படுத்த பவுல் இயேசு கிறிஸ்து நேற்றும், இன்றும், என்றும் மாறாதவராய் இருக்கிறார் என்றான்.** (எபி 13 : 8) **இயேசுவும் இரண்டு பேராவது மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே நான் இருக்கிறேன்** என்கிறார் (மத் 18 : 20)

**26. ஆக கிறிஸ்து : 1. கர்த்தருடைய தூதன் 2. கர்த்தர் 3. தேவன் 4. ஆபிரகாமின், ஈசாக்கின், யாக்கோபின் தேவன் 5. இருக்கிறவராக இருக்கிறேன் என்னும் இருக்கிறேன் என்பவர் என அழைக்கப்படுகிறார். அப்படியானால் கர்த்தர் யார் ? தேவன் யார்? இருவரா? இல்லை. மாறாக, கர்த்தரே தேவன் என்று அறியுங்கள். நாம் அவர் மேய்ச்சலின் ஆடுகளாக இருக்கிறோம் ( சங் 100 : 3). இயேசு : நானே நல்ல மேய்ப்பன். நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காக தன் ஜீவனை கொடுக்கிறேன் என்கிறார் (யோ 10 : 11). நாங்கள் கர்த்தரையே சேவிப்போம். அவரே நம்முடைய தேவன் (யோசு 24 : 18). தங்களை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப் பண்ணின நான் தங்கள் தேவனாகிய கர்த்தர் என்று இஸ்ரவேல் புத்திரர் அறியுங்கள். நானே அவர்கள் தேவனாகிய கர்த்தர் (யாத் 19 : 46). என் மந்தையும் என் மேச்சலின் ஆடுகளுமாகிய நீங்கள் மனுஷர், நான் உங்கள் தேவன் என்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார் (எசே 34 : 31)**

**27. இப்பொழுது கவனியுங்கள். இயேசுவே கிறிஸ்து என்று அப்போஸ்தலர்கள் உபதேசித்தார்கள். (அப் 5 : 42) கிறிஸ்து இயேசுவே கர்த்தர் என்றும் உபதேசித்தார்கள் (2 கொரி 4 : 5). அப்போஸ்தலர்கள் தினந்தோறும் தேவாலயத்திலேயும், வீடுகளிலேயும் இடைவிடாமல் உபதேசம் பண்ணி, இயேசுவே கிறிஸ்து என்று பிரசங்கித்தார்கள். நாங்கள் எங்களையே பிரசங்கியாமல், கிறிஸ்து இயேசுவே கர்த்தர் என்றும், எங்களையோ இயேசுவின் நிமித்தம் உங்கள் ஊழியக்காரர் என்றும் பிரசங்கிறோம்**

**என்றார்கள். ஆம், அப்போஸ்தலர்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே நம்முடைய தேவனாகிய கர்த்தர், பழைய ஏற்பாட்டின் யேகோவா புதிய ஏற்பாட்டின் இயேசு கிறிஸ்து என உபதேசித்தார்கள். இந்த அப்போஸ்தல உபதேசத்தையே சகோ. பிரன்காம் உபதேசித்தார். நானும் உபதேசிக்கிறேன்.** ஏனென்றால் வேறொரு சுவிசேஷம் இல்லையே. ஸ்தாபன சபைகள், அதன் ஊழியக்காரர்கள் உங்களை கலகப்படுத்தி, கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தை புரட்ட மனதாய் இருக்கிறார்களேயல்லாமல் வேறல்ல. அப்போஸ்தலர்கள் நமக்கு பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாமல், அவர்களாவது, நாங்களாவது, வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது, ஸ்தாபன சபை ஊழியக்காரனாவது வேறொரு சுவிசேஷத்தை பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்டவன் எனக்கூறுவதை வேதவாக்கியங்களில் தியானிக்கிறோம் (கலா 1 : 7 - 12)

28. இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தையும், தேவன் தன் சுய இரத்தத்தினால் சம்பாதித்த தேவனுடைய சபைக்கு நிருபங்களையும், இயேசு கிறிஸ்துவைப் பற்றிய வெளிப்பாட்டையும் பெற்று நமக்கு எழுதிய, கிறிஸ்துவுக்கு அன்பாய் இருந்தவனும், அவர் மார்பில் சாய்ந்திருந்தவனுமாகிய யோவான் : இயேசு கிறிஸ்துவே மெய்யான தேவனும் நித்திய ஜீவனுமாயிருக்கிறார் என்கிறான் (1 யோ 5 : 20) பரலோகஇராஜ்யத்தின் திறவுகோல்களை பெற்றவனுமாகிய பேதுரு (மத் 16 : 19) தேவனும் இரட்சகருமாயிருக்கிற இயேசு கிறிஸ்து (2 பேதுரு 1 : 1) கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்து (2 பேதுரு 1 : 11) என அறிக்கையிடுகிறான்.

29. இந்த கர்த்தராகிய கிறிஸ்து தாவீதின் ஊரில் பிறந்தார் (லூக் 2 : 11). ஆம் தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார் (1 தீமோ 3 : 16) இவருக்கு இயேசு என்று பெயரிட்டார்கள் (மத் 1 : 25). கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என அழைக்கப்பட்டார். இவருக்குள் தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக வாசமாயிருக்கிறது (கொலோ 2 : 9) இவர் 1/3 தேவன் அல்ல. 1/2 தேவன் அல்ல மாறாக இவர் முழு தேவன். **தேவத்துவத்தை மூவராக, இருவராக பிரிப்பவர்கள் கள்ளகபடமுள்ள வேலையாட்களே. இப்படியிருக்க இவர்களுக்கு தேவன் தம்முடைய இரகசியத்தை எப்படி வெளிப்படுத்த முடியும்? ஒரு காலும் கூடாது.** இவர்கள் மூன்று, இரண்டு என்று கூறிக்கொண்டு, அநேக ஆத்துமாக்களை படுகுழிக்குள் தள்ளிக்கொண்டுவருகிறார்கள். அவர்கள், அவர்கள் பணியை செய்துக்கொண்டு வருகிறார்கள். தேவன் அதை அனுமதிக்கிறார். காரியங்கள் இப்படியிருக்க இவர்களுக்கு ஏதேன் தோட்டத்து இரகசியம் ஒரு காலும் புரியவே புரியாது.

30. அடுத்து தேவனுடைய வார்த்தையில் வெளி. 17 வது அதிகாரத்தில் **மகாவேசி என்று அழைக்கப்படும் கத்தோலிக்க திருச்சபையின்** உபதேசங்களில் நிலைத்து நிற்கும் பாதிரியார் அவர்கள் தேவனுடைய சத்தியத்தை பொய்யாக மாற்றி, சிருஷ்டிகரை (கர்த்தராகிய இயேசு கிறிஸ்து - உலகத்தில் இருந்தார், உலகம் அவரால் உண்டாயிற்று, உலகமோ அவரை அறியவில்லை. யோ 1 : 10 நாம் தேவனுடைய பிள்ளைகளேயன்று அழைக்கபடுவதினாலே பிதாவானர் நமக்கு பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள். உலகம் அவரை அறியாததினாலே நம்மையும் அறியவில்லை 1யோ3 : 1 பாருங்கள் பிதாவும் குமாரனும் ஒருவர். ஒரே நபரின் இரு உத்தியோகங்கள். மேலும் தியானியுங்கள் ஏசா 45 : 12, 2 இரா 19 : 15) தொழுதுகொள்ளாமல், சிருஷ்டியை (மரியாளை) தொழுது, சேவித்து, மரியாளே வாழ்க என கோஷம் போட்டு, விக்கிரங்களை உண்டு பண்ணி அவைகளை நமஸ்கரிக்கவும், தொழுதுகொள்ளவும் தேவன் இவரை கேடான சிந்தனைக்கு ஒப்புக்கொடுத்திருக்கும் போது, தேவரகசியங்கள் இவர்களுக்கு எப்படி வெளிப்படும்? மகா வேசிமார்க்கத்தை விட்டு அவர்கள் வெளியே வரவேண்டுமே. மேலும் கர்த்தருக்கு அருவருப்பான காரியமாகிய தொழிலாளிகளுடைய கைவேலையால் செய்யப்பட்டதும், வார்ப்பிக்கப்பட்டதுமான யாதொரு விக்கிரகத்தை உண்டுபண்ணி ஒளிப்பிடத்திலே வைக்கிறவன் சபிக்கப்பட்டவன் (உபா 27 : 15) விக்கிரகாராதனைக்காரர்கள் தேவனுடைய இராஜ்யத்தை சுதந்தரிப்பதில்லை (1கொரி 6 : 9, 10)

31. இவர்கள், நாம் பல கட்டைகளை ஒன்று சேர்த்து, அதை ஒரு கட்டாக கட்டு என்று கூறுவது போன்று மூன்று தேவர்களை சேர்த்து ஒரு கட்டாக கட்டி, திரியேக தேவன் எனக் கூறி மறைமுகமாக விக்கிரக ஆராதனை செய்து வருகிறார்கள். தேவன் தம்முடைய அறுப்பு காலத்தில் ஸ்தாபன திரித்துவ சபைகளாகிய CS.I., T.P.M. A.G., C.G., E.C.I., Baptist, Luthern, போன்ற ஆயிரத்திற்கும் மேற்பட்ட சபைகளை ஒரு கட்டாக கட்டி, அதை அக்கினியினால் சுட்டெரிப்பார். திரியேக தேவன் என்ற களை சுட்டெரிக்கப்படும். **ஸ்தாபன சபைகள் ஒரு போதும் தேவனால் நியமிக்கப்படவில்லை. அது பிசாசினால் நியமிக்கப்பட்டது. ஸ்தாபனசபைகள் மூலமாகவே தவறுகள் / குழப்பங்கள் சபைக்குள் நுழைக்கின்றன. ஏனென்றால் அவைகள் முரண்பாட்டின் வித்துக்கள். ஸ்தாபனசபைகளின் திட்டங்கள் என்ன? நீங்கள் தவறான வழியில் செல்வதற்கான திட்டங்கள். சத்தியத்தை நீங்கள் காணாதவாறு செய்ய அவர்கள் எல்லா உபாயத்திட்டங்களையும், தந்திரங்களையும் கையாளுகிறார்கள். ஆனால் பிரியமானவர்களே நாங்களோ ஒருவரேயன்றி வேறொரு தேவன் இல்லை என்று அறிந்து விசுவாசிக்கிறோம் / போதிக்கிறோம் (1கொரி 8 : 4) அவர் நாமம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து.**

32. மேற்கூறிய ஞானிகளுக்கும், கல்விமான்களுக்கும் தேவன் தம்மை சவுலுக்கு (பவுல்) வெளிப்படுத்தினது போல வெளிப்படுத்தாத நிலையில், இவர்கள் தங்கள் பாவ மன்னிப்புகென்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெறாத நிலையில், இவர்கள் ஸ்தாபன திரித்துவ சபைகளை விட்டு வெளியே வராத நிலையில், மகாவேசியும் அவளுடைய குமாரத்திகளுமாகிய திரித்துவ ஸ்தாபன சபைகளை விட்டு வெளியே வந்து கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்துக்குள்ளாக ஞானஸ்நானம்

பண்ணப்படாத நிலையில், இவர்கள் எப்படி ஏதேன் தோட்டத்து ரகசியங்களை அறிந்துக்கொள்ளமுடியும்? பாருங்கள் இவர்கள் தேவனை அறியாத நிலையில், தேவனுடைய ஆவியை பெறாத நிலையில் தேவனுக்குரியவைகளை எப்படி அறிந்துக்கொள்ள முடியும்? முடியாது ! ஆக திரித்துவ, இருத்துவ வழிப்பாட்டுக்காரர்கள் ஒருக்காலும் தேவனுடைய இராஜ்யத்திற்குரிய இரகசியங்களை அறிந்துக்கொள்ள முடியாது. இது நூறு சதவீதம் உண்மை. ஏனென்றால் திரித்துவம், இருத்துவம் வேதவாக்கியங்களில் எங்கும் கணப்படாத ஒரு உபதேசம். இது பவுல் பிரசங்கியாத வேறொரு சுவிசேஷம். இதை உபதேசிப்பவர்கள், விசுவாசிப்பவர்கள் தங்களுக்கு அழிவை தேடிக்கொண்டு வருகிறார்கள் . இவர்கள் படுகுழியில் விழுவதோடு மட்டுமல்ல பிறரையும் படுகுழிக்குள் தள்ளுகிறார்கள். குருடனுக்கு குருடர்கள் வழிக்காட்டக் கூடுமோ? இருவரும் பள்ளத்திலே விழுவார்கள் அல்லவா?. ஆம், அது தான் அவர்களின் முடிவு (லூக் 6 : 39)

33. பிரியமானவர்களே, நான் இவ்வாறு எழுதுவது கொஞ்சம் கடினமாகத்தான் / கடுமையாகத்தான் இருக்கிறது. ஆனால் என்னுடைய கடிந்துக்கொள்ளுதல் உங்கள் ஆத்துமாவுக்கு பிரயோஜனமாய் இருக்கும் என கிறிஸ்துவுக்குள் நம்புகிறேன். தேவன் ஒருவர். அவர் நாமம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து. அவரே ஒன்றான மெய்த்தேவன் என்கிற அறிவுக்குள் நீங்கள் வரும் போது தான், அந்த விசுவாசத்திற்குள் நீங்கள் நிலைக்கொள்ளும் போது தான், மனந்திரும்பி பாவமன்னிப்புக்கொன்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெறும்போது தான் கர்த்தர் உங்களோடு இடைபட ஆரம்பிப்பார். தேவன் தமக்குரியவைகளை உங்களுக்கு வெளிப்படுத்துவார். நீங்கள் அவரை தரித்துக் கொள்ளாமல் ஒன்றையும் அவரிடமிருந்து பெற்றுக் கொள்ளமுடியாது. நீங்கள் முதலாவது தேவனை அறிந்து, அவரை விசுவாசித்து, அவரோடு ஐக்கியம் கொள்ள வேண்டும். பின் அவர் தம்முடையவைகளை, தம்மை உங்களுக்கு வெளிப்படுத்துவார்.

**34. நீங்கள் இயேசு கிறிஸ்துவின் நாமத்தை உபயோகித்து ஞானஸ்நானம் பெறவில்லை என்றால், பிதாகுமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெறவில்லை என்று பொருள். பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினால் மட்டும் ஞானஸ்நானம் பெற்றிருப்பீர்களானால் அது, நீங்கள் ஒரு நாமத்திற்குரிய பட்டப்பெயரினால் ஞானஸ்நானம் பெற்றுள்ளீர்கள் என பொருள். இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெறுவது சரியில்ல என்றல் வேதமானது தவறாய் இருக்கவேண்டும். ஏனென்றால் வேதத்தில் ஞானஸ்நானம் பெற்றவர்கள் அனைவரும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுள்ளார்கள். இயேசு கிறிஸ்து பிதாகுமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினால் ஞானஸ்நானம் கொடுக்க கட்டளையிட்ட பின்பு ஒவ்வொரு அப்போஸ்தலரும் தங்கள் காலம் முழுவதும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் கொடுத்தார்கள். வேதவாக்கியங்கள் தன்னில் தானே முரண்பாடா? இல்லை. திரித்துவ ஸ்தாபன சபைகளே முரண்பாட்டின் வித்து. இயேசு கிறிஸ்து எதை சொன்னாரோ அதையே அப்போஸ்தலர்கள் செய்தார்கள். பட்டப்பெயரில் அவர்கள் ஞானஸ்நானம் கொடுக்கவில்லை. மாறாக பட்டபெயருக்குரிய நாமத்தினால் ஞானஸ்நானம் கொடுத்தார்கள். அது தான் உண்மை.**

35. பாருங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்னும் இரட்சகர் தாவிதின் ஊரிலே பிறந்திருக்கிறார் (லூக் 2 : 11) இவருக்கு இயேசு என்று பேரிட்டார்கள் (லூக் 2 :21) இயேசுவானவர் ஞானத்திலும், வளர்த்தியிலும், தேவகிருபையிலும், மனுஷர் தயவிலும் அதிக அதிகமாய் விருத்தியடைந்தார் (லூக் 2 : 52) பின் கல்வாரியில் மாம்த்தில் வெளிப்பட்டத்தின் நோக்கத்தை நிறைவேற்றி மரித்தார். பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன் என்று மகா சத்தமாய் கூப்பிட்டுச்சொல்லி, ஜீவனை விட்டார் (லூக் 23 : 46) எதற்காக? தம்முடைய மணவாட்டியை வெளிப்படுத்த. எப்படி? இயேசு கிறிஸ்து கல்வாரியில் மரிக்கும் வரைக்கும், அவருடைய மணவாட்டி அவருடைய சரீரத்திலிருந்து வெளியே எடுக்கப்படவில்லை. ஏனென்றால் இயேசு கிறிஸ்து தமது சரீர மரணத்தின் மூலம் தம்முடைய மணவாட்டியை மீட்க வேண்டும் (எபி 2 : 14, 15. ரோ 5: 10). இயேசு மரித்திருப்பதை கண்டு போர்ச் சேவகர்களில் ஒருவன் ஈட்டியால் அவருடைய விலாவில் குத்தினான். உடனே இரத்தமும், தண்ணீரும் புறப்பட்டது (யோ 19 : 33, 34 ) பாருங்கள் அவருடைய மணவாட்டி வெளிப்பட்டாள். எப்படியெனில் குழந்தை பிறப்பில் முதலில் இரத்தமும் பின் தண்ணீரும் வெளிப்படுவது உங்களுக்கு தெரியும். அவ்வாறாகவே கிறிஸ்துவின் மணவாட்டி பிறப்பிலும் கிறிஸ்துவின் சரீரத்திலிருந்து இரத்தமும், தண்ணீரும் வெளிப்பட்டது. இப்பொழுது முந்தின மனுஷனாகிய ஆதாமை கவனியுங்கள். ஆதாமின் விலா திறக்கப்பட்டது. அவன் விலா எலும்புகளில் ஒன்று எடுக்கப்பட்டது. அதினின்று அவன் மணவாட்டியாகிய ஏவாள் உருவாக்கப்பட்டாள் (ஆதி 2 : 21-24). ஆதாமின் விலா எலும்பு ஒன்றிலிருந்து ஏவாள் உருவாக்கப்பட்டாள். ஏனென்றால் அவள் அவன் இருதயத்திற்கு மிக்க நெருக்கமாக இருக்க வேண்டியவள் என்பதற்காக. ஆக முந்தின மற்றும் பிந்தின மனுஷனாகிய ஆதாம் மற்றும் கர்த்தர் தங்கள் விலாவிலிருந்து அவர்களது மணவாட்டியை வெளியே கொண்டு வந்தார்கள்.

36. இப்பொழுது நடந்ததை கவனியுங்கள். இயேசு கிறிஸ்துவின் விலாவிலிருந்து வெளிப்பட்டவர்கள் காலம் நிறைவேறின போது ஒரு ஸ்திரீயின் வயிற்றிலிருந்து பிறந்தார்கள், வளர்ந்தார்கள். ஏற்ற வேளையில் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை கேட்டார்கள். அதை விசுவாசித்தார்கள். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தங்கள் பாவங்களுக்காக மரித்தார், அடக்கம் பண்ணப்பட்டார், மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார் என்று விசுவாசித்தார்கள் (1 கொரி 15 : 1-4) கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறவன் எவனே அவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினாலே பாவமன்னிப்பை பெறுவான் (அப் 10 : 43) என்ற தீர்க்கதரிசிகளின் சாட்சிக்கு இசைவாக, தங்கள் பாவமன்னிப்புக்கு கர்த்தராகிய இயேசு கிறிஸ்து

நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றார்கள் (அப் 2 : 38) கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதன் மூலம் கிறிஸ்துவோடு கூட மரித்து அவரோடு கூட அடக்கம் பண்ணப்பட்டு, உயிர்த்தெழுந்தார்கள். கிறிஸ்துவை தரித்துக்கொண்டார்கள் (கலா 3 : 27) இவர்கள் தான் தேவன் தம்முடைய சுய இரத்தத்தினால் சம்பாத்தித்த சபை (அப் 20 : 28) இவர்கள்தான் கிறிஸ்துவின் சரீரமாகிய சபை. இந்த சபைக்கு தான் தேவன் தம்முடைய இரகசியங்களை வெளிப்படுத்துகிறார். மணவாளன் தம்முடைய மணவாட்டிக்கு தம்முடைய ரகசியங்களை வெளிப்படுத்துகிறார். மாறாக C.S.I., T.P.M., A.G., C.G., E.C.I. Baptist, Luthern, போன்ற ஸ்தாபன சபைகளை சார்ந்தவர்கள் தேவனுடைய வெளிப்பாடுகளை பெற முடியாது. ஏனென்றால் அவர்கள் அவருடைய சரீரத்தின் அவயவங்கள் அல்ல. ஆதலால் தான் நான் முன்பு எழுதிய அனைவரும் ஏதேன் தோட்டத்து இரகசியத்தை அறிந்துக்கொள்ள, புரிந்துக்கொள்ள, கிரகிக்க முடியவில்லை.

37. அன்று கர்த்தர் மோசேயைக் கொண்டு இஸ்ரவேல் ஜனங்களை எகிப்து தேசத்திலிருந்து புறப்பட பண்ணினார். அவர்கள் ஒரு தீர்க்கதரிசியினால் காக்கப்பட்டார்கள். (ஓசி. 12 : 13) இன்று கர்த்தர் சகோ. வில்லியம் மாரியன் பிரன்காம் மூலம் இக்காலத்திற்குரிய செய்தியைக் கொண்டு தம்முடைய சிறு மந்தையை, உலகப்பிரகாரமான ஸ்தாபன திரித்துவ சபைகளிலிருந்து வெளியே அழைத்து (வெளி 18 : 1-4) கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவஎக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவரும் போது, கர்த்தருக்கு எதிர்கொண்டு போக ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு எப்பொழுதும் கர்த்தருடனே கூட இருக்க (1 தெச 4 : 16) ஆயத்தப்படுத்தி வருகிறார். கர்த்தருடைய காரியம் இப்படியிருக்க, தங்களை ஒரு பொருட்டாக எண்ணிக்கொள்ளும் அற்ப புத்திகாரர்கள் அவரை, அவர் காரில் அடிப்பட்டு துன்மார்க்கன் மரிப்பது போல் மரித்தார் என்றும், கள்ளத் தீர்க்கதரிசி என்றும் ஏளனமாக எழுதி, பேசி, தூற்றி வருகிறார்கள். இதில் அவர்களை குறை சொல்ல எதுவும் காரணம் இல்லை. ஏனென்றால் அவர்கள், தங்கள் பிதாவின் கிரியைகளை செய்து வருகிறார்கள். பாருங்கள் எத்தனையோ அற்புதங்களை செய்தான் எலிசா. எலியாவின் வரத்தில் இருமடங்கு பெற்றவன், மரணத்துக்கு ஏதுவான வியாதியாய்க் கிடந்தான், பின் மரணம் அடைந்தான் (2 இரா. 13 : 14,20) எலிசாவையும் அன்று அவ்வாறு தான் இகழ்ந்திருப்பார்கள், தூஷித்திருப்பார்கள். இயேசுவையும் அன்று அவ்வாறாகத்தானே நிந்தித்தார்கள், தூற்றினார்கள் (மத் 27 : 42, 43). அன்று ஒரு கூட்டம் இருந்தது போன்று இன்றும் இருக்கத்தான் செய்யும். அதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை.

38. இவ்வாறாக தான் நான் முன்பு எழுதிய நண்பர்களுடைய காரியங்களும் இருக்கிறது. பிரியமானவர்களே, நீங்களோ இருதயத்தில் அல்ல, வெளிவேஷத்தில் மேன்மை பாராட்டுகிற இந்த திரித்துவ, இருத்துவக்காரர்களை குறித்து எச்சரிக்கையாய் இருங்கள். இந்நிலையில் நான் ஆகஸ்ட் 2009 ல் ஒரு கடிதத்தை பெற்றேன். அது வெற்றி அழகன், குன்னூர், நீலகிரி (Dt.), என அனுப்புநர் விலாசம் இடப்பட்டிருந்தது. முழு விலாசம் கிடையாது. இவருடைய கடிதத்தை அப்படியே வெளியிடுகிறேன். இதை படித்து முடித்த பிறகு இவருக்குள் கிரியை செய்யும் ஆவி, தேவனுடையதா அல்லது பிசாசினுடையதா என்பதை நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள்.

**இயேசுவே வாரும்** : பத்திரிகையின் ஆசிரியனே உன் பத்திரிக்கையை எதேச்சையாக படித்தேன். மே-ஜூலை 2009 : அதில் 10-ம் பக்கத்தில் 52 பாராவில் காயீன் பிறந்ததை பற்றி எழுதியிருந்தாய். கிறிஸ்துவ வேதபுத்தகத்தில் ஆதியாகமம் 4 : 1 ல் ஆதாம், தன் மனைவியாகிய ஏவாளை அறிந்தான், அவள் கர்ப்பவதியாகி, காயீனை (பெற்றாள்) பெற்று, என்று தான் உள்ளது. கூறுக்கெட்ட குப்புசாமியே, இதை புரிந்துக்கொள்ள முடியாத மூடன் நீ, என்று நான் உணருகிறேன். பழத்தை பரித்து, புசித்த பின்தான் பாவம் உலகில் பிரவேசித்தது. நீ எழுதியிருந்தாய் சர்பத்தின் வாயிலாக சாத்தான் ஏவாளை கற்பழித்தான் என்று. நான் கேட்கிறேன் உன்னிடம், பழத்தை சாப்பிடும் முன்னாலேயே சர்பம் ஏவாளை கற்பழித்ததா அல்லது பழத்தை சாப்பிட்ட பிற்பாடா? இதை ஏன் எழுதல நீ. உன் வாதத்தின் படி சர்ப்பத்தின் வாயிலாக ஏவாள் கற்பழிக்கப்பட்டிருந்தால், இன்றைக்கு உலகில் உள்ள மக்கள் எல்லாமே உன்னையும், உன் குடும்பத்தையும் சேர்த்து சாத்தானின் சந்ததியாக பிறந்திருக்குமே. லூக்கா 4:5,6 வசனங்களை படிச்சு பாரு. உலகத்தின் அதிபதி சாத்தான் அதிகாரமும், மகிமையும், அவனுக்கு தேவன் கையளித்துள்ளார். எனக்கு இஷ்டமானவனுக்கு இவைகளை கொடுக்கிறேன் என்றான். கூமுட்டையே, சாத்தான் ஏவாளை சர்ப்பத்தின் மூலமாக கெடுத்திருந்தால், இன்றைக்கு உலகத்தில் உள்ளை அத்தனை பெண்களும் உன் பாட்டி, உன் அம்மா, உன் மகள் போன்ற அத்தனை பெண்களையும் அவன் கெடுத்து, குட்டி சுவராக்கி இருப்பானே. அவசரப்பட்டு பிசாசை உன் சிந்தைக்குள் வரவிட்டிட்டியே, சுய புத்தியே இல்லாதவனா நீ. வெளி 22 : 18, 19 வாதைகளை தேவன் அவன் (உன்) மேல் கூட்டுவார். அவனுடைய (உன்னுடைய) பங்கை தேவன் எடுத்துப்போடுவார் (2 தீமோ 3 : 16) (2 பேதுரு 1 : 20) (ஏசாயா 34 : 16) இந்த வசனங்கள் இப்படியிருக்க, ஆதி 4 : 1 தேவனால் எழுதப்பட்ட இந்த வசனத்தையே முழுசா மாத்திப்பார்க்கிற நீ தான் 100% சாத்தான். வேதவசனங்களை புரிந்துக்கொள்ள முடியாத (லூக்கா 24 : 25) புத்தியில்லாத மந்த இருதயம் உள்ளவர்களே (னே). வேதவசனங்களை, உன் சொந்த கற்பனையின் படி, புரட்டுகிறவனே பிசாசின் மகனே பேலியாளின் பிள்ளையே.

**ஞானஸ்நானம்**

இயேசு கிறிஸ்துவின் வார்த்தைக்கே கீழ்ப்படியாதவன் நீ மத்தேயு 28 : 19,20. நீயும் கீழ்படிவதில்லை. மற்றவர்களையும் கீழ்படிய விடுவதில்லை. பிதா, குமாரன், பரிசுத்த ஆவி நாமம் என்று இயேசுவே சொன்ன பிறகு அதை ஏற்றக்கவும், விசுவாசிக்கவும் மறுதலிக்கிறவனே, உன் பத்திரிக்கையிலேயே பாரு. பக்கம் 22 ல் உன் மகனின் கல்யாண விளம்பரத்தை. உன் மகனின் பெயர் ஒண்டர்புல். இதற்கு விளக்கம் தெரியாத நீ ஒரு மனுஷனே இல்ல. இதை நீ பெயர் என்று எடுத்துக்கொண்டால்... உன் சம்பத்தி பெயர் தெரியுமா உனக்கு?

விஜயகுமார். குமரி மாவட்டம் (5 முறை அச்சிடப்பட்டுள்ளது) இவைகள் பெயரா - உன்னால், இதற்கு அர்த்தம் சொல்ல தெரியுமா? இவைகளை நீ பெயர்தான் என்று ஒத்துக்கொண்டால்... பக்கம் 23 ல் 6, 7, 8 பத்திகளில் உள்ள 1. புதுக்கோட்டை, 2. தேவநேசம், 3. நேசக்குமார், 4. துரை 5. நித்தியானந்தம். இவைகளையும் பெயர்கள் என்று ஒத்துக்கொண்டால் (ஏசா 63:16) (மத் 3 : 17) பிதா என்பதும், குமாரன் என்பதும் பெயர் தான்டா. தேவன் ஒரு விசை சொன்னதை இரண்டாம் விசை திருத்துவதில்லை ஒழுக்கா வேதம் படி, புரிந்துக்கொள், விசுவாசி, கீழ்படிந்து நடந்து, வரும் கோபாக்கினைக்கு தப்பித்துக்கொள்ள வழியை தேடிக்கொள். உன்னைபோல 24 பக்கங்களை நான் எழுதினால், தாங்க மாட்ட. நீ எழுதின வசனங்களெல்லாமே உன்னையும், உன் போன்றவர்களையும் நியாயத்திலே கொண்டு வந்து நிறுத்தும் . நாகரீகம் தெரியாத நீ, மற்றவர்களை தீர்ப்புச் சொல்ல வந்திட்ட. வெட்கமா இல்ல. (இத்துடன் கடிதம் முடிவடைந்தது)
வானத்துக்கு ஏறியிறங்கினவர் யார்? ..... அவருடைய நாமம் என்ன? அவர் குமாரனுடைய நாமம் என்ன? அதை அறிவாயோ? (நீதி 30 : 4) இந்த சகோதரன் இதை அறியாதபடி அவர் கண்கள் குருடாக்கப்பட்டிருக்கிறது.

39. சகோ பிரன்காம் வெளி 10 : 6 ல் கூறப்பட்டுள்ள தூதன் என்பதை தேவன் தம்முடைய வார்த்தையைக்கொண்டு உறுதிப்படுத்தினார். எவ்வாறு அடையாளங்களைக் கொண்டும், அற்புதங்களை கொண்டும், பலவிதமான பலத்த செய்கைகளைக் கொண்டும், தேவன் தம்முடைய சித்தத்தின்படி பகிர்ந்துக்கொடுத்த பரிசுத்த ஆவியின் வரங்களை கொண்டும் அப்போஸ்தலர்களின் ஊழியத்தை உறுதிப்படுத்தி தேவன் தாமே சாட்சி கொடுத்தாரோ அதே போன்று சகோ. பிரன்காமின் ஊழியத்தையும், உறுதிப்படுத்தி, தேவன் சாட்சி கொடுத்தார். குருடர்கள் பார்வை அடைந்தார்கள். சப்பானிகள் நடந்தார்கள். குஷ்டரோகிகள் சுத்தமானார்கள். செவிடர்கள் கேட்டார்கள். மரித்தோர் உயிரோடெழுந்திருந்தார்கள். தரித்திரருக்கும் சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டது. இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக் குறித்து ஒருவன் தூஷிப்பானாகில் அவன் நியாயத்தின் நாளில் தண்டனைக்கு எப்படி தப்பித்துக்கொள்ளமுடியும்?. மேலே கூறப்பட்டவர்கள் மனந்திரும்பாவிட்டால் தண்டனைக்கு தப்பித்துக்கொள்ள முடியவே முடியாது.

40. தேவன் தம்முடைய இரகசியத்தை வேதாகமகல்லூரிகளில் பட்டம் படித்து, பட்டங்கள் பெற்றவர்களுக்கும், அதன் பயனாக பலவிதமான பதவிகளில் உள்ளவர்களுக்கும், டி.வி. ஊழியம் செய்கிறவர்களுக்கும், பெரிய பெரிய சபைகளின் தலைவர்களுக்கும் வெளிப்படுத்துவது இல்லை. இவர்கள் தங்களுடைய லௌகிக ஞானத்தினால் தேவனுடைய வார்த்தைக்கு தங்களுக்கு சாதகமான வியாக்கியானம் கொடுத்து, தங்களை தாங்களே ஒரு பொருட்டாக எண்ணி, தங்களுக்கென்று ஒரு கூட்டம் ஆதரவாளர்களை தயார் படுத்திக்கொண்டு தேவ சித்தத்திற்கு புறம்பாக அவருக்கென்று ஒரு ஊழியம் செய்து வருகிறார்கள். ஆதலால் அவர்களுக்கு தேவன் தம்முடைய இரகசியத்தை வெளிப்படுத்துவது இல்லை. மாறாக தேவன் தம்முடைய இரகசியத்தை தம்முடைய ஊழியக்காரர்களாகிய தீர்க்கதரிசிகளுக்கு வெளிப்படுத்தாமல் ஒரு காரியத்தையும் செய்யார். (ஆமோஸ் 3 : 7) தேவஇரகசியம் பரிசுத்த அப்போஸ்தலருக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் தேவ ஆவியினால் வெளிப்படுத்தப்படுகிறது (எபே 3 : 6)

41. ஏழாம் சபைக்காலத்தூதனும் தீர்க்கதரிசியுமாகிய சகோ வில்லியம் மாரியன் பிரன்காமின் மகத்தான ஊழியத்தை துஷித்து எழுத, பேச, தேவனை குறித்த அறிவு இல்லாத இவர்களுக்கு என்ன யோக்கியதை இருக்கிறது? இவர்கள் வேதவாக்கியங்களின் அடிப்படையில் தங்கள் ஊழிய அழைப்பை சுட்டிக்காட்ட முடியுமா? தேவன் எங்களை ஊழியத்திற்கு அழைத்தார், அழைத்தார் எனக் கூறிக்கொண்டே இருந்தால் போதுமா? இவர்கள் உறுதியில்லாத ஆத்துமாக்கள் மனதை மயக்கி சம்பாதித்த, வெளிநாடுகள் சென்று திரட்டிய பணத்தை பக்கபலமாகக் கொண்டு தங்களுக்கு ஒரு ஊழியத்தை ஸ்தாபித்துக் கொள்ளுகிறார்களேயன்றி மற்றபடி இவர்கள் தகுதிதான் என்ன? ஆவிக்குரிய பிரகாரமாக இவர்கள் ஊழியத்தை நிதானித்தால், இதோ எல்லாம் மாயையும் மனதுக்குச் சஞ்சலமுமாய் இருக்கிறது. நீதியின் ஊழியக்காரருடைய வேஷத்தை தரித்துக்கொண்டு திரித்துவம், இருத்துவம், ஒருத்துவம் என கோஷங்களை எழுப்பி, தகாதவைகளை உபதேசித்து அநேக ஆத்துமாக்களை கவிழ்த்து போடுகிறார்கள். இந்த பணியை தான் ஸ்தாபன சபை ஊழியர்கள், மற்றும் அதனை சார்ந்த ஊழியர்களும் செய்து வருகிறார்கள். தேவனோ சத்தியத்தை அறியாமல் அநீதியில் பிரியப்படுகிற யாவரும் ஆக்கினைக்குள்ளாகப்படும்படிக்கு அவர்கள் பொய்யை விசுவாசிக்க தக்கதாக கொடிய வஞ்சகத்தை இவர்கள் மூலமாக அனுப்புகிறார்.

42. கடைசியாக, மோசே பிதாக்களை நோக்கி : உன் தேவனாகிய கர்த்தர் என்னைப் போல ஒரு தீர்க்கதரிசியை உனக்காக உன் நடுவே உன் சகோதரரிலிருந்து எழும்ப பண்ணுவார் என்றான் (உபா 18 : 15) அந்த தீர்க்கதரிசி வெளிப்பட்டபோது (இயேசு கிறிஸ்து) ஒரு சிலரே அவரை அடையாளம் கண்டுக்கொண்டனர் (யோ 1 : 45) அதைப்போன்று மல் 4 : 6 ன் பின் பகுதி, பிள்ளைகளுடைய இருதயம் பிதாக்களுடைய இருதயத்திற்கு திருப்பப்பட வேண்டும். வெளி 10 : 6 ன் படி ஏழாம் தூதனுடைய சத்தத்தின் நாட்களிலே அவன் எக்காளம் ஊதப்போகிறபோது தேவஇரகசியம் நிறைவேற வேண்டும். அந்த தூதன் வெளிப்பட்டபோது (சகோ. வில்லியம் மாரியன் பிரன்காம்) ஒரு சிலரே அவரை அடையாளம் கண்டுக்கொண்டனர். அவரை காணதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள்.

43. நான் சுமார் 27 ஆண்டுகளுக்கு முன்பு எழுதிய அதே ஏதேன் தோட்டத்து சம்பவத்தை சற்று விவரித்து மீண்டும் எழுத என் தேவன் என் மேல் கிருபையாய் இறங்கினதற்காக கர்த்தரை நன்றியுள்ள இருதயத்தோடு

ஸ்தோத்தரிக்கிறேன். நீங்கள் இந்த ஆகாரத்தை புசிக்கவும், அது உங்கள் வயிற்றை அடைந்து, அங்கு ஜீரனிக்கவும் கர்த்தர் கிருபை செய்வாராக. நீங்கள் இயேசு கிறிஸ்துக்குள்ளாய் எல்லாவித உபதேசத்திலும், எல்லா அறிவிலும், மற்றெல்லாவற்றிலும் சம்பூரணமுள்ளவர்களாய் இருக்கவேண்டும் என்பதே என் ஆத்தும வாஞ்சை. ஆனால் ஒன்றை மட்டும் எழுத வாஞ்சிக்கிறேன் : தேவனுடைய இராஜ்யத்தின் இரகசியங்களை அறியும்படி அவருடையவர்களுக்கு மட்டுமே, ஒரே தேவன் அவருடைய நாமம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என விசுவாசித்து, மனந்திரும்பி, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே தங்கள் பாவமன்னிப்புக்கு ஞானஸ்நானம் பெற்ற, தெரிந்துக்கொள்ளப்பட்ட ஜனங்களுக்கு அருளப்படுகிறது. மற்றவர்களோ கண்டும் காணாதவர்களாகவும், கேட்டும் உணராதவர்களாகவும் இருக்கதக்கதாக அவைகள் உவமைகளாகச் சொல்லப்படுகிறது (லூக் 8 : 10) ஆம், ஏதேன் தோட்டத்து சம்பவங்கள் உவமைகளாகச் சொல்லப்பட்டிருக்கிறது. வேதவாக்கியத்தில் உங்கள் முத்துக்களை பன்றிகள் முன் போடாதேயுங்கள், போட்டால் தங்கள் கால்களால் அவைகளை மிதித்து, திரும்பிக்கொண்டு உங்களைப் பீறிப்போடும் என கூறுகிறது. (மத். 7 : 6) ஆதலால் இந்த இரகசிய வெளிப்பாட்டை ஏற்றுக்கொள்வது, ஏற்றுக்கொள்ளாதது அவரவர்கள் இருதயத்தை பொறுத்தது. நல்ல நிலம் ஏற்றுக்கொள்ளும். நாங்களோ நடுகிறவர்களும், நீர்பாய்ச்சுகிறவர்களுமாய் இருக்கிறோம். மற்றபடி எங்களால் ஒன்றும் இல்லை. விளையச் செய்கிற தேவனாலே எல்லாம் கூடும். (1 கொரி 3 : 7). தேவன் தாமே உங்களோடு இடைப்பட்டு, ஏதேன் தோட்டத்து இரகசியங்களை உங்களுக்கு வெளிப்படுத்தவேண்டும். அவர் அப்படியே செய்வார். ஆமென்.

44. இந்த செய்தி தொகுப்பின் தலைப்பு **ஜீவனுள்ளோருக்கெல்லாம் தாயாகிய ஏவாளின் கர்ப்பத்தில் பொல்லாங்கனாகிய சாத்தானின் வித்து** க்காக நான் எடுத்துக்கொண்ட வேதப்பகுதி : ஆதி 2 : 7-9, 15-17 மற்றும் 3 : 1-7 வசனங்கள்.

தேவனாகிய கர்த்தர் மனுஷனை பூமியின் மண்ணினாலே உருவாக்கி : ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான். தேவனாகிய கர்த்தர் கிழக்கே ஏதேன் என்னும் ஒரு தோட்டத்தை உண்டாக்கி, தாம் உருவாக்கின மனுஷனை அதிலே வைத்தார். தேவனாகிய கர்த்தர், பார்வைக்கு அழகும், புசிப்புக்கு நலமுமான சகலவித விருட்சங்களையும், தோட்டத்தின் நடுவிலே ஜீவவிருட்சத்தையும், நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தையும் பூமியிலிருந்து முளைக்கப்பண்ணினார். (ஆதி 2 : 7-9).

தேவனாகிய கர்த்தர் மனுஷனை ஏதேன் தோட்டத்தில் அழைத்துக்கொண்டு வந்து, அதை பண்படுத்தவும், காக்கவும் வைத்தார். தேவனாகிய கர்த்தர் மனுஷனை நோக்கி : நீ தோட்டத்தில் உள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம். ஆனாலும் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியை புசிக்க வேண்டாம் : அதை புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார். (ஆதி 2 : 15-17)

தேவனாகிய கர்த்தர் உண்டாக்கின சகல காட்டு ஜீவன்களைப் பார்க்கிலும் சர்ப்பமானது தந்திரமுள்ளதாய் இருந்தது. அது ஸ்திரீயை நோக்கி : நீங்கள் தோட்டத்தில் உள்ள சகல விருட்சங்களின் கனியையும் புசிக்கவேண்டாம் என்று தேவன் சொன்னது உண்டோ என்றது. ஸ்திரீ சர்ப்பத்தை பார்த்து : நாங்கள் தோட்டத்தில் உள்ள விருட்சங்களின் கனிகளை புசிக்கலாம் ; ஆனாலும் தோட்டத்தின் நடுவில் இருக்கிற விருட்சத்தின் கனியை குறித்து, தேவன் நீங்கள் சாகாதபடிக்கு அதை புசிக்கவும் அதை தொடவும் வேண்டாம் என்று சொன்னார் என்றாள். அப்பொழுது சர்ப்பம் ஸ்திரீயை நோக்கி : நீங்கள் சாகவே சாவதில்லை ; நீங்கள் இதை புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும் நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களை போல் இருப்பீர்கள் என்றும் தேவன் அறிவார் என்றது. அப்பொழுது ஸ்திரீயானவள், அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியை தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படதக்க விருட்சமுமாயிருக்கிறது என்று கண்டு, அதன் கனியை பறித்து, புசித்து, தன் புருஷனுக்கும் கொடுத்தாள் ; அவனும் புசித்தான். அப்பொழுது அவர்கள் இருவருடைய கண்களும் திறக்கப்பட்டது ; அவர்கள் தாங்கள் நிர்வாணிகள் என்று அறிந்து, அத்தியிலைகளை தைத்து, தங்களுக்கு அரைகச்சைகளை உண்டுபண்ணினார்கள் (ஆதி 3 : 1-7)

45. **ஆதாம் :** முதலாம் மனிதனாகிய இவன் தேவனுடைய சிருஷ்டிப்புகளில் கடைசியாக இருந்தான். எபிரேய மொழியில் மண்ணை குறிக்கும் சொல் **அதாமா** (Adamah) மனிதனை குறிக்கும் சொல் ஆதாம். எனவே, முதல் மனிதனுக்கு கொடுக்கப்பட்ட பெயர் காரணப் பெயராகும். இவன் தேவசாயலாகவும் தேவ ரூபத்தின் படியேயும், ஆணும் பெண்ணுமாக சிருஷ்டிக்கப்பட்டான் (ஆதி 1 : 26, 27). ஆதாம் தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட முதல் குமாரன். ஆதலால் தேவன் ஆதாமுடைய பிதா. (Adam was the Son of God. Lk 3 : 38. Hence God was the Father of Adam) இவன் மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்டான் (எபே 4 : 24) சாயல் என்கிற வார்த்தை ஆங்கிலத்தில் Image எனவும், ரூபம் என்கிற வார்த்தை ஆங்கிலத்தில் Likeness எனவும், எபிரேய மொழியில் Demooth எனவும் உள்ளது. தேவன் தம்முடைய சாயலாக ஆவிக்குரிய சரீரத்தில் மனுஷனை சிருஷ்டித்தார். தேவசாயல் வானத்திற்குரிய மேனியாயிருக்கிறது. (Celestial Body) பின்பு தேவன் தமது ரூபத்தின்படி பூமியின் மண்ணினாலே மனுஷனுக்கு பூமிக்குரிய மேனியை (Terreserial Body) அதாவது ஜென்ம சரீரத்தை கொடுத்து தம்முடைய ஜீவசுவாசத்தை அவன் நாசியில் ஊதினார். அவன் ஜீவாத்துமாவானான். (ஆதி 2 : 7). மனிதன் தேவனுக்கென்று சிருஷ்டிக்கப்பட்டான். அவன் தேவனுடைய (பரிசுத்த ஆவி) இளைப்பாறுதலின் ஸ்தலமாக, அதாவது ஆலயமாக இருக்கிறான் (1 கொரி 3 : 16)

46. ஆவியாயிருந்த மனுஷன், தன் ஆவியின் சுபாவத்தை (Nature of the Spirit) வெளிப்படுத்த மாம்ச சரீரத்தில் ஜீவாத்துமாவானான். ஆவி, ஆத்துமா, சரீரமுடைய மனிதனான். Soul is the nature of the Spirit. ஆத்துமா ஆவியின் சுபாவம். முதல் மனிதன் மண்ணினால் உருவாக்கப்பட்டு, தன் ஜென்ம சரீரத்தை பெற்று,

அதில் தேவனுடைய ஆவியும், அந்த ஆவியின் சுபாவத்தை உடை ய ஜீவாத்துமாவானான். இவன் ஆதாம் என்று தேவனால் அழைக்கப்பட்டான் (ஆதி 5 : 2) இவன் தேவகுமாரன் (லூக் 3 : 38) ஆதாம் பூமியிலிருந்து உண்டான மண்ணானாவன். அந்த மண்ணானவனுடைய சாயலைதான் நாம் அணிந்திருக்கிறோம். ஆதலால் மண்ணானவன் எப்படிப்பட்டவனோ மண்ணானவர்களும் அப்படிப்பட்டவர்களே (1 கொரி 15 : 47 - 49). இவன் தேவனால், தேவசாயலாகவும், தேவரூபத்தின் படியேயும் மரிப்பதற்காக அல்ல, மாறாக என்றென்றைக்கும் ஜீவித்திருப்பதற்காக சிருஷ்டிக்கப்பட்டான். இவன் தொடக்கத்தில் தியாபெனி சரீரத்தில், அதவாது ஆவிக்குரிய சரீரத்தில் இருந்தான். அது மாம்சமும் இரத்தமும் இல்லாத ஒரு சரீரம்.

47. இவன் தன்னுடைய வானத்திற்குரிய மேனியில் இருக்கும்போது பலுகி பெருகி, பூமியை நிரப்பி அதை கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும், பூமியின் மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டுகொள்ளும்படி தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டான் (ஆதி 1 : 28). மனுஷன், ஆதாம் பூமியின் மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டுக்கொள்ள வேண்டியவனாக இருந்தபடியினால், மிருகங்களை வழிநடத்துவது அவனுடைய கடமையாக இருந்ததினால் மிருகத்தின் சாயலைப் போன்ற ஒன்றாக உண்டாக்கப்பட்டான் (ஆதி 2 : 7) உலகங்கள் தேவனுடைய வார்த்தையினால் சிருஷ்டிக்கப்பட்டது (எபி 11 : 3) ஏனென்றால் தேவனுடைய வார்த்தை ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது. (யோ 6 : 63) ஆணும், பெண்ணுமாக சிருஷ்டிக்கப்பட்ட மனுஷனும் தேவனுடைய வார்த்தையினாலே பலுகி, பெருகி, பூமியை நிரப்பி, அதை தனக்கு கீழ்ப்படுத்துகிறவனாய் இருந்தான். அப்பொழுது மாம்சத்தின் இச்சைகளுக்கு அங்கு இடமே இல்லை. இன்று மனுக்குலம் பலுகி, பெருக மாம்ச இச்சையே காரணமாய் இருக்கிறது. ஆனால் தொடக்கத்தில் அப்படியல்ல. தொடக்கத்தில் ஆதாம் சொல்ல அது யாவும் ஆகும். ஏனென்றால் தேவன் மகிமையினாலும், கனத்தினாலும் அவனை முடிசூட்டியிருந்தார். (சங் 8 : 5) ஆதாம் அனைத்து ஜீவராசிகளுடன் பேசவும், உரையாடவும் முடியும். இவன் காற்றுடன் பேச முடியும். இவன் கடலுடன் உரையாடமுடியும். இவன் மரங்களுடன் சம்பாஷிக்க முடியும். இவன் சிங்கத்துடன் பேச முடியும். சுருக்கமாக சொல்ல போனால் அனைத்து சிருஷ்டிகளும் இவன் ஆதிக்கத்திற்குட்பட்டிருந்தது. அனைத்து ஜீவராசிகளும் இவனுக்கு செவி கொடுத்தது, கீழ்ப்படிந்தது. இவன் மலையை பார்த்து நீ இங்கிருந்து பெயர்ந்து அங்கே போ என்றால் அது போகும். இவன் அனைத்தையும் ஆண்டுக்கொள்ள ஆசீர்வதிக்கப்பட்டவனாய் இருந்தான். இவன் ஒரு குட்டி தேவனாகவே இருந்தான். ஏனென்றால் இவன் தேவகுமாரன்.

48. தேவனாகிய கர்த்தர் வானத்தையும், பூமியையும் உண்டாக்கின நாளிலே நிலத்தினுடைய சகல வித செடிகளும் பூமியின் மேல் இன்னும் உண்டாகவில்லை. நிலத்தின் சகலவித பூண்டுகளும் இன்னும் முளைக்கவில்லை. ஏனென்றால் தேவனாகிய கர்த்தர் பூமியின் மேல் இன்னும் மழையை பெய்யப்பண்ணவில்லை. நிலத்தை பண்படுத்த மனுஷனும் இருந்ததில்லை. (ஆதி 2 : 4,5) ஆதலால் தேவனாகிய கர்த்தர் மனுஷனை பூமியின் மண்ணினாலே உருவாக்கி : ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார். மனுஷன் ஜீவாத்துமாவானான் (ஆதி 2 : 7, சங் 10 : 18, சகரி 12 :1) ஆதாம் ஜீவாத்துமாவானபோது மிக சொர்ப்ப வயதுடைய வாலிபனாகவே இருந்தான். எனென்றால் அங்கு அற்பஆயிசுள்ள பாலகனும், தன் நாட்கள் பூரணமாகாத கிழவனும் உண்டாயிறார்கள். நூறு வயது சென்று மரிக்கிறவனும் அங்கு வாலிபன் என்று சொல்லப்படும் தோற்றத்தில் இருப்பான் (ஏசா 65 : 17 - 25) ஆதாம் தன்னுடைய பூமிக்குரிய மேனியை அடைந்த பிறகு, தேவன் ஏதேன் கிழக்கே ஒரு தோட்டத்தை நிறுவினார். அதை பண்படுத்தவும், காக்கவும், மனுஷனை அந்த தோட்டத்தில் வைத்தார் (ஆதி 2 : 8, 15) பின்பு தேவனாகிய கர்த்தர் வெளியின் சகலவித மிருகங்களையும், ஆகாயத்தின் சகலவித பறவைகளையும் மண்ணினாலே உருவாக்கி, ஆதாமிடம் கொண்டு வந்தார். அவன் அவைகளுக்கு பேரிட்டான் (ஆதி 2 : 19)

49. பின்பு தேவனாகிய கர்த்தர் ஆதாமுக்கு அயர்ந்த நித்திரையை வரப்பண்ணினார் ; அவன் நித்திரை அடைந்தான், அவர் அவன் விலா எலும்புகளில் ஒன்றை எடுத்து அந்த இடத்தை சதையினால் அடைத்தார். தேவனாகிய கர்த்தர் தாம் மனுஷனில் எடுத்த விலா எலும்பை மனுஷியாக உருவாக்கி, அவளை மனுஷனிடத்தில் கொண்டுவந்தார். அப்பொழுது ஆதாம் : இவள் என் எலும்பில் எலும்பும், என் மாம்சத்தில் மாம்சமுமாய் இருக்கிறாள். இவள் மனுஷனில் எடுக்கப்பட்டபடியினால் மனுஷி எனப்படுவாள் என்றான். (ஆதி 2 : 22-23). ஆதாமும் ஏவாளும் மனுஷன், மனுஷி என்று அழைக்கப்படதக்க பருவத்தை உடையவர்களாய் இருந்தார்கள்.

50. ஒரே மனுஷனாலே பாவமும், பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்தது. எல்லா மனுஷரும் பாவம் செய்தபடியால் மரணம் எல்லாருக்கும் வந்தது. (ரோ 5 : 12) ஆதாம், ஏவாளின் சொல்லுக்கு செவிகொடுத்து இச்சையில் பங்கு கொண்டான். அன்று முதல் இன்று வரை ஏவாள் மாம்ச இச்சையில் நிறைந்து வீட்டிலும் வெளியிலும் ஆதாமை போன்ற தேவனுடைய குமாரர்களை அனுதினமும் பாவத்திற்குள்ளாக்கும்படிக்கு தூண்டி வருகிறாள். ஆம் ஸ்திரீயானவள் எனக்கு கொடுத்தாள், நான் புசித்தேன் என்றான் ஆதாம் (ஆதி 3 : 12) ஏவாள் மீறுதலுக்குட்பட்டு பாவத்தில் விழுந்தது ஆதாமுக்கு நன்கு தெரியும். ஏனென்றால் அவன் தேவகுமாரன். ஆனாலும் அவன் அவள் வார்த்தைக்கு செவிக்கொடுத்தான். அவளுடைய பாவத்திற்கு உடந்தையானான். ஆனால் அவன் வஞ்சிக்கப்படவில்லை (1 தீமோ 2 : 14) ஏவாள் வஞ்சிக்கப்பட்டு, மீறுதலுக்குட்பட்டு, பாவத்திற்குட்பட்டாள். ஆதாமோ வஞ்சிக்கப்படவில்லை. தன் மனைவியின் பாவத்திற்கு உடன்பட்டான். ஆம், அறிந்தும் அந்த தவறை செய்தான். ஆற்றில் விழுந்த மனைவியை, கணவனும் ஆற்றில் விழுந்து தூக்கி எடுத்து காப்பாற்றும் செயல் போற்ற ஒன்றாகும். ஏனெனில்

ஏவாள் ஆதாமின் எலும்பில் எலும்பும் மாம்சத்தில் மாம்சமுமானவள் (ஆதி 2 : 23) ஏதேன் தோட்டத்தில் ஆதாம் விழுந்திராமல் இருந்தால் அங்கே இருந்த ஜீவ விருட்சத்தின் கனியை புசித்திருப்பான். அவன் எக்காலத்திலும் ஒரு வாலிபனாகவே தொடர்ந்து இருந்திருப்பான். இயற்கையில் எங்கும் அழிவு ஏற்பட்டிருக்காது. எங்கும் சமாதானமே நிலைத்திருந்திருக்கும். பாவம் உலகத்தில் பிரவேசித்திருக்காது. தேவன் மாம்சத்தில் வெளிப்படவேண்டிய அவசியம் இருந்திருக்காது. தேவன் தம்முடைய தன்மைகளை வெளிப்படுத்திருக்கவும் முடியாது. பாவம் அறியாத முந்தின மனுஷனாகிய ஆதாம் தன் மனைவிக்காக பாவம் ஆனான். பாவத்தை சுமந்தான். அதேப்போன்று பிந்தின மனுஷனாகிய ஆதாம் (இயேசு கிறிஸ்து) தம் மணவாட்டியை இரட்சிக்க பாவம் அறியாத அவர் அவளுக்காக பாவமானார் (2 கொரி 5 : 21) அவர் நம்முடைய பாவங்களை சுமந்து தீர்த்தார். பாவ மாம்சத்தின் சாயலானார் (ரோ 8 : 3). ஆனால் அவரிடத்தில் பாவமில்லை (1 யோ 3 : 5) . ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்தில் பிரவேசித்தது (ரோ 5 : 12) நாம் பாவத்தில் பிறந்ததினால் தான் (இதோ, நான் துர்க்குணத்தில் உருவானேன் : என் தாய் என்னை பாவத்தில் கர்ப்பம் தரித்தாள். சங் 51 : 5) மறுபடியும் பிறக்க வேண்டியதாயிற்று. பாருங்கள், ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்ஜியத்தை காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்கு சொல்லுகிறேன் என்று இயேசு, யூதருக்குள்ளே அதிகாரியான நிக்கொதேமு எனப்பட்ட பரிசேயனிடம் கூறினார் (யோ 3 : 1,3) இது ஒருவன் தன் தாயின் கர்ப்பத்தில் இரண்டாம் தரம் பிரவேசித்து பிறப்பதில்லை. அவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறக்கவேண்டும். அவன் தண்ணீரில் மூழ்கி தன் பாவமன்னிப்புகென்று ஞானஸ்நானம் பெற்று ஜலத்தினால் பிறக்கவேண்டும். அதாவது அவன் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் முதலில் தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள வேண்டும். பின் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை பெற வேண்டும். ஏனென்றால் மாம்மிசத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும், ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும் (யோ 3 : 1-8)

51. **ஏதேன் தோட்டம் :** தேவனாகிய கர்த்தர் ஏதேனின் கிழக்கே ஒரு தோட்டத்தை நிறுவினார். LORD God planted a garden eastward in Eden. (ஆதி 2 : 8) கிழக்கே ஏதேன் என்னும் ஒரு தோட்டம் என்ற தமிழ் மொழி பெயர்ப்பு சரியானது அல்ல. ஏதேனில் நிறுவப்பட்ட தோட்டமாகையால் இது ஏதேன் தோட்டம் என்று அழைக்கப்பட்டது. ஏதேன் என்றால் மகிழ்ச்சி (Delight) என்று பொருள். செழிப்பான பூமி ஏதேன் / ஏதேன் தோட்டம் என்று அழைக்கப்படுகிறது. (ஆதி 13 : 10) தேவனுடைய மகிமை கீழ்த்திசையிலிருந்து வந்தது (எசே 43 : 2). தேவனுக்கு வானத்தையும் பூமியையும் அதில் உள்ளவைகளையும் சிருஷ்டிக்க 6000 ஆண்டுகள் ஆனாது. ஆனால் பரலோகத்தில் ஒரு நாள், பூலோகத்தில் 1000 ஆண்டுகள் ஆகும். சிருஷ்டிப்புக்கு பின் தேவன் ஏதேனின் கிழக்கே ஏதேன் தோட்டம் என்னும் அழகிய ஸ்தலத்தை அமைத்து அதை உலகத்தின் தலைநகராக கொண்டார். அதன் மேல் எல்லாவற்றிகும் அதிகாரியாக தம் புத்திரனையும் அவன் மனைவியையும் நியமித்தார்.

52. ஏதேன் தோட்டத்தில் கள்ளம், கபடம் : வஞ்சனை, சூது செய்வாரில்லை. இங்கு தீங்கு செய்வாரில்லை. கேடு விளைவிப்பாரில்லை. இங்கு ஓநாய் ஆட்டுக்குட்டியோடே தங்கியது. புலி வெள்ளாட்டுக்குட்டியோடே படுத்துக்கொண்டது. கன்றுக்குட்டியும் பாலசிங்கமும் காளையும் ஒரு மித்து மேய்ந்தது. பால் குடிகுழந்தை விரியன் பாம்பு வளையின் மேல் விளையாடிற்று. பால் மறந்தபிள்ளை கட்டுவிரியன் புற்றிலே தன் கைகளை வைத்தது. இங்கு ஒன்று மற்றொன்றுக்கு தீங்கு விளைவிப்பதே இல்லை. எங்கும் அன்பு மயம். இங்கு பஞ்சம், பசி, பட்டினி, தாகம் எதுவுமில்லை. வருத்தம், வியாதி, உயிர்சேதம் எதுமில்லை. இங்கு பாவமில்லை, சாபமில்லை. எங்கும் சந்தோஷமும் சமாதானமுமே. சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறது போல பூமி கர்த்தரை அறிகிற அறிவில் நிறைந்திருந்தது (ஏசா 11 : 6-9) இங்கு அனைத்து ஜீவராசிகளும் புல் பூண்டுகளையே புசித்தன Only Vegetarian. ஆதலால் எதுவுமே சாகவேண்டிய அவசியம் இல்லை. எதுவும் அழிய வேண்டிய அவசியமுமில்லை.

53. இங்கு பலவிதமான கொள்கைகளும், உபதேசங்களும் கிடையாது. ஏனென்றால் கிறிஸ்தவர்கள் மத்தியில் பிரிவினைகளை தங்கள் சுயநலத்திற்காக / வாழ்விற்காக, உற்றார் உறவினர்கள் நண்பர் நல்வாழ்வுக்காக அமைந்துள்ள R.C., C.S.I., T.P.M., A.G., C.G., Maranatha, C.N.I., Luthern, Baptist, Methodist, Church of Christ, Brothren Mission, 7th Day, Salvation Army, E.C.I., Jehovah Witness போன்ற பெயர் பலகைகள் எதுவும் கிடையாது. இங்கு ஒரே மந்தை, ஒரே மேய்ப்பன்.

54. இங்கு பற்பல பட்டங்களை கொண்ட மேய்ப்பர்கள் இல்லை. இங்கு கலாநிதி, மறைத்திரு., மாமறைத்திரு, விகார் ஜெனரல், போப், பிரதான பாஸ்டர், தலைமை போதகர், பிஷப், அருள்திரு, அருட்பெருந்திரு, பிரதான ஆயர் போன்ற பதவிகளை கொண்டு சபையின் சொத்துக்களை, விசுவாசிகள் தசமபாகம் மற்றும் காணிக்கை பணத்தை சூரையாடும் வஞ்சகக்கூட்டம் எதுவுமில்லை. இங்கு ஆடுகளுக்காக தன் உயிரை கொடுக்கும் ஒரே மேய்ப்பன் தான் உண்டு. இங்குள்ள மந்தையில் உள்ள ஆடுகள் அந்த மேய்ப்பனுடைய சத்தத்திற்கு செவிக்கொடுக்கிறது. அவர் தன் மந்தையின் ஆடுகளை அறிந்து அவைகளை பேர் சொல்லி அழைக்கிறார். அவைகள் அவருக்கு பின் செல்கிறது. அவர் அவைகளுக்கு நித்திய ஜீவனை கொடுக்கிறார். அவைகள் ஒருக்காலும் கெட்டுப்போவதில்லை. ஒருவனும் அவைகளை அவர் கைகளிலிருந்து பறித்துக்கொள்வதுமில்லை.

55. இங்கு வசூல் வேட்டைக்காரர்கள் நடத்தும் பேரின்ப பெருவிழா, நட்சத்திர நற்செய்தி விழா, கலிலேயா கடற்கரை முகாம், லேவியர் முகாம், முழு இரவு ஜெபவீரர்கள் முகாம் போன்ற முகாம்கள் எதுவுமில்லை. மாறாக இங்கு ஓயாத கீதசத்தம் தொனிக்கும்.

56. இங்கு இளம்பங்காளர் திட்டம், நூறு கிராம ஊழியர் திட்டம், பல்கலை கழகத் திட்டம், தேவனுடைய ஜெபவீடு திட்டம், போன்ற தனக்கும் தனது குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும், உற்றார் உறவினர்களுக்கும் சொத்து சேர்க்கும் திட்டங்கள் எதுவுமில்லை. மாறாக இங்கு பரிசுத்த ஆவியின் வழிநடுத்துதலே உண்டு.

57. இங்கு நற்செய்தியின் பயிற்சி பள்ளிகள், வேதாகமக் கல்லூரிகள் எதுவுமில்லை. மாறாக வேதமே வெளிச்சம். சத்திய ஆவியானவரே இவர்களை சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்துகிறார். அவரிடமிருந்து பெற்ற அபிஷேகமானது அவர்களுக்கு சகலத்தையும் போதிக்கிறது.


58. இங்கு நாடார், தேவர், கோனார், முதலியார், செட்டியார், பிள்ளைமார், உயர்ந்த ஜாதி, தாழ்ந்த ஜாதி, OC, BC, MBC, SC, ST போன்ற பாகுபாடுகள் எதுவுமில்லை. இவைகள் யாவும் இப்பிரபஞ்சத்திற்குரிய வாழ்க்கையோடு மறைந்தது. இங்கு ஒரே குடும்பம். அது தேவகுடும்பம்.

59. ஏதேன் தோட்டம் தேவனுடைய வனம் (எசே 31 : 9) இது தேவனுடைய தோட்டம் (ஆதி 13 : 10). இங்கு தேவன் உலாவுவது வழக்கம். இங்கே சந்தோஷமும், மகிழ்ச்சியும், துதியும், கீத சத்தமும் உண்டாயிருக்கும் (எசா 51 : 3). இதன் பூமியிலிருந்து தேவனாகிய கர்த்தர் பார்வைக்கு அழகும், புசிப்புக்கு நலமுமான சகலவித விருட்சத்தையும் ; தோட்டத்தின் நடுவிலே ஜீவ விருட்சத்தையும், நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தையும் முளைபிக்கப்பண்ணினார் (ஆதி 2 : 9) மனுஷன் தோட்டத்தில் உள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கலாம், ஆனால் தோட்டத்தின் நடுவில் உள்ள நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியை புசிக்ககூடாது, அதை புசிக்கும் நாளின் சாகவே சாவான் என்ற கட்டளையும் தேவனுடைய கரத்திலிருந்து பெற்றான் (ஆதி 2 : 16, 17) எவ்வாறு காயீனும் ஆபேலும், ஈசாவும் யாக்கோபும் ஒரே கர்ப்பத்திலோ, எவ்வாறு காம்மும் சேத்தும் : காகமும், புறாவும் ஒரே பேழையிலோ : எவ்வாறு யுதாசும் இயேசுவும், அந்தி கிறிஸ்துவின் ஆவியும் பரிசுத்த ஆவியும் ஒரே சபையிலோ அதேபோன்று நன்மை தீமை அறியத்தக்க விருட்சமாகிய சாத்தானும், ஜீவ விருட்சமாகிய கிறிஸ்துவும் ஏதேன் தோட்டத்தின் மத்தியில் இருந்தார்கள்.

60. தோட்டம் என்பது வேதவாக்கியங்களில் எப்பொழுதும் உண்மையான தோட்டத்தை மாத்திரமே குறிப்பது இல்லை. தோட்டம் என்ற சொல் ஆத்துமாவையும் (எரே 31 : 12) புனிதமான இடத்தையும் (ஏசா 65 : 3), அதோடு மட்டுமல்ல மனித சரீரத்தையும் குறிக்கிறது. (உ.பாட்டு 4 : 12, 13 , 15) அதேபோன்று விருட்சங்கள் மரங்களை மட்டும் குறிப்பதில்லை விருட்சங்கள் மனிதர்களையும் குறிக்கிறது. பாருங்கள் கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் நீர் கால்களின் ஓரமாய் நடபட்டு, தன் காலத்தில் தன் கனியை தந்து, இலை உதிராதிருக்கிற மரத்தை போல் இருப்பான் என சங் 1 : 2, 3ல் காண்கிறோம். மேலும் பெத்சாயிதா ஊர் குருடன் பார்வையடைந்து நடக்கிற மனுஷரை மரங்களை போல் காண்கிறேன் என்றான் (மாற் 8 : 22, 24).

61. இந்த தோட்டத்தில் தான் வஞ்சகம் ஆரம்பமானது. வஞ்சனையில் ஆரம்பமான மானிட வாழ்க்கை வஞ்சனையிலே முடிவில் முடியும். எப்படியெனில் விதை விதைக்கப்பட்டு வளர்ந்து பின் விதையோடு முடிகிறது. அதேபோன்ற இந்த வஞ்சகம் விதைக்கப்பட்டது. காலக்காலங்களில் வளர்ந்து வருகிறது. உலகமுடிவு வஞ்சகத்தோடு இருக்கும். உதாரணமாக இக்காலத்தில் சாத்தான் தேவன் போல் தேவாலத்தில் இருக்கிறான். ஸ்தாபசபை மக்கள் ஆலயங்களுக்கு சென்று தேவனை தொழுதுகொள்வதாக நினைத்து சாத்தானையே அங்கு தொழுதுகொண்டுவருகிறார்கள். இதைவிட ஒரு கொடிதான / பெரிய வஞ்சகம் எந்த யுகத்திலும் எந்த சபை காலத்திலும் இல்லை. அநேக ஸ்தாபன சபை மக்கள் அற்புத அடையாளங்களை நம்பி வஞ்சிக்கப்படுகிறார்கள். அநேகர் ஊழியம் என்ற பெயரில் யூதாசைப் போன்று பணப்பையை கைகளில் வைத்துக்கொண்டு தங்களுக்கும், தங்கள் வாரிசுகளுக்கும் தலைமுறைகளுக்கான சொத்து சுகங்களை சேர்த்துக்கொண்டிருப்பதை என் ஜனங்கள் இன்னும் உணராதிருக்கிறார்களே.

62. ஆனால் மல் 4 : 6 ல் கூறப்பட்ட பிந்தின ஊழியம் தேவனுடைய பிள்ளைகள் வஞ்சிக்கப்படாதபடிக்கு அவர்களை கள்ள உபதேசங்களிலிருந்து, மாறுபாடான போதனைகளிலிருந்து தப்புவிக்கும். இனி வரப்போகிற, நாம் எதிர்நோக்கிக்கொண்டிருக்கிற தேவனுடைய 1000 வருட அரசாட்சி முந்தின ஏதேன் தோட்டத்தை போல மகிழ்ச்சியாய் இருக்கும். ஏதேன் தோட்டம் நாம் 1000 வருட அரசாட்சியின் போது காணும் உலகம் (வெளி 21 : - 1-7, எசா : 65-17-25). கிறிஸ்துவுடன் நாம் 1000 வருடம் அரசாளும் சமயம் ஆதி ஏதேன் தோட்டத்தைப்போன்ற ஒரு உலகத்தில் இருப்போம். ஆதாம், ஏவாள் தாங்கள் நிர்வாணிகளாக இருந்தும் வெட்கப்படவில்லை. அவர்கள் தாங்கள் நிர்வாணிகள் என்று அறியவில்லை. ஏனெனில் அவர்கள் பரிசுத்த ஆவியினால் திரையிடப்பட்டிருந்தார்கள். ஆதாம் ஏவாள் இருவரும் ஏதேன் தோட்டத்தில் நிர்வாணிகளாய் இருந்தும் வெட்கப்படாதிருந்தார்கள் (ஆதி 2 : 25) அவர்கள் மனுஷன், மனுஷி என்று அழைக்கப்படும் இளம்பிராயத்தை உடையவர்களாய் இருந்த போதிலும் சுபாவத்தில் சிறு குழந்தைகளாய் இருந்தனர். அவர்கள் நன்மை தீமை



அறியத்தக்க பருவத்தில் இல்லை. சிறு குழந்தைகளில் ஆண் பெண் இருவரையும் நிர்வாணமாக நிறுத்தினால் அவர்கள் மாம்ச இச்சைகளை உணராமல், கண்களின் இச்சையை அறியாமல், தாங்கள் நிர்வாணிகள் என்று அறியாமல் விளையாடிக்கொண்டிருப்பார்கள். அதே நிலையில் தான் ஆதாமும் ஏவாளும் ஏதேன் தோட்டத்தில் இருந்தனர். அங்கு இவர்கள் பரிசுத்த ஆவியினால் திரையிடப்பட்டிருந்தார்கள். கர்த்தர் சிருஷ்டித்த சர்வ ஜீவராசிகளும் பலுகி பெருகக் கூடிய திடகாத்திரமான வாலிப பருவத்திலே இருந்தன. அது மிருகமோ, பறவையோ, ஜலத்தில் வாழும் ஜந்துக்களோ, எதுவாக இருந்தாலும் தன் இனத்தை உற்பத்தி செய்யக்கூடிய பருவத்தில் ஜோடாக இருந்தன. தேவன் அவைகளை குழந்தையாகவோ, முதிர்வயதுள்ளதாகவோ சிருஷ்டிக்கவில்லை. வாலிப பருவத்திலே சிருஷ்டித்து உருவாக்கினார். ஆதாமுக்கும் ஏவாளுக்கும் தொப்புள் கிடையாது. ஏனென்றால் ஆதாம் தேவனுடைய மூலசிருஷ்டிப்பில் இருந்தான். ஏவாளும் ஆதாமின் விலா எலும்பு ஒன்றிலிருந்து உருவாக்கப்பட்டாள். பொதுவாக கூறப்போனால் மூல சிருஷ்டிப்பில் உள்ள எந்த ஒரு ஜீவராசிக்கும் தொப்புள் கிடையாது. இயேசுவுக்கும் தொப்புள் கிடையாது. ஏனென்றால் அவர் ஆண் பெண் உறவின்றி பிறந்தார். ஜீவராசிகளில் குட்டிப்போடும் பிராணிகளுக்கு முதல் பிரசவத்தில் பிறக்கும் குழந்தைகளுக்கு தொப்புள் உருவாகியது. ஏனென்றால் இந்த குழந்தைகள் தங்கள் தாயிடமிருந்து ஆகாரத்தை பெற வேண்டியதாயிற்று. இயேசு, மரியாளிடமிருந்து தன் ஆகாரத்தை பெறவில்லை. வயிற்றிலிருந்து வெளிவந்த பின்புதான் மரியாளிடமிருந்து ஆகாரம் பெற்றாள். மரியாளின் வயிற்றில் அவருக்கும் அவளுக்கும் தொடர்பு எதுவும் இல்லை. அங்கு ஒரு சரீரம் ஆயத்தம் பண்ணப்பட்டது. மரியாளின் வயிற்றில் அவருக்கும் அவளுக்கும் தொடர்பு இருந்திருக்குமானால் அவர் பாவத்தில் பிறந்தவராகிவிடுவார்.

63. இப்பொழுது கவனியுங்கள் மனிதனுடைய சரீரம் ஏதேன் தோட்டத்திற்கு ஒப்பானது. தோட்டத்தின் மத்தியில் ஜீவவிருட்சம், நன்மை தீமை அறியத்தக்க விருட்சம். மானிட சரீரத்தின் மத்தியில் இனஅபிவிருத்திக்கான ஆண் பெண் குறி. இது ஜீவ வழியாகவும், மரண வழியாகவும் ஆட்கொள்ளப்படுகிறது. ஜீவவழி ஜீவவிருட்சம். மரண வழி நன்மை தீமை அறியத்தக்க விருட்சம். ஜீவ வழி மூலமாக ஆண் பெண் குறி பிள்ளை பெறுவதற்காக அதாவது இனஅபிவிருத்திக்காக உபயோகப்படுத்தப்படுகிறது. மரணவழி மூலமாக அந்த அவயவங்கள் மாம்ச இச்சையோடு சிற்றின்பதிற்காக உபயோகப்படுத்தப்படுகிறது. பாருங்கள் மரணமும் ஜீவனும் ஒரே இடத்தில். இனஅபிவிருத்திக்கான உணர்ச்சி தேவனிடமிருந்து வருகிறது. மாம்ச இச்சையாகிய சிற்றின்ப உணர்ச்சி சாத்தானிடமிருந்து வருகிறது. மாம்ச இச்சை பிதாவினுடையது அல்ல (1 யோ 1 : 16) இனஅபிவிருத்திக்காக ஆண் பெண் சேர்த்தல் ஜீவவழி. ஏனென்றால் நீங்கள் பலுகி பெருகி பூமியை நிரப்பவே ஆசீர்வதிக்கப்பட்டீர்கள் (ஆதி 1 : 28) மாம்ச இச்சையோடு சிற்றின்பத்திற்காக ஆண் பெண் சேர்தல் மரண வழி. ஏதேன் தோட்டத்தில் சாத்தான் மரண வழியைத்தான் ஏவாளுக்கு கற்பித்தான். நாமும் இனஅபிவிருத்தி அவயவங்களை மாம்ச இச்சையோடே சிற்றின்பத்திற்காக அனுபவித்து, சாத்தான் ஏவாளுக்கு கற்றுக்கொடுத்த அதேபாவத்தைத் தான் செய்கிறோம். எல்லோரும் வழிதப்பி ஏகமாய் கெட்டுப்போனார்கள் (ரோ 3 : 12) எல்லோரும் பாவம் செய்து தேவமகிமையற்றவர்களானார்கள் (ரோ 3 : 23).

64. தேவனாகிய கர்த்தர் மானிட சரீரத்தில் பல அவயவைங்களை உருவாக்கி ஒவ்வொன்றிற்கும் தனிதனியான பணிகளை கொடுத்தார். ஒரு அவயவமானது அது உண்டாக்கபட்டதன் நோக்கத்தை விட்டுவிட்டு மற்றொரு அவயவத்தின் பணியில் ஈடுபடுவது பாவமே. எப்படியெனில் தீமையை பாவம் என்றும் நன்மையை தீமையென்றும் சொல்லி ; இருளை வெளிச்சமும், வெளிச்சத்தை இருளுமாக பாவித்து ; கசப்பை தித்திப்பும், தித்திப்பை கசப்பும் என்று சாதிக்கிறவர்களுக்கு ஐயோ (ஏசா 5 : 20). அவ்வாறாகவே ஒருவன் தன்னை ஐந்து வகையான ஊழியத்தில் ஒருவன் என்று கூறிக்கொண்டு ஐந்து வகை ஊழியத்திலும் தன் மூக்கை நுழைப்பது அவனுக்கு பாவமே. பாஸ்டர், சுவிசேஷகனுடைய ஊழியத்தை செய்வது பாவமே.

65. **விருட்சம் :** தேவனாகிய கர்த்தர் பார்வைக்கு அழகும், புசிப்புக்கு நலமுமான சகலவித விருட்சங்களையும் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தையும் பூமியிலிருந்து முளைக்கப்பண்ணினார் (ஆதி 2 : 9) விருட்சம் எப்பொழுதும் மரங்களையே குறிப்பதில்லை. விருட்சங்கள் மனிதர்களையும் குறிக்கிறது. தியானியுங்கள் சங் 1 : 3, ஏசா 61 : 31, எரே 17 : 7,8, மத் 3 : 10, மாற் 8 : 24, எண் 24 : 6 ஆவிக்குரியவைகளை ஆவிக்குரியவைகளோடு சம்மந்தப்படுத்தும்போது, இங்கு பார்வைக்கு அழகும், புசிப்புக்கு நலமுமான சகல வித விருட்சங்கள் என்பது தேவபுத்திரர்களை குறிக்கிறது. ஜீவ விருட்சம் என ஒருமையில் கூறப்பட்டுள்ளது. நித்திய ஜீவன் ஒன்றே. அது தேவன். ஜீவ விருட்சம் ஜீவனை கொடுக்கும் கிறிஸ்துவை குறிக்கிறது. இயேசு நானே ஜீவன் என்கிறார் (யோ 14 : 6, 11:25) இவர் நித்திய ஜீவன் (1 யோ 5 : 20) குமாரனை உடையவன் நித்திய ஜீவனை உடையவன் (1 யோ 5 : 12) நித்திய ஜீவனை உடையவன் ஆவியின் கனிகளை உடையவன். கிறிஸ்துவை உடையவன் தன் மாம்சத்தையும், அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறான் (கலா 5 : 22 - 24).

66. ஜீவவிருட்சம் (The Tree of Life) குறித்து ஆதியாகமத்தில் மூன்று தடவைகளும், வெளிப்படுத்தின

விசேஷத்தில் மூன்று தடவைகளும் காணப்படுகின்றன இந்த ஆறு இடங்களிலும் இது ஒரே அர்த்தத்தை உடையதாகவே இருக்கிறது. ஆதாம் ஜீவவிருட்சமாகிய கிறிஸ்துவை சார்ந்து ஜீவிக்க வேண்டியவனாய் இருந்தான். கிறிஸ்து என் மாம்சத்தை புஷித்து என் இரத்தத்தை பானம் பண்ணுகிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு என்றார் (யோ 6 : 54). ஒருவன் என் வார்த்தையை கைக்கொண்டால், அவன் என்றென்றைக்கும் மரணத்தை காண்பதில்லை என்கிறார். (யோ 8 : 51). இவர்தான் ஜீவ அப்பம் (Bread of Life யோ 6 : 35) இவர் ஜீவநீருற்று (Well of Life யோ 4 : 14) இவர் நித்தியஜீவன் (Eternal Life 1 யோ 5 : 20) என் மாம்சம் மெய்யான போஜனம். என் இரத்தம் மெய்யான பானம் என்கிறார். (யோ 6 : 55) என் மாம்சத்ததை புசித்து, என் இரத்தத்தை பானம் பண்ணுகிறவன் என்னிலே நிலைத்திருக்கிறான் ; நானும் அவனிலே நிலைத்திருக்கிறேன் என்கிறார் (யோ 6 : 56) என்னை புசிக்கிறவன் என்னாலே பிழைப்பான் என்கிறார் யோ 6 : 57. நானே வானத்திலிருந்து இறங்கின ஜீவ அப்பம். இந்த அப்பத்தை புசிக்கிறவன் என்றென்றைக்கும் பிழைப்பான். நான் கொடுக்கும் அப்பம் உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் என் மாம்சம் என்கிறார் (யோ 6 : 51) ஜீவ விருட்சம் இயேசு கிறிஸ்து. தேவன் நமக்கு நித்திய ஜீவனை தந்திருக்கிறார். அந்த ஜீவன் அவருடைய குமாரனில் இருக்கிறது. குமாரனை உடையவன் ஜீவனை உடையவன். குமாரன் இல்லாதவன். ஜீவன் இல்லாதன் (1 யோ 5 : 11, 12). உன் தேவனாகிய கர்த்தர் உனக்கு ஜீவனும் தீர்க்காயுசுமானவர் (உபா 30 : 20). அப்படியானால் நன்மை தீமை அறியத்தக்க விருட்சம் ஒரு மனிதனாகவே இருக்கவேண்டும். அது தான் சாத்தான். நீதியும் அநீதியும் ஏதேன் தோட்டத்து நடுவிலே.

67. பாவத்தில் ஆதாமும் ஏவாளும் விழுந்ததன் காரணமாக அவர்களுக்கு கிடைக்கப்பெறாத ஏதேன் தோட்டத்தின் ஜீவவிருட்சம் இப்பொழுது ஜெயம் கொள்ளுகிறவனுக்கு அளிக்கப்படுகிறது. ஆவியானவர் சபைக்கு சொல்லுகிறதை காதுள்ளவன் கேட்கக்கடவன் ; ஜெயம் கொள்ளுகிறவன் எவனோ அவனுக்கு தேவனுடைய பரதீசின் மத்தியில் இருக்கிற ஜீவ விருட்சத்தின் கனியை புசிக்க கொடுப்பேன் (வெளி 2 : 7) யுத்தம் ஓய்ந்து, கடைசி எக்காளம் தொனித்தப்பிறகு, நம்முடைய ஆயுதங்களை நாம் கீழே வைத்து விட்டு, தேவனுடைய பரதீசில் இளைப்பாறி ஜீவவிருட்சத்தின் கனியில் எப்பொழுதும் பங்கு கொள்ளுவோம்.

68. நன்மை தீமை அறியத்தக்க விருட்சம் சாத்தான். இவன் தேவனுடைய தோட்டமாகிய ஏதேனில் இருந்தான் (எசே 28 : 13) இவன் ஞானத்தால் நிறைந்தவனும், பூரண அழகுள்ளவனுமாய் இருந்தான் (எசே 28 : 12) இவனையுடையவன் மாம்சத்தின் கிரியைகளை உடையவனாய் இருக்கிறான் (கலா 5 : 20, 21)

69. ஆக இச்சையடக்கமும் விபச்சாரமும் : அன்பும் பொறாமையும் : சமாதானமும் கொலையும் ஏதேன் தோட்டத்தில் இருந்தது. மேலும் கவனியுங்கள். அது அடுத்து அடுத்து அல்ல மாறாக நடுவில் இருந்தது. இரு விருட்சங்களில் ஏதாவது ஒன்றை நீ தெரிந்துக்கொள்ள வேண்டும். இயேசு கிறிஸ்து உன் உள்ளத்தில் இருக்கும் போது அங்கு சாத்தானுக்கு இடம் இல்லை. சாத்தான் உன் உள்ளத்தில் குடிக்கொண்டிருக்கும் போது அங்கு கிறிஸ்துவுக்கு இடமில்லை. இரு விருட்சங்களும் மனிதனுடைய ஜிவித்தோடு சம்மந்தப்பட்டது. தேவனுடைய திட்டமும் நோக்கமும் நிறைவேற இவ்விரண்டும் காரணமாய் இருந்தன. கோதுமை கதிரோடு களையும் வளர்க்கிறது போன்று இவ்விருவரும் வளர்கிறார்கள். ஜீவவிருட்சத்தினால் மனுஷன் வாழ வேண்டும். நன்மை தீமை அறிய தக்க விருட்சத்தினால் மனுஷன் சாகவேண்டும். எப்படியெனில் நான் உங்கள் முன்னே ஜீவ வழியையும் மரண வழியையும் வைக்கிறேன் (எரே 21 : 8) இதோ ஜீவனையும் நன்மையும் : மரணத்தையும் தீமையையும் இன்று உனக்கு முன்பாக வைத்தேன் (உபா 30' 15) ஆதாம் மரணத்தை பிறப்பிக்கும் தீமையாகிய நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியை விலக்கி ஜீவனை கொடுக்கும் நன்மையாகிய ஜீவவிருட்சத்தின் கனியை சார்ந்து ஜீவிக்கும்படி கட்டளை பெற்றான். ஆனால் அவனோ மரணத்தை தெரிந்துக்கொண்டான்.

70. **தேவனுடைய கட்டளை :** தேவனாகிய கர்த்தர் மனுஷனை நோக்கி : நீ தோட்டத்தில் உள்ள சகல விருட்சத்தின் கனிகளையும் புசிக்கவே புசிக்கலாம். ஆனாலும் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியை புசிக்க வேண்டாம். அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார். (ஆதி 2 : 16, 17) ஆதாம் இக்கட்டளையை ஏவாள் உருவாக்கப்படும்முன் பெற்றான். இந்த கட்டளைப் பெற்ற சமயத்தில் ஆதாம் ஆணும் பெண்ணுமாக இருந்தான். ஏதேன் தோட்டத்தின் நடுவில் கிறிஸ்துவும், சாத்தானும் இருந்தனர். நடுவில் இரு விருட்சங்கள் எப்படி நிற்க முடியும்? உன் இருதயமாகிய தோட்டத்தில் ஜீவ விருட்சமாகிய கிறிஸ்து ஜீவித்தால், நீ அவருடையவனாய் இருந்தால், நீ ஆவிக்குரிய கனிகளை உடையவனாய் அன்பு, சந்தோஷம், இச்சையடக்கம், சமாதானம், தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், நீடிய பொறுமை போன்ற கனிகளை கொடுப்பாய். (கலா 5 : 22, 23) ஜீவவிருட்சமாகிய கிறிஸ்துவை சார்ந்து ஜீவிப்பாய். அங்கு நன்மை தீமை அறியத்தக்க விருட்சமாகிய சாத்தானுக்கு இடமில்லை. ஏனென்றால் அவனுடைய கனி மாம்சத்தின் கிரியைகளாகிய விபச்சாரம், வேசித்தனம், காமவிகாரம், பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள் போன்றவையாகும். (கலா 5 : 19-21)

71. இதை சற்று சுருக்கமாக சொல்லப்போனால் ஆதாம் ஆவிக்குரிய கனிகளை மட்டும் சார்ந்து ஜீவிக்கவும், மாம்ச கிரியைகளை சார்த்து ஜீவிக்கக்கூடாது எனவும் கட்டளை பெற்றான். ஏனென்றால் மாம்சத்தின்படி நடவாமல், ஆவியின்படி நடக்கிறவர்களுக்கு ஆக்கினை தீர்ப்பு இல்லை. ( ரோ 8 : 1). மாம்ச சிந்தை மரணம். ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமும் (ரோ 8 : 6). மாம்ச சிந்தை தேவனுக்கு விரோதமான பகை (ரோ 8 :

7). மாம்சத்தின் படி பிழைத்தால் சாவு. ஆவியினாலே சரீரத்தின் செய்கைகளை அழித்தால் ஜீவன் (ரோ 8 : 14) இதோ ஜீவனையும் மரணத்தையும், நன்மையையும் தீமையையும் இன்று உனக்கு முன்பாக வைக்கிறேன் என்று கர்த்தர் கூறுகிறார். (உபா 30 : 15). ஆப்பிள் பழம் தின்றது. பெண்கள் தாங்கள் நிர்வாணிகள் என்று உணர செய்திருக்குமானால், நீங்கள் மீண்டும் அந்த ஆப்பிள் பழங்களை பெண்களுக்கு கொடுப்பது நலம்.

72. **ஏவாள் :** தேவனாகிய கர்த்தர் மனுஷன் தனிமையாய் இருப்பது நல்லதல்ல, ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன் என்று கூறி (ஆதி 2 : 18) ஆதாமுக்கு அயர்ந்த நித்திரையை வரச்செய்தார். அவன் நித்திரையடைந்தான். அவர் அவன் விலா எலும்புகளில் ஒன்றை எடுத்து அந்த இடத்தை சதையினால் அடைத்தார். பின்பு மனுஷனில் எடுத்த விலா எலும்பை மனுஷியாக உருவாக்கி, அவளை மனுஷனிடத்தில் கொண்டு வந்தார் (ஆதி 2 : 21, 22) ஆதாமில் இருந்த பெண் தன்மை இப்பொழுது வேறுபிரிக்கப்பட்டது. இவள் மனுஷி என்று அழைக்கப்பட்டாள். இவள் ஜீவனுள்ளோர்களுக்கெல்லாம் தாயானவள். ஆதலால் ஏவாள் என்று பின்பு அழைக்கப்பட்டாள் (ஆதி 3 : 20) இவள் புருஷனிலிருந்து தோன்றினவள் (1 கொரி 15 : 8) மனுஷனுக்கு ஏற்ற துணையாக உருவாக்கப்பட்டாள் (ஆதி 2 : 18) இவள் புருஷனுக்காக சிருஷ்டிக்கப்பட்டாள் (1 கொரி 11 : 9) இவள் புருஷனுடைய மகிமையானவள் (1 கொரி 11 : 7) ஆதாமின் சரீரத்திலிருந்து ஒரு விலா எலும்பு எடுக்கப்பட்டபடியால், ஸ்திரீயின் உடல் உள்ளமைப்பில் மனிதன் எலும்பில் இருப்பதைவிட கூடுதலாக ஒரு விலா எலும்பு உள்ளது.

73. இவள் ஒரு மூலசிருஷ்டிப்பு (Original Creation) கிடையாது. இவள் ஒரு உபசிருஷ்டிப்பு (By Product) அனைத்து ஜீவஜந்துகளில் ஆணும் பெண்ணும் சிருஷ்டிக்கப்பட்டது. ஆனால் மனுக்குலத்தில் மட்டும் பெண் மூலசிருஷ்டிப்பில் இல்லை. மூலசிருஷ்டிப்பு எதுவும் பாவம் செய்ய முடியாது. ஆதலால் தான் ஏவாள் ஒரு உபசிருஷ்டியாக உருவாக்கப்பட்டாள். அப்படியானால் தேவன் அநீதி உள்ளவரா? தேவனுடைய **மீட்பர் (Redeemer)** என்ற தன்மை (Attribute) வெளிப்பட, ஏவாள் மீறுதலுக்குட்பட வேண்டியவளாய் இருந்தாள். அதலால் தான் இவள் சாத்தானுடைய தந்திரத்தினால் வஞ்சிக்கப்பட்டு மீறுதலுக்குட்பட்டாள் (1 தீமோ 2 : 14) ஆனாலும் மணவாட்டி கிறிஸ்துவின் ஒரு பாகம் போன்று இவளும் ஆதாமின் ஒரு பாகமாக இருந்தாள்.

74. தேவனுடைய வார்த்தையை நாம் அர்த்தம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. நாம் அதை அப்படியே விசுவாசிக்க வேண்டும். **ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனை பெறுவாள்.** என்று கூறப்பட்டுள்ளதை (ஏசா 7 : 14) நாம் அப்படியே விசுவாசிக்க வேண்டும். அது எப்படி என்று கேள்வி கேட்க கூடாது. அது தேவனுடைய வார்த்தை, ஆதலால் அது எப்படியும் நிறைவேறும். ஆனால் அது எப்படி நிறைவேறும் என நமக்கு தெரியாது. ஆனால் நம்பிக்கை, விசுவாசம் தேவனுடைய வார்த்தையின் மேல் நமக்கு வேண்டும். தேவன் ஒன்றை கூறுவாரென்றால் அத்துடன் அது முடிந்துவிட்டது. அது கூறப்பட்டவாரே நாம் அதை விசுவாசிக்கவேண்டும். ஆனால் ஏவாள் தான் ஒரு வேதபண்டிதனாக விரும்பினாள். அவளுக்கு தேவன் கொடுத்த அறிவை காட்டிலும் இன்னும் அதிகமாக பெற்றுக்கொள்ள விரும்பினாள். தேவன் கொடுத்தது போதும் என்ற மனப்பான்மை அவளிடத்தில் இல்லை. அதன் விளைவாக காட்டு மிருகத்தினால் / சாத்தானால் வஞ்சிக்கபட்டாள். ஸ்திரீக்கு வித்து இல்லை. வித்து விதைக்கப்படுவதற்கு அவளிடம் நிலம் உள்ளது. வித்து மனிதனில் உள்ளது. அதன் காரணமாகத்தான் சர்ப்பத்தின் வித்து ஒரு ஸ்திரீயில் வைக்கப்படவேண்டியிருந்தது. ஆனால் அது தேவனுடைய வித்து அல்ல.

75. ஏவாள் சாத்தானின் அரசியாக மாறினாள். எப்படியெனில் ஆதாம் ஏவாளை அறியும்முன் சாத்தான் அவளை அறிந்தான் . அவளை வஞ்சித்தான். ஆதாம் அவளை அறியும் முன்பு சர்ப்பமாகிய சாத்தான் அவளை கர்ப்பமாக்கினான். அப்பொழுது அவள் தன்னை நிர்வாணி என அறிந்துக்கொண்டாள். ஆண் பெண் உடலுறவு என்ன என்பதை அறிய, அதை இச்சித்ததால், பரிசுத்தம் என்னும் திரை அவளை விட்டு நீங்கியது. இச்சையென்னும் திரையை அவள் அணிந்துகொண்டாள். ஆனால் அது பிதாவினால் கொடுக்கப்பட்டது அல்ல. ஏனென்றால் அது பிதாவினால் உண்டானதல்ல. இந்த இச்சையென்னும் சக்தியின் மூலம் ஏவாள் ஆதாமை பாவத்தில் வீழ்த்த சாத்தான் ஏவாளை உபயோகப்படுத்தினான். தேவனுடைய வார்த்தையில் ஒன்றை சந்தேகிக்க செய்து சாத்தான் ஏவாளை வஞ்சித்தான். கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் பிசாசுகள் கிரியை செய்கின்றன. ஏவாள் தேவனுடைய வார்த்தைக்கு எதிராக சாத்தானின் அறிவை விசுவாசித்தாள். இதனால் தன் இனமாகிய மானிட வர்க்கம் இயற்கை மரணமடையக் காரணமாய் இருந்தாள். ஜீவனை புறக்கணித்து மரணத்தை ஏற்றுக்கொண்டாள். ஏவாள் தேவனுடைய வார்த்தையை அவிசுவாசித்தபோது அது அவளை தேவனிடமிருந்து பிரித்தது. அப்பொழுதே அவளுக்குள் பிசாசின் ஜீவன் குடிக்கொண்டுவிட்டது. ஏனென்றால் அவள், சாத்தான் கூறிய பொய்யை விசுவாசித்தாள்.

76. சிருஷ்டிப்பில் ஒரு ஆண் (ஆதாம்) ஒரு பெண் (ஏவாள்)., ஒரு ஆண் குதிரை, ஒரு பெண் குதிரை. ஒரு ஆண் கிளி, ஒரு பெண் கிளி. எல்லாவற்றிலும் ஒரு ஜோடு மாத்திரமே சிருஷ்டிக்கப்பட்டது. பாருங்கள் நட்சத்திர கூட்டங்கள், சூரியன், சந்திரன், கிரகங்கள் எல்லாமே பூரண ஒழுங்கில் சென்றுக்கொண்டிருந்தது, சென்றுக்கொண்டிருக்கின்றன. எதுவுமே ஒழுங்கு தவறியிருக்கவில்லை. அவைகளில் ஒன்று தன் சூழற்பாதையை விட்டுச்சென்றால், திட்டம் அனைத்தும் தாறுமாறாக கூடும். ஆனால் இந்த பெண் நிமித்தமாக, பூமிக்கான திட்டம் அனைத்தும் தேவனுடன் தொடர்ச்சியற்ற நிலைக்கு கொண்டுவந்து விட்டது. ஸ்திரீ தேவனுடைய குடும்பத்தில் பிரிவினை உண்டாக காரணமாயிருந்தாள். இன்றும் அவளே அநேக குடும்பங்களில்

பிரிவினை உண்டாக்க காரணமாயிருக்கிறாள். ஆதாம் குடும்பத்தை உடைக்கவில்லை. ஏவாளே அதை செய்தாள். அப்பொழுதுதான் மனிதன் ஸ்திரீயை ஆண்டுக்கொள்வான் என்று தேவனுடைய வார்த்தை உரைத்தது. அவள் இனி ஒருபோதும் அவனுடன் சமமானவள் அல்ல. ஆதியில் அவள் அவனுடன் சமமாய் இருந்தாள். ஆனால் அவள் தேவனுடைய வார்த்தையை மீறினபோது, மனிதன் அவளை ஆளும்படி தேவன் செய்தார். அன்று முதல் அவள் மனிதனுக்கு சமமானவள் அல்ல. அவள் மனிதனுடன் சமமானவளாய் இருந்தாள். ஆனால் அவள் பாவம் செய்தபோது மனிதனுடன் அவளுக்கு இருந்த சமநிலையை இழந்து விட்டாள்.

77. **சாத்தான் :** இவன் தேவனுடைய ஒரு சிருஷ்டிப்பு (எசே 28 : 15) இவன் சாத்தானாக சிருஷ்டிக்கப்படவில்லை. இவன் காப்பாற்றுகிறதற்காக அபிஷேகம் பண்ணப்பட்ட கேரூப். தேவனுடைய பரிசுத்த பர்வதத்தில் இருந்தான் (எசே 28 : 14) அதாவது தேவனுடைய சிங்காசனத்தை மூடிக்கொண்டிருந்த கேரூப். இவன் ஞானத்தால் நிறைந்தவன். பூரண அழகுள்ளவன் (எசே 28 : 12) தேவதூதர்களிலே மிகவும் அழகுள்ளவன். இவன் தானியேலை பார்க்கிலும் ஞானவான். ஆதலால் இரகசியமானது ஒன்றும் இவனுக்கு மறைபொருள் இல்லை (எசே 28 : 3) தன் அழகினால் இவன் இருதயம் மேட்டிமையானது. தன் மினுக்கினால் தன் ஞானத்தை கெடுத்தான் (எசே 28 : 17) இவன் இருதயம் மேட்டிமைக்கொண்டது. சாத்தான் (லூசிபர்) தேவனுடைய மூல பிரதான தூதனானவன். ஒரு சமயத்தில் அவன் பரலோகத்தில் வாசம் செய்தான். தேவனுக்கு அடுத்ததான காரியங்களில் அவன் ஒரு மிக பெரிய நபராக இருந்தான். தேவனுடன் ஐக்கியமாக, தேவனுடைய வலது கரமாக விளங்கினான். ஆதலால் அவன் தன் இருதயத்தில் மேட்டிமை கொண்டவனானான். இன்றைக்கும் தேவன் ஒரு ஊழியக்காரனை / மனிதனை ஆசீர்வதித்து அவர் பேரில் சிறிது நம்பிக்கை வைப்பாரானால், அவன் தனக்கு எல்லாம் தெரியும், தான் எல்லாம் அறிந்த ஒரு நபர் என பெருமை பட்டு மேட்டிமை கொள்வதை, தலைகால் தெரியாமல் ஆடுகிறதை காண்கிறோம். லூசிபர் தன் இருதயத்தை தேவனின் இருதயத்ததைப் போலாக்கினான் (எசே 28 : 2) இவன் சிருஷ்டிக்கப்பட்ட நாள் துவங்கி, இவனில் அநியாயம் கண்டுபிடிக்கப்படும் மட்டும் தன் வழிகளில் குறையற்றிருந்தான் (எசே 28 : 15) நான் மேகங்களுக்கு மேலாக உன்னதங்களில் ஏறுவேன், உன்னதமானவருக்கு ஒப்பாவேன் என்று தன் இருதயத்தில் சொன்னான் (ஏசா 14 : 4) தேவனைப்போல் தானும் ஆராதிக்கப்பட வேண்டும் என எண்ணினான். தேவன் மனுஷனுக்குள் தங்குவதை போன்று சாத்தானும் தங்க ஆவல் கொண்டான். இந்த செயலினால், முதல் முதலாக பரலோகத்தில் பாவம் ஆரம்பமாயிற்று. இவனும் இவனது சகாக்களும் ஆகாதவர்களென்று தள்ளப்பட்டார்கள். வானத்திலிருந்து தரையிலே விழவெட்டப்பட்டார்கள். (எசே 28 : 16, ஏசா 14:12)

78. இவன் பெயர் லூசிபர் (ஏசா 14 : 12) இவன் எபிரேய பாஷையிலே **அபெத்தொன்** (Abaddon) என்றும் கிரேக்க பாஷையிலே **அப்பொல்லியோன்** (Apoliyon) என்றும் அழைக்கப்படுகிறான் (வெளி 9 : 11) இவன் தன் ஆதி மேன்மையை காத்துக்கொள்ளாமல், தங்களுக்குரிய வாசஸ்தலத்தை விட்டுவிட்ட தூதர்கள் அனைவருக்கும் தலைவன். ஆதலால், பிசாசுகளின் தலைவனான். ஆதலால் **பெயெல்சேபூ** (Beelzebul) என்றும் அழைக்கப்படுகிறான். இவனுக்கு **பேலியாள்** (Belial) என்ற பெயரும் உண்டு (மத் 12 : 24, 2 கொரி 6 : 15) இவன் **ஆகாயத்து அதிகாரப் பிரபு** (Prince of powers of the Air) எபே 2 : 2 இவன் இந்த உலகத்தின் அதிபதி (Prince of this world) யோ 14 : 30. இவனுக்கு உலத்தின் சகல இராஜ்யங்களின் மேல் உள்ள அதிகாரமும், அவைகளின் மகிமையும் ஒப்புகொடுக்கப்பட்டிருக்கிறது. என்று முதல்? ஆதாம் தன் ஸ்தானத்தை ஏதேன் தோட்டத்தில் இழந்தது முதல். இப்பொழுது அவன் தனக்கு இஷ்டமானவர்களுக்கு இராஜ்யங்களின் மேல் உள்ள அதிகாரத்தையும், மகிமையும் கொடுக்கிறான் (லூக் 4 : 5, 6) அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவுக்கும், இந்திய பிரதமர் டாக்டர். மன்மோகன் சிங்குக்கும், தமிழக முதல்வர் கருணாநிதிக்கும் இவனே இராஜ்யங்களையும் அதிகாரங்களையும் கொடுக்கிறான்.

79. லூசிபர் வானத்திலிருந்து உதைத்து பூமியிலே தள்ளப்பட்டான். அவன் எந்த நோக்கத்திற்காக பரலோகத்தில் பிரயாசப்பட்டானோ அந்த நோக்கத்தை அவன் பூமிக்கு வந்த பிறகு நிறைவேற்றிக்கொள்ள அவன் தன்னால் இயன்ற அளவுக்கு முயற்ச்சித்து, இராஜாக்களிடம், அதிபதிகளிடம், பிறகு நேராக சபைக்கு வந்து பிரசங்கபீடத்தை அடைந்து, பின் சபையின் மத்தியில் சென்று தன் நோக்கத்தை நிறைவேற்றினான். இப்பொழுது வானத்தின் கீழ் உள்ள ஒவ்வொரு தேசத்தையும் பிசாசு தன் கட்டுக்குள் வைத்துள்ளான் (மத் 4 அதி) தேவனாலும், பிரதான தூதனாகிய மிகாவேலாலும் சாத்தானும் அவனுடைய தூதர்களும் வெளியே மிதித்து தள்ளப்பட்டார்கள். அவன் பூமிக்கு தள்ளப்பட்டான். பூமிக்கு வந்த பிறகு சர்ப்பத்துக்குள் புகுந்து கொண்டு ஏவாளை வஞ்சித்தான். பூமியிலே தள்ளபட்ட லூசிபரால் பூமியானது ஒழுங்கின்மையும், வெறுமையுமாயிற்று (ஆதி 1 : 2) ஏதேன் தோட்டம் உருவாக்கப்பட்டபின் (ஆதி 2 : 8) இவன் அங்கு தன் ஸ்தானத்தை பெற்றான். இவன் கர்த்தருடைய சந்நிதியில் வந்து நிற்கக்கூடியவன் (யோபு 2 : 1) ஏதேன் தோட்டத்தில், தேவனால் சபிக்கப்படும் முன் இருந்த காட்டு மிருகத்திற்குள் நுழைந்தான். இவனால் தான் அந்த மிருகமானது தந்திரமுள்ளதாயிற்று. அதற்கு முன் அது அப்படி அல்ல. சாத்தான் மனிதனுக்குள்ளும், மிருகங்களுக்குள்ளும் இருந்து தன் கிரியைகளை நடப்பிக்கிறான். (மத் 8 : 28-32, லூக் 22 : 3) பாருங்கள் சாத்தானின் ஆவி அந்த காட்டு மிருகத்துக்குள் குடிகொண்டு தன் கிரியைகளை நடப்பித்தது. எப்படியெனில் இயேசு மாம்சத்தில் இந்த உலகத்தில் சுற்றித்திரிந்தபோது அவருக்குள் இருந்தது தேவ ஆவி. தேவனுடைய ஆவி இயேசு என்று அழைக்கப்பட்ட அந்த மாம்ச சரீரத்துக்குள் / கூடாரத்துக்குள் பிரவேசித்து, தன் கிரியைகளை நடப்பித்தார். தம்முடைய மீட்பின் திட்டத்தை நிறைவேற்றினார் (எபி 10 : 5, 1 தீமோ 3 : 16, யோ 10 : 38) ஆதலால் தான் பிலிப்பிடம் இயேசு : என்னைக்கண்டவன் பிதாவை கண்டான் என்றார் (யோ 14 : 9)

அதேபோன்று சாத்தானின் / லூசிபரின் ஆவி அந்த காட்டு மிருகத்துக்குள் பிரவேசித்து தன் கிரியைகளை நடப்பித்தது. மனுக்குலத்திற்குள் மரணத்தை பிறப்பித்தது. அந்த காட்டு மிருகத்தை கண்டவன் சாத்தானைக் கண்டான். இது எப்படியெனில் சாத்தான் ஒருவனுடைய ஆத்துமாவுக்குள் வந்து குடிக்கொண்டு, தன் சுபாவத்தையும், தன்மையையும் அவனுக்கு கொடுக்கிறான். ஆதலால் தான் வெளி 20 : 2 ல் பிசாசு என்னும் சாத்தான் என்னும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய வலுசர்ப்பம் என்று வாசிக்கிறோம்.

80. **இவன் தேவனுடைய வார்த்தையை மாற்றுவது கிடையாது. ஒருவனை தேவனுடைய வார்த்தையை விட்டு விலகச்செய்ய, வார்த்தையையே உபயோகித்து, வார்த்தைக்கு தவறாக வியாக்கியானம் கொடுத்து மக்களை வஞ்சிப்பான் (ஆதி 3 : 4,5)** இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி : நீங்கள் புறப்பட்டு போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே ஞானஸ்நானம் கொடுங்கள் என கூறி (மத் 28 : 19) சத்திய ஆவி வரும்போது, அவர் உங்களை சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்துவார் (யோ 16 : 13) நான் உங்களுக்கு சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார் என்றார் (யோ 14 : 26) பெந்தெகொஸ்தே நாளான்று பரிசுத்த ஆவி இறங்கி, அவர்களை சத்தியத்திற்குள் வழிநடத்தினார். சத்திய ஆவியின் வழிநடத்துதலின்படி அவர்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் பாவமன்னிப்புகென்று ஞானஸ்நானம் கொடுத்தார்கள். (அப் 2 : 38) ஆனால் சாத்தான், ஐயோ் இது தவறு. நாம் கர்த்தருடைய வார்த்தைக்கே கீழ்ப்படிய வேண்டும். சீஷர்களுக்கு முக்கியதுவம் கொடுக்கவேண்டியதில்லை. சீஷர்கள் பிதா குமாரன் பரிசுத்தாவியின் நாமத்தினாலே ஞானஸ்நானம் கொடுத்ததை இப்படி கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமம் என எழுதிவிட்டார்கள் என ஒரு தவறான வியாக்கியானம் கொடுத்து அல்லது சீஷர்களை காட்டிலும் கர்த்தர் சொன்னதிற்கே நாம் கீழ்ப்படியவேண்டும் என மக்களை திசைதிருப்பி, அவர்கள் தங்கள் பாவ மன்னிபுக்கென்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெறாதபடிக்கு தடுத்துவிடுகிறான். வஞ்சித்து வருகிறான். வேதவாக்கியங்களின் அடிப்படையில் கிறிஸ்தவ ஸ்தாபனசபை விசுவாசிகள் யாருடைய பாவமும் மன்னிக்கப்படவில்லை. அவர்கள் இன்னும் பாவத்திலே நிலைகொண்டிருக்கிறார்கள். இந்த தொழிலைதான் அன்று ஏதேன் தோட்டத்தில் ஏவாளிடத்தில் செய்தான். அவளும் அவனுக்கு செவிக்கொடுத்து மீறுதலுக்குட்பட்டாள். இன்று ஜனங்களும் திரித்துவ ஸ்தாபனசபைகளுக்கு செவிக்கொடுத்து மீறுதலுக்குட்படுகிறார்கள்.

.

81. இவனை குறித்து பிசாசு என்றும் சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய வலுசர்ப்பம் என வெளி 20 : 2 ல் தியானிக்கிறோம்.சாத்தான் தானே இந்த பூமியையும் வாயு மண்டலங்களையும் ஆளுகை செய்யும் அதிகாரத்தை பெற்று, அதை ஆளுகை செய்து வருகிறபடியால் தான் எங்கும் முரட்டாட்டங்கள், இழிவான செயல்கள், இரத்தம் சிந்துதல், யுத்தம், அழிவு, பாவம், விபச்சாரம் போன்ற எல்லா விதமான அசுத்தங்கள் நடந்துக்கொண்டிருக்கின்றன. பிசாசென்றும், சாத்தானென்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய வலுசர்ப்பத்தை அவர் பிடித்து, அதை ஆயிரம் வருஷமளவும் கட்டிவைத்து, அந்த ஆயிரம் வருஷம் நிறைவேறும் வரைக்கும், அது ஜனங்களை மோசம் போக்காதபடிக்கு அதை பாதாளத்திலே தள்ளிவைத்து, அதன் மேல் முத்திரை போட்டார் (வெளி 20 : 2) அந்த ஆயிரம் வருஷம் முடியும் போது சாத்தான் தன் காவலிலிருந்து விடுதலையாவான் (வெளி 20 : 7) பிசாசானவன், மிருகமும் கள்ள தீர்க்கதரிசியுமாயிருக்கிற இடமாகிய அக்கினியும், கந்தகமுமான கடலிலே தள்ளப்படுவான். அவர்கள் இரவும் பகலும் சதா காலங்களிலும் வாதிக்கப்படுவார்கள் (வெளி 20 : 10). பிசாசுக்காகவும், அவன் தூதர்களுக்காகவும் நித்திய அக்கினி ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிறது (மத் 25 : 41)

82. **சர்ப்பம் :** தேவனாகிய கர்த்தர் உண்டாக்கின சகல காட்டு மிருகங்களை பார்க்கிலும் சர்ப்பமானது தந்திரமுள்ளதாய் இருந்தது (ஆதி 3 : 1) இந்த மிருகமானது தேவனால் சபிக்கப்படும் முன் மனித குரங்கிற்கும் மனிதனுக்கும் இடையே உள்ள, மனிதனோடு மிக்க நெருக்கியதும் (Very very close to man) ஒற்றுமையுடயதுமான (Almost a man) ஒரு உருவத்தை உடையதாய், மனிதனைப்போற்று நிமிர்ந்து நிற்க கூடியதாய் (Upright Creature) மிகவும் அழகான சரீர அமைப்பை உடையதாய் (Very handsome) மனிதனோடு சம்பாஷித்து உறவாட கூடிய ஒரு மிருகமாய் இருந்தது. இந்த ஒரு மிருகம் மட்டும் மானிட வர்க்கத்தோடு உடலுறவு கொள்ளக்கூடியதாய் இருந்தது. ஏனென்றால் தேவனுடைய இரட்சிப்பின் தன்மை வெளிப்பட இது அந்த நடைமுறைக்கு ஏற்றதாக சிருஷ்டிக்கப்பட்டது. இந்த காட்டு மிருகத்திற்கு ஆத்துமா இருந்தது. ஆதலால் இது தான் நிர்வாணமாக இருப்பதை நன்கு அறிந்ததாக இருந்தது. இதன் கண்கள் திறக்கப்பட்டிருந்தது. ஆதலால் தான் ஏவாளின் நிர்வாணத்தைக்கண்டு அவள் மீது இச்சைக்கொண்டது. ஏவாளோடு உடலுறவு கொள்வதற்கென்று இது சிருஷ்டிக்கப்பட்ட ஒரு மிருகம். இந்த காரியத்திற்கு பின் இது சபிக்கப்பட்டது. இதனுடைய உருவமே தெரியாத அளவிற்கு மாற்றப்பட்டு இது சர்ப்பமாக்கப்பட்டது. God totally destroyed that pattern of that beast.

83. தேவனாகிய கர்த்தர் உண்டாக்கின சகல காட்டு ஜீவன்களை பார்க்கிலும் சர்ப்பமானது தந்திரமுள்ளதாய் இருந்தது (ஆதி 3 : 1) Serpent was more subtile than any beast of the field. இங்கு காட்டு ஜீவன்களை பார்க்கிலும் என்பது காட்டு மிருகங்களை பார்க்கிலும் என இருக்கவேண்டும். Subtile என்றால் சாமர்த்தியம் உள்ளவன், தந்திரசாலி, வஞ்சகம் உள்ளவன் என பொருள்படும். ஆக தேவனாகிய கர்த்தர் உண்டாக்கின சகல காட்டு மிருகங்களை பார்க்கிலும் சர்ப்பமானது தந்திரமுள்ளதாய் இருந்தது. சர்ப்பமானது தொடக்கத்தில் சர்ப்பமல்ல. மாறாக அது ஒரு காட்டு மிருகம். தேவன் அதை சபித்த பின் அது சர்ப்பமானது. இப்பொழுது கவனியுங்கள் தேவன் பூமியிலுள்ள ஜாதி ஜாதியான காட்டு மிருகங்களையும், நாட்டு மிருகங்களையும்

உண்டாக்கினார். தேவன் அது நல்லது என்று கண்டார். (ஆதி 1 : 24, 25) அப்படியானால் இந்த காட்டு மிருகம் எப்படி தந்திரமுள்ளதானது? பாருங்கள் லூசிபர் (சாத்தான்) தேவனுடைய பர்வத்திலிருந்து ஆகாதவனென்று தரையிலே (பூமியிலே) தள்ளப்பட்டான். Thou cutdown to the ground (ஏசா 14 : 12) Thou cost thee to the ground (எசே 28 : 16, 17) பூமியிலே / தரையிலே தள்ளப்பட்ட லூசிபர் / சாத்தான் அந்த காட்டு மிருகத்துக்குள் புகுந்து / நுழைந்து குடிக்கொண்டது. ஏதேன் தோட்டத்தில் எத்தனையோ மிருகங்கள் இருந்தன. ஆனால் அவன் ஒரு பன்றிக்குள், குதிரைக்குள், நாய்க்குள், சிங்கத்துக்குள், யானைக்குள், கழுதைக்குள் சென்று புகுந்துக்கொள்ளவில்லை. மாறாக அந்த காட்டு மிருகத்தை மாத்திரம் தெரிந்துக்கொண்டு அதற்குள் புகுந்து, அதன் சரீரத்தில் குடிகொண்டான். பொதுவாக மிருகங்களுக்கு அறிவு கிடையாது. அதற்கு ஆத்துமா கிடையாது. ஆதலால் அவைகள் சிந்திக்க முடியாது. சத்தம் மட்டுமே உண்டாக்க முடியும். ஒரு நாயை பழக்குவித்து இதை தாண்டு என்றால் தாண்டுகிறது. அது உணர்ச்சியினாலும், கேட்பதினாலும் அப்படிப்பட்ட காரியங்களில் செயல்புரிகிறது. ஆனால் அவைகளால் சிந்தித்து புரிந்துக்கொள்ள முடியாது. அவைகள் நிர்வாணமாய் இருப்பது அவைகளுக்கு தெரியாது. ஆணுக்கும் பெண்ணுக்கும் உள்ள வித்தியாசம் தெரியாது. அவைகளுக்கென்று எந்த விதமான தேவனுடைய பிரமாணமும் கிடையாது.

84. தேவன் லூசிபரை உண்டாக்கினபோது, அவன் பிசாசாக இருப்பான் என்பது அவருக்கு தெரியும். இவன் தான் சிருஷ்டிக்கப்பட்ட நாள் துவங்கி அவனில் அநியாயம் கண்டுபிடிக்கபட்டது மட்டும், தன் வழிகளில் குற்றமற்றவனாய் இருந்தான் (எசே 28 : 15) இவன் காப்பாற்றுகிறதற்காக அபிஷேகம் பண்ணப்பட்ட கேரூப் (எசே 28 : 14) தேவனுடைய மீட்பர் (Redeemer) / இரட்சகர் (Saviour) என்ற தன்மைகள் (Attributes) வெளிப்பட, கர்த்தர் இதை அனுமதிக்க வேண்டியதாயிற்று. ஆக மிக்க சாதுவாக இருந்த அந்த மிருகத்துக்குள் லூசிபர் / சாத்தான் நுழைந்த போது அது தந்திரமுள்ளதாயிற்று / சாமர்த்தியமுள்ளதாயிற்று / வஞ்சனை உடையதாயிற்று. எவ்வாறு அந்த காட்டு மிருகத்துக்குள் சாத்தான் நுழைந்தவுடன் அது தந்திரமுள்ளதாயிற்றோ அதேப்போன்று ஆரம்பத்தில் உண்மையும் உத்தமுமாக கிறிஸ்துவுக்கென்று அநேகர் ஊழியர் செய்தனர். சாத்தான் அவர்களுக்குள் நுழைந்தான். அவர்கள் தந்திரசாலிகள் ஆனார்கள். பணத்தாசை அவர்களுக்குள் வந்தது. உடனே பணத்தை மையமாக கொண்டு பற்பல திட்டங்களை தீட்டினார்கள். பல விழாக்களை கொண்டாடினார்கள். தங்கள் சாதுரியமான ஞானத்தினால் மக்களை தந்திரமாக கவர்ந்தார்கள். அமுக்கி, குலுக்கி உற்சாகமாக கொடுங்கள். தேவன் உங்கள் மேல் பிரியமாய் இருக்கிறார் என்றார்கள். தங்கள் நயவஞ்சமாக பேச்சினால், இளம் விசுவாசிகளை, உறுதியில்லாத ஆத்துமாக்களை கவர்ந்தார்கள். அவர்களிடமிருந்து கொஞ்சம் கொஞ்சமாக பணம் அபகரித்து அவர்களை பகல் கொள்ளையாடி, தங்கள் சுபபோகமான வாழ்க்கை வசதிகளை உருவாக்கிக்கொண்டார்கள். இப்படிப்பட்டதான தந்திரசாலியான பாஸ்டர்கள் தான் இந்த சாத்தான் ஏதேனில் (இந்த உலகில்) அதிகம் அதிகம். அதிலும் இவர்கள் இக்கடைசிகால செய்தி எனக்கூறும் மக்கள் மத்தியில் மிகவும் அதிகம். எங்கும், எதிலும் வஞ்சிப்பு.

**85. சாத்தான் மனுஷகுரங்கிற்கும், மனுஷனுக்கும் இடையே ஒரு மிருகம் இருந்ததையும், அதன் இரத்தம் மனுஷ இரத்தத்தோடு கலக்கும் என்பதையும் அறிந்திருந்தான். இப்பொழுது பாருங்கள், அவன் அது தான் அந்த காட்டு மிருகம் என்பதை அறிந்தவனாய், உறுதிசெய்தவனாய் அதற்குள் சென்று புகுந்தான். எதற்கு? அந்த காட்டு மிருகம் மூலம் தன் வித்தை இந்த உலகத்தில் பிரவேசிக்க செய்ய. இவன் ஒரு மனித குரங்கினிடம் இடைப்படவில்லை. ஏனென்றால் அதின் இரத்தம் மனித இரத்தத்துடன் கலக்காது என்பதையும் நன்கு அறிந்திருந்தான். பாருங்கள் சாத்தானுக்கு இரகசியமானது ஒன்றும் மறைப்பொருள் அல்ல (எசே 28 : 3)**

86. இதற்கு எடுத்துக்காட்டாக ஒரு உதாரணம் தருகிறேன். கதரேனருடைய பட்டணத்து மனுஷனை பிடித்திருந்த அசுத்த ஆவி / பிசாசுகள் அவனை விட்டு நீங்கி பன்றிக்குள் புகுந்ததை நீங்கள் வேதவாக்கியங்களில் காணலாம். (லூக் 8: 33). அதே விதமாகதான் அந்த காட்டு மிருகத்துக்குள் சாத்தான் புகுந்தான். இப்பொழுது அந்த காட்டு மிருகம் :

அ) மனித குரங்கிற்கும் மனுஷனுக்கும் இடையே உள்ள ஒரு மிருகம் .

ஆ) மனிதனைப்போன்று நிமிர்ந்து நடக்கக் கூடிய ஒரு மிருகம் .

இ) பார்வையில் முற்றுலுமாக ஒரு மனிதனை போன்றே காணப்பட்டது.

ஈ) மனிதனுடைய சுபாவங்களோடு மிக்க நெருக்கமாகவே தொடர்பு கொண்டதாக இருந்தது.

உ) மனித சரீர அமைப்போடு மிக்க நெருக்கமாக இருந்தது. ஒரு மனிதனை போன்றே இருந்தது எனலாம்.

ஊ) ஆதாம் ஏவாள் பேசிய பாஷைகளை அது பேசக்கூடியதாகவும் இருந்தது. ஆதலால் தான் அது ஏவாளோடு சம்பாஷிக்க முடிந்தது .


எ) பாருங்கள் மனிதன் ஒரு நாட்டு மிருக வர்க்கத்தை சேர்ந்தவன். மனிதனும் ஒரு மிருகமே. மனிதனின் மாம்சபாகம் மிருகத்தின் மாம்சமே. நாம் குட்டிப் போட்டு பாலுட்டும் மிருக இனத்தை (Mammal) இனத்தை சேர்ந்தவர்கள். மனிதனுக்கும் மிருகத்துக்கும் உள்ள வித்தியாசத்தை உண்டுப்பண்ணுவது எது? மிருகத்துக்கு ஆத்துமா கிடையாது. ஆனால் மனிதனுக்கோ உண்டு. மிருகத்துக்கு நன்மைக்கும் தீமைக்கும் உள்ள வித்தியாசம் தெரியாது. ஆனால் நமக்கோ தெரியும்.

87. ஆராய்ச்சியாளர்கள் மனுஷன் மனித குரங்கிலிருந்து உண்டானவன் என்ற தத்துவத்தை (Theory of Evolution) நிறுபிக்க முயன்றனர். இவர்கள் உலகில் உயிரினங்கள் எளிய அமைப்புடன், கரிமப்பொருட்களிலிருந்து உண்டாயிருக்ககூடும் எனும் கருத்தை பல்வேறு பரிணாமக்கோட்பாடுகள்

கொண்டுள்ளன. இத்தகைய எளிய உயிரிகள் பின்னால் மாறுபட்ட சூழ்நிலைகளுக்கும், தேவைகளுக்கும் ஏற்ப தம்மை திருத்தியும், சிறப்பித்தும் கொள்கின்றன. இதனால் இவை தம்முள் மாறுபட்டு நிற்கின்றன. உயிரியலின் மற்ற துறைகளான உடற்செயலியல், கருவியல், உள்ளுருப்பியல், புவிவிலங்கியல், போன்ற துறைகள் இக்கருத்தினை மறைமுகமாக வலியுறுத்துகின்றன. சார்லஸ் டார்வின் என்பவர் வெளியிட்ட **இயற்கை தேர்வு கோட்பாடு** உயிரினங்களின் பரிணாமம் பற்றிய விளக்கங்களை ஓரளவு அறிவியலுக்கு கொடுத்துள்ளதாகவும், இருப்பினும் உயிரினங்களின் துவக்கம் பற்றிய கருத்துக்கள் யாவும் இன்றுவரை ஊகமாகவே உள்ளன. ஆனால் நாமோ வானமும், பூமியும் அவைகளின் சர்வ சேனையும் தேவனுடைய வார்த்தையினால் உண்டாயிற்று என்று விசுவாசிக்கிறோம்.

88. இவர்கள் தவளை குஞ்சியிலிருந்து தவளைக்கு வந்து, இப்படியாக குரங்கு, மனித குரங்கிற்கு வருகிறார்கள். மனித குரங்கிலிருந்து மனுஷனுக்கு தாவுகிறார்கள்.






குரங்கிலிருந்து மாறுப்பட்ட மனித முகத்தோற்றங்கள் படிப்படியான காலகட்டங்களில்

மனித குரங்கின் இரத்தம் மனிதனுடைய இரத்தத்தோடு கலக்க முடியவில்லை / அது கலக்கவும் கலக்காது. இதனால் தான் மனுஷன் மனுஷ குரங்கிலிருந்து உண்டானவன் என்ற தத்துவத்தை அவர்களால் நிருபிக்க முடியவில்லை. ஆனால் மனிதனுடைய இரத்ததுடன் கலக்கக்கூடிய ஒரு மிருகத்தின் இரத்தம் இருந்தது. அது தான் ஆதி 3 :1 ல் சொல்லப்பட்ட அந்த காட்டு மிருகம். மனிதனுக்கும், மனித குரங்கிற்கும் இடையில் உள்ள அந்த இணைப்பை, அந்த விடுப்பட்ட இணைப்பை (Missing link) அவர்களால் கண்டுக்கொள்ள முடியவில்லை. கண்டுக்கொள்ள முடியாதவாறு தேவன் அதன் காரியத்தை மாற்றினார். அந்த மிருகத்தை சபித்தார். அது உருமாறிப்போயிற்று. தேவன் அதை மனுக்குலத்திலிருந்து மறைத்துவிட்டார். அவர்கள் அதை கண்டுக்கொள்ள முடியவே முடியாது. அந்த விடுபட்ட இணைப்பை அந்த காட்டு மிருகத்தை மனுஷன் கண்டுப்பிடித்திருப்பானாகில் மனிதன் மனிதக்குரங்கிலிருந்து வந்தான் என்று நிருப்பித்திருப்பார்கள். மனிதனையும் குரங்கையும் ஒன்றாக இணைத்து காட்டகூடிய ஏதோ ஒரு மிருகத்தின் எலும்பை விஞ்ஞானமானது நோக்கிக்கொண்டிருந்தது. அதற்கு நெருகின இணையாக மனிதன் போன்று வாலில்லாத ஆப்பிரிக்கா குரங்கு வகையான சிம்பான்சியை அவர்கள் கண்டெடுத்தனர். ஆனால் அவர்களால் ஒரு எலும்பையும் கண்டுபிடிக்க முடியவில்லை. அவர்களால் முடியாது. ஏனென்றால் அந்த மிருகமானது சர்ப்பமாயிற்று. சர்ப்பமானது ஒரு வரலாற்று காலத்திற்கு முந்தைய காலத்திலிருந்த ஒரு மனிதனை போன்று, மனிதனுக்கு அடுத்த நிலையில் இருந்த ஒன்று. அந்த விலங்கிற்கு முற்றுப்புள்ளி தேவன் வைத்துவிட்டார். அது அழிந்துவிட்டது. தேவன் அதை ஒரு பாம்பாக மாற்றிவிட்டார். அப்பொழுது தேவன் தமது சாயலாகவும் தமது ரூபத்தின் படியேயும் மனுஷனை சிருஷ்டித்தது தவறாகி விடும் / பொய்யாகி விடும். தேவன் ஒரு பொய்யராகிவிடுவார். குரங்கிலிருந்து மனிதன் உண்டாகவில்லை. மிருகம் மனிதனோடு கலந்தது.



89. சார்லஸ் டார்வின் அவர்களது குரங்கிலிருந்து மனிதன் வந்தான் என்ற தத்துவத்தை இங்கு நான் **மாலை மலர்** என்ற பத்திரிக்கையில் வெளியான தொழில் மலர் 2010 பதிப்பில் பக்கம் 132 ல் இருந்து எடுத்து வெளியிடுகிறேன். இந்த தத்துவத்தை நாம் ஏற்றுக்கொள்ளவிட்டாலும் அதைக்குறித்து அறிந்துக்கொள்வதில் தவறு எதுவும் இல்லை

வெகு காலத்திற்கு முன் அண்ட வெளியில் ஒரு மிகப்பெரிய விண் முகில் சொந்த நிறை ஈர்ப்பினால் சுருங்கத் தொடங்கியது. இதனால் அதன் மையத்தில் வெப்பம் அதிகரித்து மையப்பகுதி ஒரு விண்மீனாக

(சூரியன்) மாறியது. அதனை சுற்றியுள்ள பக்கவாட்டு அமைப்பு உடைந்து சிறு, சிறு பகுதிகளாக பிரிந்தது. இவ்வாறு பிரிந்த பகுதிகள் வெவ்வெறு கோள்களாக மாறியது. இவற்றையே நாம் சூரியக்குடும்பம் என்கிறோம். மொத்தம் 9 கோள்களும் அவற்றை சுற்றி 61 நிலவுகளும், எரிகற்களும், வால் நட்சத்திரங்களும் விண்மீன்களும் உள்ளன. இவ்வாறு பிரிந்த கோள்களில் ஒன்றான நமது பூமி முதலில் தீப்பிழம்பாக இருந்தது. இப்படி இருந்த பூமி பலகோடி ஆண்டுகளுக்கு பிறகு பூமியில் நிழ்ந்த பல்வேறு வேதியியல் மாற்றத்தால் மேல் பகுதி குளிர்ச்சி அடைய தொடங்கின. இத்தகைய நிலையிலுள்ள பூமியை ஒருவர் முதல் நாள் படைத்து 6-ம் நாள் அதில் உள்ள உயரிகளை உண்டாக்கினார் என்பது அறிவியலுக்கு முரண்பட்டதாகும்.

குளிர்ந்த பூமியில் நதிகள், ஏரிகள், கடல்கள் போன்ற நீர்ப்பகுதிகள் தோன்றின. நீர் பகுதியில் தான் முதல் உயிரியான ஒரு செல் அமீபா தோன்றியது. பின்னர் பல செல் உயிரினங்கள் தோன்றியது. இவ்வாறு விலங்குகளும், தாவரங்களும் பொதுவான நீர் பகுதிகளில் தோன்றின. இவ்வாறு தோன்றிய உயிரினங்கள் ஒவ்வொறுக்கும் ஒரு ஒற்றுமை இருந்தது. பிற உயிரினங்கள் தோன்றிய காலத்தை ஒப்பிடும் போது மனித இனம் மிகவும் இளமையான உயிரினமாகும். இவ்வாறு உயிரினங்களுக்குள் ஏற்பட்ட பரிமான வளர்ச்சியை மிகத்திறமையாக சான்றுடன் விளக்கியவர் உயிரியலின் தந்தை என அழைக்கப்படும் சார்லஸ் டார்வின் ஆவார். இவர் எழுதிய "தி ஆர்ஜின் ஸ்பைஸஸ்" என்ற ஆராய்சி புத்தகத்தில் குரங்கிலிருந்து தான் மனிதன் வந்தான் என்ற உண்மை கூற்று தகுந்த ஆதாரத்துடன் விளக்கபட்டுள்ளது. இதனால் மனிதன் கடவுளின் படைப்பு என்ற நினைப்பு அடியோடு தகர்க்கப்பட்டது. இனி மனிதனுக்கும் மனித குரங்குகளுக்கும் ஒற்றுமை என்ன என்பதை டார்வின் கீழ்கண்டவாறு கூறியுள்ளார். மரத்தில் வாழ்ந்த மயிர்களையும், வாலையும் உடைய மனிதக்குரங்கிலிருந்த மனிதன் வந்தான். மனிதனுக்கும், மனித குரங்குகளுக்கும் வால்கள் இல்லை. குரங்கள் உட்காரும்போது வால் ஒரு பக்கமாக தள்ளப்படுகிறது. இதனால் வாலின் அடிப்பகுதி தேய்ந்து போக ஏதுவாகிறது. இவ்வாறு தேய்ந்ததால் வால்கள் குட்டையாகின. இவ்வாறு வால்கள் முற்றிலும் தேய்ந்து போனத்தில் வால் எச்ச உறுப்பாகி நாளடைவில் மறைந்து போனது. இது மனிதனுக்கும் பொருந்தும். மரங்களில் வாழ்ந்தவை நிலத்தில் வாழத்தொடங்கின. இதனால் அவை நடப்பதற்கு கைகளை பயன்படுத்தவில்லை. இரு கால்களை மட்டுமே பயன்படுத்தின. கைகளை நடப்பதற்கு பயன்படுத்தாதஹால் நிமிர்ந்து நிற்கும் நிலை ஏற்பட்டது. இதனால் நிமிர்ந்து நடந்தன. இடுப்பு எலும்புகள் விரிந்து அகலமாயின. முதுகெலும்பு- தண்டு வடம் வளைந்தது. தலை நன்கு திரும்பும் நிலையில் பொருந்தியது. மரத்திலிருந்து நிலத்திற்கு வந்த குரங்கு மனிதன் சமவெளியில் வாழ தன்னை தகுதியாக்கி கொண்டான். மனிதனுக்கும் குரங்குகளுக்கும் உடலமைப்பில் சிறந்த ஒற்றுமை உள்ளது. இருவரையும் ஒரே வகையான நோய்கள் தாக்குகின்றன. மனிதக் கருவுக்கும் குரங்கின் கருவுக்கும் அதிக ஒற்றுமை காணப்படுகின்றன. இதை எல்லாம் பார்க்கும் போது மனிதன் குரங்கிலிருந்து தான் வந்தான் என்பது உறுதியாகிறது.

**தேவன் இல்லை என்று மதிகெட்டவன் தன் இருதயத்தில் சொல்லிக்கொள்ளுகிறான். டார்வின் தத்துவம் இவர்களுக்கு தான் பொருந்தும்.**

90. இப்பொழுது அந்த காட்டு மிருகம் ஏவாளை தன்னுடைய சாதூரியமான பேச்சினாலே / தந்திரத்தினாலே வஞ்சித்தது (2 கொரி 11 : 3) தன் உள்ளத்தின் கபடத்தை மறைத்து, தன் உதடுகளினால் சூது பேசியது. அது எப்படி? அந்த காட்டு மிருகம் ஏவாளை ஏதேன் தோட்டத்தில் நிர்வாணமாக கண்டது. தேவனுடைய ஏதேன் தோட்டத்தில் ஆதாமும் ஏவானும் ஆடை எதுவும் இல்லாம் நிர்வாணமாக இருந்தார்கள். ஆனாலும் அதை அவர்கள் அறியாமல் இருந்தார்கள். ஏனென்றால் பரிசுத்த ஆவி என்றும் பரிசுத்த திரையினால் அவர்கள் மறைக்கப்பட்டிருந்தார்கள். ஆதலால் நிர்வாணம் என்றும் உணர்ச்சியற்றவர்களாக இருந்தார்கள். ஆதலால் அவர்களுக்கு தங்கள் நிர்வாணிகள் என்ற உணர்வு இல்லை / அவர்கள் அதை உணரவும் இல்லை. பரிசுத்த ஆவியின் பரிசுத்தம் அவர்களை மூடியிருந்தது. அவர்களுடைய மனசாட்சியில் பாவம் பிரவேசிக்கவில்லை. தேவன் பரிசுத்தத்தினால் அதை மறைத்தார். தேவனுடைய பரிசுத்த ஆவியின் மூடு திரையினால் மறைக்கப்பட்டவர்கள் பெண்களைக்கண்டு இச்சிக்கமாட்டார்கள். அவர்கள் தங்களை மறுபக்கம் திருப்பிகொள்வார்கள். அது தான் பரிசுத்த திரை. அவர்கள் கண்களை தேவன் இத்திரையினால் மறைக்கிறார். அந்த காட்டு மிருகம் நிர்வாணமாக இருந்தாலும், ஏவாளின் நிர்வாணத்தை பார்த்து அந்த மிருகம் தன்னுடைய வித்தை உலகில் பிரவேசிக்க செய்ய / அவளை அடைய அதன் உள்ளத்தில் இச்சை பிறந்தது. இச்சைகளின் பிறப்பிடமே அவன் தானே. ஒரு பெண்ணை நிர்வாணத்தில் காணும் எந்த ஒரு பாவமான மனுஷனுக்கும் அவளை அடைய அவனுக்கு இச்சையில்லாமலிருக்க முடியாது . இச்சையில்லாவிட்டால் அவன் ஒரு ஆணாக இருக்கமாட்டான். ஆனால் தேவனால் பிறந்த ஒருவனிடம் இந்த இச்சையிருக்காது. ஏனென்றால் அவன் மறுபிறப்பு அடைந்தவன். அவன் உலகத்தான் அல்ல. அவனிடம் மாம்சத்தின் இச்சையும் கண்களின் இச்சையும் காணப்படாது. ஆதலால் அவன் தன் முகத்தை திருப்பிக்கொள்வான். ஏனென்றால் அவனுக்குள் தேவனுடைய ஆவி. அவன் சரீரம் தேவன் வாசம் செய்யும் ஆலயம்.

91. அந்த காட்டு மிருகம் ஏவாளிடம் கண்களின் இச்சைகளையும், மாம்சத்தின் இச்சைகளையும் கொண்டு வந்தது. அது அவளை வசீகரித்தது. பாருங்கள் ஆனால் இவைகள் யாவும் பிதாவினால் உண்டானவைகள் அல்ல (1 யோ 2 : 16). மாறாக அவைகள் யாவும் பிசாசினுடையவைகளே. **இச்சைகள் ஒருவனை / ஒருத்தியை பாவத்தில் வீழ்த்த சாத்தானால் பயன் படத்தப்படும் கருவியாக இருக்கிறது.** பாருங்கள் சாத்தான் தானியேலை பார்க்கிலும் ஞானவான். ஞானத்தால் நிறைந்தவன். பூரண அழகுள்ளவன் (எசே 28 : 3, 12). ஏவாள் அந்த காட்டு மிருகத்தினுடைய ஞானத்தில், அதன் அழகில் மயங்கினாள். காட்டு மிருகம் அவள் நிர்வாணத்தைக்கண்டு மயங்கியது. ஆக ஒருவர் மீது ஒருவர் மோகம் கொண்டனர் / இச்சைகொண்டனர். அந்த முரட்டு சுபாவமுடைய காட்டு மிருகம் பாதி மனித தன்மையும் பாதி மிருகதன்மையும் கொண்டிருந்தது.

காயீன் அதன் பிள்ளை, அந்த சுபாவத்தை கொண்டிருந்தான். பிறகு அவன் பெண் கொண்டான். அவனுக்கு பிள்ளைகள் பிறந்தார்கள். அவர்கள் ஆதியிலே இருந்த தன் தகப்பனைப்போன்று மிருகத்தனமாகவும், மாம்ச இச்சையுடையவர்களாகவும் இருந்தனர். அந்த பழைய இச்சையுடைய மிருகம் மனுஷகுமாரத்திகளை கண்டு அவர்களை கொண்டனர்.

92. அன்று சாத்தான் தேவனுடைய ஏதேன் தோட்டத்தில், ஏவாளிடத்தில் மாம்சத்தின் இச்சைகளையும், கண்களின் இச்சைகளையும், ஜீவனத்தின் பெருமையும் உண்டாக்கி, அவளை வஞ்சித்து, அவளை கற்ப்பழித்து, தன் வித்தை மனுக்குலத்தில் பிரவேசிக்க செய்தான்.



**சமீப நாட்களில் நான் சினிமா நடிகைகள் பணத்துக்காக தங்கள் ஆடைகளை உரிந்துப்போட்டு ஆண்களிடத்தில் கண்களின் இச்சைகளையும், மாம்சத்தின் இச்சைகளையும் உண்டுப்பண்ணதக்கதாக போஸ் கொடுத்திருப்பதை ஆங்கில பத்திரிகைகளில் கண்டேன். அதை தான் உங்களுக்கு இங்கே பிரசுரித்துள்ளேன்.**

இன்று சாத்தான் இந்த உலகில், தன்னுடைய ஏதேன் தோட்டத்தில் தேவனுடைய பிள்ளைகளிடத்தில் மாம்சத்தின் இச்சைகளையும், கண்களின் இச்சைகளையும், ஜீவனத்தின் பெருமைகளையும், முக்கியமாக சினிமா நடிகைகள் மூலம் உண்டாக்கி, அவர்களை வஞ்சித்து, அவர்களை தவறான, முறைகேடான வழிகளில் நடத்துக்கிறான். சினிமா பார்த்து மக்கள் சீரழிந்து போகிறார்கள். சினிமா நடிகர், நடிகைகள் யார்? மனுமக்களை சீரழிக்க சாத்தானுடைய கரத்திலுள்ள கருவிகள். பாருங்கள் இந்த சாத்தானின் ஏதேனில் அவர்கள் தான் M.L.A., M.P. கள், மந்திரிகள், நாட்டை ஆளுபவர்கள் கூட. ஒவ்வொரு அரசாங்கமும் பிசாசினால் ஆதிக்கம் செலுத்தப்படுகிறது. கிறிஸ்துவினால் ஆதிக்கம் செலுத்தப்படும் ஒரு அரசாங்கம் இனி வரபோகிறதாய் இருக்கிறது. அது அவருடைய ஆயிரம் வருட அரசாட்சியாக இந்த பூமியில் இருக்கும். இன்று இந்த உலகின் நிலையை பார். வஞ்சிப்பு தன் உச்சக்கட்ட நிலையை அடைந்துள்ளது. எங்கும் எதிலும் கவர்ச்சி, வஞ்சிப்பு, கலப்படம். பரமண்டலங்களில் இருக்கிற எங்கள் பிதாவே, எங்களை ஒவ்வொரு நாளும், அதன் ஒவ்வொரு நிமிடத்திலும் கண்களின் இச்சைக்கும் , மாம்சத்தின் இச்சைக்கும், ஜீவனத்தின் பெருமைக்கும் உட்படுத்தாது, விலக்கிகாத்து, சோதனைக்குட்படப்பண்ணாமல் (Temptation) தீமையினின்று இரட்சித்து, காத்துக்கொள்ளும். ஆமென்.

93. இப்பொழுது கவனியுங்கள் தேவனாகிய கர்த்தர் மனுஷனை நோக்கி :
அ) நீ தோட்டத்தில் உள்ள சகல விருட்சங்களின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம் என்றார்.
.ஆ) தோட்டத்தின் நடுவில் உள்ள ஜீவவிருட்சத்தின் கனியையும் புசிக்க அனுமதிக்கப்பட்டான்.
இ) தோட்டத்தின் நடுவில் உள்ள நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியை மாத்திரம் புசிக்க வேண்டாம் என அவனுக்கு தடை விதிக்கப்பட்டது .
ஈ) அதை புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என எச்சரிக்கப்பட்டான்.
உ) ஆதாம் இந்த கட்டளைகளை தேவனிடமிருந்து பெற்றபோது அவன் சரீரத்திற்குள் ஏவாள் பெண்பாகமாக இருந்தாள். அவள் இன்னும் உலகில் பிரவேசிக்கவில்லை / வெளிப்படவில்லை. ஆக தேவன் ஆதாமுக்கு இந்த கட்டளையை கொடுத்தபோது அவள் அவன் அருகில் இல்லை. மாறாக அவனுக்குள் இருந்தாள்.

94. இப்பொழுது அந்த காட்டு மிருகம் ஏவாளிடம் : நீங்கள் தோட்டத்தில் உள்ள சகல விருட்சங்களின் கனியையும் புசிக்க வேண்டாம் என்று தேவன் சொன்னது உண்டோ என்றது. பாருங்கள் தேவன் சொன்னதை சாத்தான் அறிந்திருந்தும், அவளிடம் சாதூரியமாக கேள்வி கேட்கிறான். தன்னுடைய தந்திரங்கள் நிறைவேற அவன் உட்கருத்தும் இருதயமும் ஆழமாயிருந்தது. ஏவாள் அவனிடம் என்ன கூறியிருக்கவேண்டும்? ஐயா என் கணவர் தான் இது குறித்து அறிவார். எனக்கு இது குறித்து எதுவும் தெரியாது. அவரிடம் கேட்டு தெரிந்துக்கொள்ளுங்கள் என கூறியிருக்கவேண்டும். ஆனால் ஏவாளே தன் கணவனைவிட தன்னை உயர்த்தினாள். தன் கணவனை மதிக்க மறந்தாள். தனக்கு எல்லாம் தெரியும் என்ற ஆனவத்தில் இருந்தாள். இன்று நம் மத்தியிலும் இப்படிப்பட்ட பெண்கள் நிறைய உண்டு. கணவன் இல்லாத நேரத்தில் அவனுக்கு பதிலாக மற்றவர்களிடம் தங்கள் சம்மந்தப்படாத காரியங்கள் குறித்து பேசுவது / தர்க்கிப்பது. ஏவாள் ஒரு அடக்கமுள்ளவளாக இருந்து, தன்னிடம் கேள்வி கேட்ட அந்த காட்டு மிருகத்திடம் ஆதாமிடமே இது குறித்து பேசிக்கொள் என்று கூறி ஒதுங்கிக்கொண்டிருந்தால் இந்த பிரச்சனையே வந்திருக்காது. பெண்களிடம் காணப்படவேண்டிய அடக்கம் / அமைதி அவளிடத்தில் காணப்படவில்லை. இன்று கிறிஸ்தவ குடும்பங்களில்

பெண்களின் ஆதிக்கமே அதிகம்.

95. இப்பொழுது ஏவாள் அந்த காட்டு மிருகத்தினிடம் : நாங்கள் தோட்டத்தில் உள்ள விருட்சங்களின் கனிகளை புசிக்கலாம். ஆனாலும் தோட்டத்தின் நடுவில் உள்ள விருட்சத்தின் கனியை குறித்து, நீங்கள் சாகாத படிக்கு அதை புசிக்கவும், தொடவும் வேண்டாம் என தேவன் கூறினார் என்றாள். கர்த்தர் புசிக்க வேண்டாம் என்றே கூறினார். ஆனால் ஏவாளோ தொடவும் வேண்டாம் என்ற ஒரு வார்த்தையை கூட்டிக்கொண்டாள். இன்று அநேகர் வேதவாக்கியங்களோடு ஒன்றைக் கூட்டுவதும் குறைப்பதும் போன்றதாகும் இந்த சம்பவம். தேவனுடைய வார்த்தையோடு நாம் ஒன்றை கூட்டவும் கூடாது. அதிலிருந்து ஒன்றை குறைக்கவும் கூடாது. அது எப்படி உள்ளதோ, அப்படியே அதை ஏற்றுக்கொள்ளவேண்டும் / போதிக்கவேண்டும்.

96. இப்பொழுது சாத்தான் ஏவாளை பார்த்து : நீங்கள் சாகமாட்டீர்கள். நீங்கள் சாகவே சாவதில்லை. நீங்கள் புசிக்கும் நாளில் உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றான். பாருங்கள் அவன் சொன்னது முற்றிலும் உண்மையாக இருந்தாலும், தேவனுடைய கட்டளை நீங்கள் புசிக்க கூடாது என்பதே. சாத்தான் வாயில் முழு உண்மையில்லை. ஆனாலும் அவன் உள்ளம் கேடுபாடுள்ளதாகவே இருந்தது. காட்டு மிருகம் (சாத்தான்) ஏவாளிடம் நீங்கள் தோட்டத்திலுள்ள யாவரிடமும் பேசி பழக, உறவு வைத்துக்கொள்ள கூடாது என்று தேவன் கட்டளையிட்டது உண்டோ என்றது. அதற்கு ஏவாள் தோட்டத்தில் உள்ள யாவரிடமும் பேசி, பழகி, உறவு கொள்ளலாம். ஆனால் நன்மை தீமை அறியத்தக்க விருட்சமாகிய சாத்தானிடம் மட்டும் உறவு வைத்துக்கொள்ளக்கூடாது எனவும், அவனோடு நட்பு வைத்துக்கொள்ளும் நாளின் நாங்கள் சாகவே சாவோம் என்று தேவன் கட்டளையிட்டார் என்றாள். **ஏதேன் தோட்டத்தில் விருட்சங்கள் தேவபுத்திரர்களையும், நன்மை தீமை அறியத்தக்க விருட்சம் சாத்தானையும், ஜீவ விருட்சம் கிறிஸ்துவையும் குறிக்கிறது. ஏதேன் தோட்டத்தில் தேவனுடைய குடும்பம் இருந்தது.** பாருங்கள் ஒரு நாள் தேவபுத்திரர் கர்த்தருடைய சந்நிதியில் வந்து நின்ற போது சாத்தானும் அவர்கள் நடுவே வந்து நின்றான் (யோபு 1 : 6) அவ்வண்ணமாகவே ஏதேன் தோட்டத்தில் தேவன், அவர் குமாரன் ஆதாம், அவன் மனைவி ஏவாள் மற்றும் தேவபுத்திரர்கள் இருந்த வேளையில் சாத்தானும் அவர்கள் மத்தியில் நின்றான். மேலும் தியானியுங்கள் யோபு 38 : 4-7 அன்பு, சந்தோஷம், சமாதானம், சாந்தம், இச்சையடக்கம் இப்படிப்பட்டதான ஆவியின் கனிகளை உடைய தேவபுத்திரர்களோடு ஆதாம் ஐக்கியம் வைத்துக்கொள்ளவும், விபச்சாரம், காமவிகாராம், வேசித்தனம் போன்ற கனிகளையுடைய சாத்தானை விட்டு விலகியிருக்க வேண்டுமென கட்டளை பெற்றான். ஆனால் அவர்கள் தங்கள் ஐக்கியத்திற்கு, உறவுக்கு சாத்தானையே தெரிந்துக்கொண்டனர். இந்நாட்களிலும் அநேகர் தங்களை தேவனுடைய பிள்ளைகள் என அழைத்துக்கொண்டு துன்மார்க்கருக்கு துணை நின்று கர்த்தரை பகைக்கிறவர்களை சிநேகிப்பதைப்போன்று.

97. ஆதாமும் ஏவாளும் ஏதேன் தோட்டத்தில் நிர்வாணிகளாக இருந்தார்கள். அவர்கள் நிர்வாணிகள் என்பதை அவர்கள் அறியாதிருந்தார்கள். ஆதலால் அவர்கள் நிர்வாணம் குறித்து அவர்கள் வெட்கம் அடையவில்லை (ஆதி 2 : 24) ஒருவர் முன் ஒருவர் நிர்வாணமாக நின்றாலும், அவர்கள் தாங்கள் நிர்வாணிகள் என்பதை அறிந்துகொள்ளமுடியவில்லை. ஏனென்றால் அவர்கள் பரிசுத்த ஆவியினால் திரையிடப்பட்டிருந்தார்கள். அவர்கள் கண்கள் திரையிடப்பட்டிருந்தது. அவர்கள் நிர்வாணம் அவர்கள் கண்களுக்கு மறைவாய் இருந்தது . ஆதாம் ஏதேன் தோட்டத்தில் வைக்கப்பட்டான். அவனுக்கு ஏற்ற துணையும் கொடுக்கப்பட்டது. ஆனாலும் ஆதாமுக்கு தான் தகப்பனாக வேண்டும் என்பதை அவன் ஒருபோதும் கண்டுகொள்ளவில்லை. சாத்தான் அதை அறிந்தவனாய் இருந்து, அவனுக்கு முன் அவன் ஏவாளை அறிந்து தன் வித்தை இந்த உலகத்தில் பிரவேசிக்கச் செய்தான். சாத்தான் ஏவாளிடம் உங்களுக்கு விலக்கப்பட்ட அந்த கனியை புசிக்கும் நாளில், நீங்கள் நன்மை தீமை என்னதென்று அறிவீர்கள். நீங்கள் தேவர்களை போல் இருப்பீகள் என்றான் (ஆதி 3 : 1 - 5).

98. ஏவாள் பார்த்தாள், அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும் பார்வைக்கு இன்பமும், புத்தியை தெளிவிக்கிறதும் இச்சிக்கப்படத் தக்கதாயும் கண்டாள் (ஆதி 3 : 6) ஏவாள் பாவமே அறியாத, நிர்வாணம் என்ன என்றுகூட தெரியாத ஒரு இளம் வயது பெண்ணாக இருந்தாள். சாத்தான் குடிப்புகுந்துள்ள அந்த காட்டு மிருகத்தை கண்டாள். அவனது அழகு அவள் பார்வைக்கு இன்பமாக இருந்தது. அவன் இச்சிக்கப்படதக்க ஒரு காட்டு மிருகமாக இருந்தான். அதனுடைய உடம்பின் நடுவில் உள்ள கனிமீது எவாள் ஆசைக்கொண்டாள். சுருக்கமாக சொல்லப்போனால் ஒருவர் மற்றொருவர் உடம்பின் மத்தியில் உள்ள கனி மீது மோகம் கொண்டனர். இந்த காட்டு மிருகமும் ஏவாளும் நிர்வாணமாகத்தான் இருந்தார்கள். காட்டு மிருகம் தன் நிர்வாணத்தை அறிந்ததாக இருந்தது. ஆனால் ஏவாளே அறியவில்லை.

99. விருட்சம் மரங்களை மாத்திரம் அல்ல. மனிதர்களையும் குறிக்கிறது. இது குறித்து நாம் ஏற்கனவே வேதவாக்கியங்களை கொண்டு தியானித்தோம். இப்பொழுது ஏவாள் விலக்கப்பட்ட அந்த விருட்சத்தின் கனியை பறித்தாள், புசித்தாள். தன் புருஷனுக்கும் கொடுத்தாள். அவனும் புசித்தான். தேவன் அவர்களை அவர்களின் சுயசித்தத்தின்படி செய்ய அனுமதித்தார். அவர்கள் தங்களுடைய சுயசித்தத்தின்படியே தகாததை செய்தார்கள். உபாகமம் 28 வது அதியை நீங்கள் தியானித்தால், கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களிடம் இதை செய்தால் அசீர்வாதம், செய்யாவிட்டால் சாபம் என கூறி ஜீவனையும், மரணத்தையும் அவர்கள் முன் வைத்தார். அவ்வாறாகவே ஆதாமிடமும் ஜீவனையும் மரணத்தையும் முன் வைத்தார். அவன் தன் மனைவியின்

சொல்லைக்கேட்டு, அவள் விருப்பப்படி செய்து மரணத்தை தெரிந்துக்கொண்டான். ஏவாள் அந்த காட்டு மிருகத்தோடு உடலுறவுக்கொண்டாள். அந்த அனுபவத்தை ஆதாமிடமும் எடுத்துக்கூறி, அவனையும் அதற்கு இணங்க வைத்து பின் அவனிடமும் உடலுறவு கொண்டாள். இந்த செயலை செய்யக்கூடாது என அறிந்திருந்து ஆதாம் அந்த செயலைச் செய்தான். அவன் தன் மனைவியோடு தன்னையும் இணைத்துக்கொள்ள விரும்பினான். ஏனெனில் அவள் அவன் சரீரத்தின் ஒரு பாகமாக இருந்தாள். தேவனுடைய கட்டளை மீறப்பட்டது. தேவனுடைய வார்த்தையின் மேல் அவிசுவாசம் மரணத்தைக் கொண்டுவந்தது. ஆக, மரணம் இந்த பாவத்தின் மூலம் உலகத்தில் பிரவேசித்தது (ரோ 14 : 23) மனிதன் தன்னை தேவனிடமிருந்து பிரித்துக்கொண்டான்.

100. இப்பொழுது ஏவாளுக்கு புருஷன் இருந்தும் அவள் அந்நியன் மேல் ஆசைக்கொண்டு அவனோடு உடலுறவுக்கொண்டு தன் புருஷனுக்கு துரோகம் செய்தாள். அந்த காட்டு மிருகத்திற்கும் மனைவி இருந்தது. ஏனென்றால் தேவன் சிருஷ்டிப்பு அனைத்தும் ஜோடு ஜோடாகவே இருந்தது. அதாவது ஒரு ஆண் ஒரு பெண் என்ற ஜோடாக இருந்தது. எதற்கு? அவர்கள் பலுகி பெருக. ஆக இங்கு ஏவாளுக்கு புருஷன் இருந்தான். காட்டு ஜீவனுக்கு மனைவி இருந்தாள். ஆனாலும் இவர்கள் ஒருவரை ஒருவர் நேசித்து உடலுறவு கொண்டதினால் அது விபச்சாரம் ஆயிற்று. ஆக உலகில் முதல் விபச்சாரம் ஏதேன் தோட்டத்தில் நடந்தது. தன்புருஷனுக்கு பதிலாக அந்நிய புருஷனை சேர்த்துக்கொள்கிறவள் ஒரு விபச்சார ஸ்திரீ (எசே 16 : 32). விபச்சாரம் மாம்சத்தின் கிரியைகளில் ஒன்று (கலா 5 : 19) விபச்சாரம் செய்யாதிருப்பாயாக (யாத் 20 : 14, உபா 5 : 18) ஜீவனில் பிரவேசிக்க விரும்பினால் விபச்சாரம் செய்யாதே (மத் 19 : 17, 18, 1 கொரி 6: 9,10) ஏதேன் தோட்டத்தில் ஜீவனுக்கு பதிலாக மரணம் சாத்தானால் ஏவாள் மூலமாக பிறப்பிக்கப்பட்டது. சாத்தான் ஏவாளை தவறான வழியில் திசை திருப்பினான். ஏனெற்றால் அவள் அவனுக்கு செவிகொடுத்தாள், தேவனுடைய கட்டளையை மீறினாள். மாம்சத்தின்படி பிழைத்தால் சாவீர்கள் ஆவியினாலே சரீரத்தின் செய்கைளை அழித்தால் பிழைப்பீர்கள் (ரோ 8 : 13) ஏவாள் மாம்சத்தின் படி நடந்து மரணத்தை பிறப்பித்தாள். தன் சரீரத்தின் ஆசை இச்சைகளால் பாவம் செய்தாள். ஆனால் தன்னுடைய ஆவியினால் அல்ல. அவள் பாவம் செய்த போது தன்னுடைய சிருஷ்டிகரிடமிருந்து தன்னை வேறுபடுத்திக்கொண்டாள்.

101. ஏதேன் தோட்டத்தில் உண்டான பாவம் விபச்சாரம். இது இரத்தசம்பந்தமானது. தேவனுடைய நீதியோ கண்ணுக்கு கண், பல்லுக்கு பல், காலுக்கு கால் (யாத் 21 : 23-25). இந்த பிரமாணத்தின்படி பழத்தை சாப்பிட்டதினால் பாவம் உண்டானால் அதே பழத்தைக்கொண்டே அதற்கு நிவாரணமும் உண்டாக வேண்டும். மேலும் கவனியுங்கள். இரத்தத்திற்கு இரத்தம், உயிருக்கு உயிர், அதுவே தேவ நீதி. (யோ 19 : 34,30) இரத்தத்தில் உயிர் (உபா 12 : 23) அந்த காட்டு ஜீவன் / சாத்தான் ஏவாளோடு விபச்சாரம் செய்தான். விந்து இரத்தினால் ஆகியது. ஒருவன் தன் விவாக சம்பந்தமான மனைவிக்கு உண்மையும் உத்தமுமாயிராமல், தன் சொந்த சரீரமாகிய தன் மனைவிக்கு விரோதமாக மற்றொரு ஸ்திரீயோடு அல்லது ஒருஸ்திரீ தன் விவாக சம்பந்தமான புருஷனுக்கு உண்மையும் உத்தமமாய் இராமல் தன் சொந்த சரீரமாகிய தன் புருஷனுக்கு விரோதமாக மற்றொரு மனிதனோடு கொள்ளும் சட்டவிரோதமான தகாத, கூடாத சரீர உறவு விபச்சாரம் ஆகும். (எசே 16 : 32) ஆக விபச்சாரம் ஒரு கற்பு நெறி தவறிய செயலாகும். இந்த நெறிதவறிய செயலினால் ஒருவனுடைய / ஒருத்தினுடைய சரீரத்திற்கு தீங்கு விளைவிக்கப்படுகிறது. எப்படியெனில் மனுஷன் செய்கிற எந்த பாவமும் அவன் சரீரத்திற்கு புறம்பாய் இருக்கும். ஆனால் விபச்சாரம் செய்கிறவன் தன் சுய சரீரத்திற்கு விரோதமாய் (மனைவிக்கு விரோமாய்) பாவம் செய்கிறான் (எபே 5 : 28) அதவாது புருஷன் தன் சுயசரீரமாகிய தன் மனைவிக்கு விரோதமாகவும், மனைவி தன் சுய சரீரமாகிய தன் புருஷனுக்கு விரோதமாகவும் பாவம் செய்கிறார்கள். ஏனென்றால் கணவனும் மனைவியும் ஒரே சரீரமாயிருக்கிறார்கள் (எபே 5 : 31).

102. ஏதேன் தோட்டத்தில் பாவம் மிகவும் இருளாக இருந்தது. யேகோவா தேவனின் தம்பதிகள் ஆக்கினைகுட்பட்டவர்களாக அங்கு நின்றுக்கொண்டிருந்தனர். அவர்கள் மரிக்கவேண்டும். அவர்கள் மரித்தால் அதன் பின் மானிட வர்க்கமே இராது. மானிடவர்க்கத்திற்கு மரணம் என்பது உலகத்தை காட்டு மிருகங்களுக்கு கொண்டு சென்றுவிடும். ஆனால் மிக்க இருள் சூழ்ந்த அந்த நேரத்தில், எவ்வித நம்பிக்கையும் போய்விட்ட அந்த நேரத்தில், தேவனுடைய கிருபை பொழிந்தது. நான் உங்களுக்கு ஒரு இரட்சகரை / ஒரு மேசியாவை தருவேன் என்று அந்த நேரத்தில் வாக்களிக்கப்பட்டது. ஏதேன் தோட்டத்தில் தேவனுடைய திகைப்பூட்டும் கிருபை, ஒரு இரட்சகர் ஒரு ஸ்திரீயின் மூலம் தோன்றுவார் என்று வாக்களித்தது. ஸ்திரீயின் வித்து சர்ப்பத்தின் தலையை நசுக்குவார். அவன் அவருடைய குதிங்காலை நசுக்குவான். (ஆதி 3 : 15) அவர், நான் எப்படியாவது ஒரு வழியை கண்டுவிடுவேன், உங்களை எப்படியாயிலும் இரட்சிப்பேன், நீங்கள் தவறு செய்து விட்டீர்கள், நீங்கள் என் கற்பனையை மீறினீர்கள், என் கற்பனையை மீறியதற்காக உங்களுக்கு நியாயத் தீர்ப்பு அளிக்கப்படவேண்டும். அதை மீறினால் மரணம் என்று நான் கூறின காரணத்தினால் மரணம் உங்களுக்கு நேரிடவேண்டும் என்றார்.

103. **அவர் ஒரு தேவதூதனை, தம்முடைய தம்பதிகளுக்காக மரிக்கசெய்வது தேவனுக்கு நியாயமாகாது. ஒரு மனிதனுக்காக ஒரு தேவதூதனை அவர் மரிக்கச்செய்தால், அவர் நீதியுள்ள நியாயாதிபதியாக இருக்கமுடியாது. அவருடைய பிரமாணமோ மரணத்தை கேட்கிறது. யாராகிலும் ஒருவர் மரிக்கவேண்டும். ஏவாளை மரிக்கசெய்து, ஆதாமை உயிருடன் வாழவைக்க முடியாது. ஏனென்றால் ஆதாமும் அதில் பங்குகொண்டவனாய் இருக்கின்றான். ஒரே ஒரு நியாயமானவழி இருந்தது. எதற்கும் ஒரே ஒரு வழிமாத்திரமே இருக்கமுடியும். தேவனுடைய மகத்தான பிரமாணம்**

**கூறுவது நிறைவேற்றபடவேண்டும். முடிவில் அவரே அதை ஏற்றுக்கொண்டு நிறைவேற்றவேண்டியதாயிற்று. தேவன் ஆவியாய் இருப்பதினால் மரிக்கமுடியாது. ஆதலால் அவர் மனிதனாகவேண்டியதாயிற்று. அவர் மனித சரீரத்தில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்று அழைக்கப்பட்டு, ஒரு மனுஷனாக மரித்தார். இப்பொழுதாவது தேவனும் கிறிஸ்துவும் ஒருவரே என்பதை டாக்டர் சகோதரனும், ஆசிரியர் சகோதரனும் உணர முடிகிறதா? ஆக ஏதேன் தோட்டத்தில் ஆதாமுக்கும் ஏவாளுக்கும் கிருபை ஒரு வழியை உண்டுபண்ணினது.**

104. மரியாள் இயேசுவின் தாய் அல்ல. ஆனால் உலகமோ அவளை இயேசுவின் தாய் என அழைக்கிறது. அவர் அவளை தாய் என்று அழைத்த ஒரு வேதவசனத்தை காட்ட முடியுமா? தேவனுடைய வார்த்தைக்கு திரும்புங்கள். அவளை தேவனுடைய தாய் என்று சொல்லுவதற்கு உங்களுக்கு வெட்கம். அவள் தேவனுடைய வித்தை சுமந்த ஒரு ஸ்திரீ. தேவன் இறங்கி வந்து ஒரு ஸ்திரீயின் கர்ப்பத்தில் தாமாகவே ஒரு சரீரத்தை உண்டாக்கி, இம்மானுவேல் தேவன் நம்மோடிருக்கிறார் என்பவராக ஆனார். அவர் யூதனும் அல்ல, புறஜாதியும் அல்ல மாறாக அவர் தேவன்.

105. எந்த மிருக ஜீவன்களுக்குள்ளும் கற்பு என்பது கிடையாது. ஆனால் மனுக்குலத்தில் மட்டும் கற்பு என்பது ஒரு பெண்ணுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் ஒரு ஸ்திரீ தன்னை கறைப்படுத்தி, அதில் குறைவுக்கொண்டுவருவாளாகில் தன் ஜீவகாலமெல்லாம் குறைவுப்பட்டவளாகவே இருக்கிறாள். ஒரு வேளை அவளுடைய தவறு அவளுக்கு எவ்வளவுதான் மன்னிக்கபட்டாலும், நீதியாக்கப்படமுடியாது. தன்னை கறைப்படுத்தினதற்காக அது அவளுக்கு மன்னிக்கப்படலாம். ஆனால் இந்த அவளுடைய ஜீவியத்தில் அது நீதியாக்கப்பட முடியாது. அது எப்பொழுதும் அவளோடு இருக்கும்.

106. **சாத்தானின் இரத்தம் :** பாவத்தை பிறப்பித்தது, மரணத்தை கொண்டு வந்தது. இரத்தத்திற்கு இரத்தம் என்ற பிரமாணத்தின்படி இரத்தத்தினால் உண்டான பாவத்தை (விந்து இரத்தத்தினால் ஆகியது) கிறிஸ்து தம்முடைய இரத்தத்தை சிந்தி மீட்டார். இப்பொழுது **இயேசு கிறிஸ்துவின் இரத்தம் :** பாவத்தை நீக்கியது. சகல பாவங்களையும் நீங்கி நம்மை சுத்திகரிக்கிறது. (1யோ 1 : 9). ஜீவனை கொடுக்கிறது. பாவமன்னிப்பை கொடுக்கிறது (எபி 9 : 22). இந்த விசுவாசத்தில் வராத யாவும் பாவமே (யோ 4 : 22, யாத் 4 : 17, 1 யோ 3 : 4, 5:17)

107. இப்பொழுது மாம்ச இச்சையினால் உடலுறவுக்கொண்ட அவர்கள் கண்கள் திறக்கப்பட்டது. இப்பொழுது அவர்கள் தாங்கள் நிர்வாணிகள் என்பதை அறிந்தார்கள். அவர்கள் கண்களை மறைத்திருந்த பரிசுத்த ஆவி அவர்களுடைய கிரியைகளின் நிமித்தம் அவர்களை விட்டு அகற்றது. கண்களின்இச்சை, மாம்சத்தின் இச்சை, ஜீவனத்தின் பெறுமையினால் அவர்கள் கண்கள் திறக்கப்பட்டது. இப்பொழுது ஏவாள், தான் அந்த காட்டு மிருகத்தினால் வஞ்சிக்கப்பட்டதை உணர்ந்தாள். ஏவாள் வஞ்சிக்கப்பட்டு மிறுதலுக்குட்பட்டாள் (1 தீமோ 2 : 14). ஆதாம் மீறுதலை மூடினான் (யோபு 31 : 33) வெகுவாய் மன்னிக்கிறவரும், இரக்கமும், மனஉருக்கமும், நீடிய சாந்தமும், மகா கிருபையுள்ளவருமாகிய தேவனாகிய கர்த்தர் அவர்களை கைவிடவில்லை. தோலுடைகளை உண்டாக்கி அவர்களை உடுத்தினார் (ஆதி 3 : 21). தோலைப்பெற ஒரு மிருகம் செத்தது. ஆதாம் தனக்கு அத்தி இலைகளினால் உடைகளை உண்டாக்கிக்கொள்ள முயன்றான். ஆனால் தாவர ஜீவன் உபயோகமாயிருக்கவில்லை. நடமாடும் ஒரு ஜீவன் சாகவேண்டியதாய் இருந்தது. எனவே தேவன் ஒரு தாழ்மையான வர்க்கத்திலிருந்த ஒரு ஜீவனை கொன்று, என்றாவது ஒரு நாள் என் சொந்த ஜீவன் உங்களுக்காக கொடுக்கப்படும், அது மறுபடியும் உங்களுக்கும் எனக்கும் இடையில் முறிந்த உறவை / இணைப்பை ஏற்படுத்தும் உண்மையான ஜீவனாயிருக்கும் என்றார்.

108. **ஏவாள், சர்ப்பம் என்னை வஞ்சித்தது நான் புசித்தேன் என்றாள் (ஆதி 3 : 13) The serpent beguiled me and I did eat . வஞ்சிக்கப்படுதல் என்பது மனபூர்வமாக செய்யப்படும் ஒரு செயல் அல்ல. வஞ்சிப்பு என்பதன் அர்த்தம் - சாத்தான் என்னை கறைப்படுத்தினான் (Defiled) என்பதே. கவனியுங்கள் தோட்டத்தின் நடுவில் இருந்த விருட்சத்தின் கனி அவளுக்கு இச்சிக்கப்படதக்கதாக இருந்தது (ஆதி 3 : 3, 6) இதென்ன? ஏவாள் வஞ்சிக்கப்பட்டாள். ஆண் சரீரத்தின் மத்தியபாகத்தில் உள்ள கனியை பரித்து புசிக்க ஆசைக்கொண்டாள். அதாவது சாத்தானோடு உடலுறவு கொள்ள ஆசைகொண்டாள். அந்த நிலைக்கு அந்த காட்டு மிருகம் அவளை கொண்டுவந்தான். முடிவில் அவள் சாத்தானால் கர்ப்பவதியானாள். ஒரு மிருகத்தின் வாயிலாக சாத்தானின் வித்து ஒரு ஸ்திரீயினிடத்தில் உருவாக சாத்தியமாயிற்று. ஒரு மிருகத்தின் விந்துவினால் ஒரு ஸ்திரீ கருத்தரிக்க முடியாது. இது நூறு சதவீதம் உண்மை. ஆனால் அது இங்கு சாத்தியமாயிற்று. அதற்கென்றே அந்த காட்டு மிருகம் சிருஷ்டிக்கப்பட்டது / உண்டாக்கப்பட்டது. காரியம் நிறைவுபெற்றவுடன் அந்த காட்டு மிருகத்திற்கு மாற்றுசரீரம் கொடுக்கப்பட்டது. சாத்தானின் வித்து (ஆதி 3 : 15) மனுக்குலத்தில் பிரவேசிக்க இது ஒன்றெ வழியாக இருந்தது. தேவன் அதை அனுமதித்தார். தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை (சங் 114 : 8, லூக் 1 : 37)**

109. ஆக ஒரு மனுஷனாலே பாவமும், பாவத்தினாலே மரணமும் உலகத்தில் பிரவேசித்தது. (ரோ 5 : 12). ஆதாம் வஞ்சிக்கப்படவில்லை. ஸ்திரீயானவள் தான் வஞ்சிக்கப்பட்டு மீறுதலுக்குட்பட்டாள் (1 தீமோ 2 : 14). இது தேவனுடைய வார்த்தையின் மேல் விசுவாசமில்லாமல் கீழ்ப்படியாமையினால் உண்டானது(ஆதி 2 : 16,17, 3: 4-6)

110. **தேவனால் மரியாளின் வயிற்றிலிருந்து ஒரு குழந்தையாக அவர் பிறக்கமுடிந்தது. ஏனென்றால்**

**அவர் சிருஷ்டி கர்த்தர். ஆனால் லூசிபர் / சாத்தான் சிருஷ்டிப்பு. அவனால் எதையும் சிருஷ்டிக்க முடியாது. மாறாக எற்கனவே சிருஷ்டிக்கபட்டதை அவனால் தாறுமாறாக்கமுடியும். ஆனாலும் அவன் வித்து உலகத்தில் பிரவேசிக்கவேண்டும். அதற்கு மேற்கூறிய சம்பவம் ஒன்றே வழியாக இருந்தது. மேலும் அது தேவனுடைய திட்டமாகவும் இருந்தது. ஸ்திரீயின் வித்து, மானிட புணர்ச்சியின்றி பரிசுத்த ஆவியினால் பிறந்த ஒரு ஆண் குழந்தை. அந்த குழந்தை இயேசு என்பது உங்கள் அனைவருக்கும் தெரியும். ஆனால் சர்ப்பதின் வித்து மனிதனுடைய சம்பந்தமின்றி பிறந்த ஒரு ஆண் குழந்தை. அது தான் காயீன். தேவன் தனக்கு ஒரு மானிட சரீரத்தை உண்டாக்கிக்கொண்டார். ஆனால் சாத்தான் தனக்கு ஒரு மானிட சரீரத்தை அந்த காட்டு ஜீவன் மூலம் ஏற்படுத்திக்கொண்டான். யோசேப்பும் மரியாளை அறியும் முன்பு பரிசுத்த ஆவியானவர் அவள் மேல் நிழலிட்டார். ஏதேன் தோட்டத்தில் நடந்த இனசேர்க்கை செயலை நீங்க தேவன் ஒரு கன்னிகையின் மூலம் வரவேண்டியதாயிற்று. அவள் ஒரு குமாரனை பெற்றெடுத்தாள். அவர் மீட்பர். உலக இரட்சகர். ஆதாம் ஏவாளை அறியும் முன்பு சாத்தானால் கர்ப்பவதியானாள். அதன் மூலமாக அவளும் ஒரு குமாரனை பெற்றெடுத்தாள். அவன் சாத்தானின் வித்தாக இருந்தான். அவன் பாவத்தை விளைவிக்கிறவனாக இருந்தான்.**

111. தேவன் இரட்சகர் (Saviour) மற்றும் மீட்பர் (Redeemer) ஏசா 49 : 26 கிறிஸ்து உலக தோற்றமுதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி (வெளி 13 : 18) அப்படியானால் உலக தோற்றமுதல் பாவத்தில் விழுந்த ஆத்துமா ஒன்று இருந்திருக்கவேண்டும். அந்த ஆத்துமாவை தேவன் இரட்சிக்கவேண்டும், மீட்கவேண்டும். தேவனுடைய அநாதி தீர்மானத்தின்படி பாவத்தில் விழுவதற்காகவே ஏவாள் ஒரு உபசிருஷ்டிப்பாக (By Product) உருவாக்கப்பட்டாள். ஏவாள் ஒரு மூல சிருஷ்டிப்பில் இல்லை. மூல சிருஷ்டிப்பு எதுவும் பாவத்தில் விழ முடியாது. அனைத்து காட்டு, நாட்டு மிருக, பறவை, நீர்வாழ் ஜந்துக்கள் யாவும் மூல சிருஷ்டிப்பில் இருந்தது. ஆனால் ஏவாள் மட்டும் உபசிருஷ்டிப்பாக இருந்தாள். **ஏவாள் மூல சிருஷ்டிப்பில் இருந்திருந்தால் பாவம் என்ற ஒன்று இருந்திருக்கவே இருந்திருக்காது. அப்பொழுது தேவனுடைய இரட்சகர், மீட்பர் என்ற தன்மைகள் வெளிப்பட்டிருக்காது. தேவன் தம்முடைய இந்த தன்மைகள் வெளிப்படவே அந்த காட்டு மிருகத்தையும், லூசிபராகிய சாத்தானையும், ஏவாளையும் படைத்தார் / உருவாக்கினார்.**

112. பாருங்கள் ஆதாம் தேவனுடைய மூல சிருஷ்டிப்பில் இருந்தான். தேவ குமாரன் (லூக் 3 : 38) Adam, who was the son of God. அவன் பாவத்தில் விழமுடியாது. ஆதாம் தேவனுடைய குமாரனைத்தான் தோன்றச்செய்ய முடியும். ஏனென்றால் சிருஷ்டிப்புகள் யாவும் அது அது தன் தன் இனத்தையே பிறப்பிக்கவேண்டும். ஆதாம் தேவகுமாரனானால் அவன் தேவகுமாரர்களையே பிறப்பிக்கவேண்டும். இப்பொழுது தேவனுடைய மீட்பர் / இரட்சகர் தன்மை வெளிப்பட ஒன்று பாவத்தில் விழவேண்டும். **தேவன் ஒன்றை சிருஷ்டித்து அதை பாவத்தில் விழ வைப்பாரானால் அவர் நீதியுள்ளவராக முடியாது. அப்படியானால் சாத்தான் ஒருவனே மனுக்குலத்தை பாவத்தில் விழவைக்கமுடியும். மனுக்குலம் தவிர, இதர ஜீவராசிகள் பாவத்தில் விழமுடியாது. ஒரு நாய், ஒரு கழுதை, ஒரு யானை, ஒரு சிங்கம் எதுவும் பாவத்தில் விழமுடியாது. மேலும் வேறு எந்த ஜீவராசிகளும் பெண் வர்க்கத்தில் கற்பு என்ற தன்மை கொடுக்கப்படவில்லை. மானிட வர்க்கத்தில் உள்ள பெண்ணுக்கு மட்டுமே கற்பு கொடுக்கப்பட்டுள்ளது.**

**113. சாத்தான் மனுகுலத்தை பாவத்தில் விழவைக்க அவனும் மாம்சத்தில் வெளிப்படவேண்டும். தேவனும் பாவத்தில் விழுந்த மனுகுலத்தை இரட்சிக்க / மீட்க மாம்சத்தில் தோன்றவேண்டும். தேவனைப்போன்று சாத்தான் தனக்கென ஒரு சரீரத்தை சிருஷ்டித்துக்கொள்ள முடியாது. ஆதலால் தான் சாத்தான் மனிஷனுடைய தோற்றத்திறகு ஒத்ததான ஒரு காட்டு மிருகத்தை தெரிந்துக்கொண்டு, அந்த காட்டு மிருகத்தின் விந்து மனுக்குல இரத்தத்துடன் கலக்கும் என்பதை அறிந்தவனாய், அந்த மிருகத்துக்குள் நுழைந்தான். அந்த மிருகம் மூலம் ஏவாளை வஞ்சித்தது. அவள் கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப்பெற்றாள். அதாவது விபச்சாரத்தின் வாயிலாக ஒரு குமாரனை பெற்றெடுத்தாள். அவன் தான் காயீன். பாருங்கள் அவன் பொல்லாங்கானால் உண்டானவன் (1 யோ 3 : 12).**

114. பொல்லாங்கானால் உண்டாயிருந்து தன் சகோதரனை கொலை செய்த காயீனை போலிருக்கவேண்டாம் என 1 யோ 3 : 12 ல் தியானிக்கிறோம். இது ஆங்கிலத்தில் Not as Cain, who was of that wicket one and slew (killed) his brother என ஆங்கிலத்தில் உள்ளது. இதற்கு சிலர் விளக்கம் கொடுக்கும்போது பாவம் செய்கிறவன் பிசாசினால் உண்டாயிருக்கிறான் என 1 யோ 3 : 8 ல் தொளிவுபடுத்தப்பட்டிருக்கிறது. இதிலிருந்து காயீன் மாத்திரமல்ல பாவம்செய்கிறவர் ஒவ்வொருவருமே சாத்தானால் உண்டானவர்களே என தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது. இதை சாத்தானோடு உடலுறவுக்கொண்டு பிறந்தவர்கள் என கூறமுடியுமா? இதை போல தேவனால் பிறந்த எவனும் பாவம் செய்யான். ஏனெனில் தேவனுடைய வித்து அவனுக்குள் தரித்திருக்கிறது. அவன் தேவனால் பிறந்தபடியினால் பாவம் செய்ய மாட்டான் (1யோ 3 : 9) வித்து என்பது என்ன? பாவம் செய்யாத நிலை. இது தான் தேவனுடைய வித்து என விளக்கம் கொடுக்கிறார்கள்.

115. இப்பொழுது கவனியுங்கள் பொல்லாங்கானால் உண்டாயிருந்து என்பது ஆங்கிலத்தில் Cain, who was of that wicket one. காயீன், அந்த (that) பொல்லாங்கானால் உண்டாவன் என்றே பொருள்படும். அதாவது காயீன் அந்த பொல்லாங்கானால் பிறந்தவன் என்றே பொருள்படும். அதாவது பொல்லாங்கானுக்கு பிறந்து தன் சகோதரனை கொலை செய்த காயீனை போல் இருக்கவேண்டாம் என்றே பொருள்படும். பொல்லாங்கனுக்கு பிறந்ததினால் அவன் கிரியைகள் பொல்லாங்கானதாக இருந்தது. அவன் தன் சகோதரனை கொலை செய்தான். ஆதி 6 : 4 ல் **இராட்சதர்** பூமியிலே இருந்தார்கள் என வாசிக்கிறோம். இவர்கள் யார்? எங்கிருந்து வந்தார்கள்? இந்த ராட்சதர் மாம்ச உருவெடுத்து தோன்றினவர்கள் அல்ல. இவர்கள் காயீனின் புத்திரர். காயீனின் தகப்பன் ஆதி 3 : 1 ல் கூறப்பட்ட சர்ப்பமாக மாறிய காட்டு ஜீவன். இவன் எல்லா வகையிலும் மனிதனை போலவே காணப்பட்டான். ஆனால் மனிதனைக் காட்டிலும் பெரிய உருவம் படைத்தவன். இவர்கள்

முற்றிலும் வித்தியசமான ஜாதியார். இவர்கள் சர்ப்பத்தின் வித்துகள்

116. மேலும் 1 யோ 3 : 8 ல் பாவம் செய்கிறவன் பிசாசினால் உண்டாயிருக்கிறான் என்பது ஆங்கிலத்தில் He that committeth sin is of the Devil என உள்ளது. இது பொதுவாக பாவம் செய்கிற ஒருவன் பிசாசினால் உண்டாயிருக்கிறான் என கூறுகிறது. காயீன் பிசாசினால் உண்டானவன் (Cain who was of that wicket one) என்பதற்கும், பாவம் செய்கிறவன் பிசாசினால் உண்டாயிருக்கிறான் (one who committeth sin of the the Devil) என்பதற்கும் வித்தியாசம் இல்லையா? உண்டு. முந்தியது அவனுடைய பிறப்பை குறிக்கிறது. பிந்தினது அவனுடைய கிரியை குறிக்கிறது. ஒருவனுடைய பிறப்பிற்கும் அவனுடைய கிரியைக்கும் வித்தியாசம் உண்டு. நாம் தேவனுடைய குமாரர் என்பதற்கும், ஆதாம் தேவனுடைய குமாரன் என்பதற்கும் வித்தியாசம் இருக்கிறது. நாம் நம்முடைய விசுவாசத்தினால் / கிரியைகளினால் (எபே 4 : 22 - 24, கொலோ 3 : 10) தேவனுடைய குமாரரும், குமாரத்திகளுமாயிருக்கிறோம். ஆனால் ஆதாம் தேவனால் சிருஷ்டிக்கபட்டவன் / உண்டாக்கப்பட்டவன் (Adam, who was the son of God) பாருங்கள் Adam, who was the son of God, Cain, who was of that wicket one. தேவனால் பிறந்த எவனும் பாவம் செய்யான் என்றால் அவருடைய வித்து அவனுக்குள் தரித்திருக்கிறது. வித்து என்பது தேவனுடைய வார்த்தை (லூக் 8:11) ஆதாம் தேவனுடைய வார்த்தையினால் பிறந்தவன் (ஆதி 1 அதி)தேவனுடைய வார்த்தையில் நிலைத்திருப்பவன். ஆதலால் அவன் பாவம் செய்ய முடியாது

117. உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன் (ஆதி 3 : 15). அவளுக்கு ஒரு வித்து இருந்தது. அப்படியானால் சாத்தானுக்கு ஒரு வித்து இருக்கவேண்டும். சாத்தானும் ஏதேனும் ஒரு வழியில் தன் வித்தை இந்த பூமியில் பிரவேசிக்க செய்ய வேண்டும். ஏவாளிடம் ஆதாம் பிரவேசிக்கும் முன்பே சாத்தான் பிரவேசித்துவிட்டான். காயீன் பிறந்தான். இங்கு தான் அந்த வித்து. ஆதி 3 : 15 ல் சொல்லப்பட்ட **உன் வித்து.** ஸ்திரீக்கு வித்து கிடையாது. அவள் நிலமாய் இருக்கிறாள். சர்ப்பமானது அவனுடைய வித்தை அந்த நிலத்தில் விதைத்துவிட்டான். பால் உணர்ச்சி மற்றும் புணர்ச்சியின் மூலமாக சர்ப்பம் என்னும் சாத்தானால் அது கொண்டுவரப்பட்டது. ஆபேலும் சேத்தும் ஆதாமிலிருந்து வந்தார்கள். அந்த பொய்யனும், கொலைகாரனுமாயிருந்த காயீன் எங்கிருந்து வந்தான்? அதுவும் ஒரு வித்தாகதான் இருக்கவேண்டும். ஏனென்றால் அவனும் ஒரு வித்தாயிருந்தான். காயீனும் ஒரு மனுஷனாயிருந்தான். எல்லா ஜீவனும் தேவனிடத்திலிருந்துதான் வரவேண்டும். நிச்சயமாக அப்போஸ்தலனாகிய பவுல், இயேசுவை காட்டிக்கொடுத்த யூதாஸ் தேவனிடத்திலிருந்து தான் வந்தார்கள். நாம் ஒவ்வொருவரும் தேவனிடத்திலிருந்து தான் வந்தோம். அவர் உன் தலையை நசுக்குவார். நீ அவர் குதிங்காலை நசுக்குவாய். நசுக்குதல் என்னால் பாவநிவாரணம் செய்தல் என்று அர்த்தம். சாத்தான் ஆதாமின் மனைவியுடன் விபச்சாரக் குற்றத்தை செய்தான். அவன் அப்படிசெய்தபொது தேவன் ஆதாமையும் ஏவாளையும் கூப்பிட்டார். அவன் நான் நிர்வாணமாய் இருகிறேன் என்றான். தேவன், நீ நிர்வாணி என்று உனக்கு அறிவித்தவன் யார் என்றார். ஆதாம் என்னுடனே இருக்கும்படி தேவரீர் தந்த ஸ்திரீயானவள் அந்த விருட்சத்தின் கனியை எனக்கு கொடுத்தாள், நான் புசித்தேன் என்றான். அது உண்மைதான். ஏவாள் தான் தன்னோடு உடலுறவுக்கொள்ள ஆதாமை இணங்கச்செய்தாள். பாருங்கள் கனியை தன் புருஷனுக்கும் புசிக்க கொடுத்தாள். தேவனாகிய கர்த்தர் ஸ்திரீயை நோக்கி : நீ இப்படி செய்தது என்ன என்றார்? ஸ்திரீயானவள் சர்ப்பம் என்னை வஞ்சித்தது, நான் புசித்தேன் என்றாள். அவள் சர்ப்பம் என்னை வஞ்சித்தது என்றாள். வஞ்சித்தல் (Beguiled) கறைப்படுத்துதல் (Defiled) என்று பொருள். பாருங்கள் சாத்தான் ஏவாளுக்கு ஆப்பிள் பழம் கொடுக்கவில்லை. மாறாக அவளை கறைப்படுத்தினான். அதாவது அவளை வஞ்சித்தான், அவளோடு விபச்சாரம் செய்தான். இது தான் சத்தியம்.

**118. தேவன் ஒரு மனுஷனை சிருஷ்டித்து, தான் இரட்சகர், மீட்பர் என்பதை வெளிப்படுத்த, அவனை பாவத்துக்குள் தள்ளுவது நியாயமாகுமா? அது நீதியாகுமா? பாருங்கள் தேவன் ஆதாமை அவன் சுயாதினத்திற்கு ஒப்புக்கொடுத்தார். இதை செய்யாதே, செய்தால் அதன் விளைவு இது. இப்பொழுது அதை செய்வது, செய்யாதிருப்பது அவன் சுயாதினம். அவன் தவறை தெரிந்துக்கொள்ளும்போது, அதற்கு தேவன் காரணமாக முடியாது. ஆனால். அதை அவன் செய்வான் என்று தேவன் அறிந்தவராய், அவனை மீட்கவும் ஆயத்தமானார். பாருங்கள் நன்மை அறியத்தக்க விருட்சத்தின் கனியை புசிக்கவேண்டாம், அதை புசிக்கும் நாளின் நீ சாகவே சாவாய் என்றார். ஆனால் அவனோ தன் தன் மனைவிக்கு செவிக்கொடுத்து சாவை தெரிந்துக்கொண்டான். ஜீவனை உதறித்தள்ளினான். ஆதாம் வரைக்கும் ஒன்றும் இழக்கப்படவில்லை. ஆதாமுக்கு பிறகு பூமியில் உள்ள யாவும் இழக்கப்பட்டன. பூமியினுடைய சிருஷ்டிப்பு யாவும் இழக்கப்பட்டன. ஆதாமுடன் சர்வ சிருஷ்டியும் எல்லாவற்றையும் இழந்தது. ஆதாமுடன் பாவத்தில் விழுந்து, திரும்ப வரக்கூடாதபடிக்கு பின்னாக கடந்தன. அதற்கு தேவன் என்ன செய்யக்கூடும்? இப்பொழுது விழுந்த அவனை அவர் காப்பாற்ற முன்வந்தார். ஏனென்றால் அவர் இரட்சகர். இயேசு எல்லாவற்றை அறிந்திருக்கிறவர் (மத் 12 : 25, யோ 2 : 24) ஆதலால் தேவன் தன் குமாரன் விழுந்து போவான் என்பதை அறிந்தவராகவே இருந்தார். ஆதலால் அவனை இரட்சிக்க தன்னை ஆயத்தம் படுத்தினார்.**


119. இப்பொழுது ஏவாள் விழுவதற்கென்றே உருவாக்கப்பட்டஒரு பாத்திரம். அவள் கனவீனமான பாத்திரம் (ரோ 9 : 21) தேவன் எவன் மேல் இரக்கமாயிருக்க சித்தமாயிருக்கிறாரோ அவன் மேல் இரக்கமாயிருக்கிறார், எவனை கடினப்படுத்த சித்தமாயிருக்கிறாரோ அவனை கடினப்படுத்துகிறார். அப்படியானால், அவர் இன்னும் ஏன் குற்றம் பிடிக்கிறார்? அவர் சித்தத்திற்கு எதிர்த்து நிற்பவன் யார்? மனுஷனே, தேவனோடு எதிர்த்து தர்க்கிக்கிற நீ யார்? உருவாக்கப்பட்ட வஸ்து உருவாக்கினவரை நோக்கி : நீ ஏன் என்னை இப்படி உருவாக்கினாய் என்று சொல்லலாமா? மிதிபட்ட ஒரே களிமண்ணினாலே குயவன் ஒரு பாத்திரத்தை கனமான

காரியத்துக்கும், ஒரு பாத்திரத்தை கனவீனமான காரியத்திற்கும் பண்ணுகிறதற்கு மண்ணின் மேல் அவனுக்கு அதிகாரம் இல்லையோ? (ரோ 9 : 18-21) ஆதலால் ஏவாளை அவர் ஏன் ஒரு உபசிருஷ்டிப்பாக உருவாக்கினார் என்று நாம் தர்க்கிக்கமுடியாது.

120. முதலில் சாத்தான் (காட்டு மிருகம்) ஏவாளை அறிந்தது. அவள் கர்ப்பவதியானாள். கர்த்தர் சாத்தானின் வித்துக்கு ஜீவனை கொடுத்தார். அவள் கர்த்தரால் ஒரு மனுஷனை பெற்றேன் என்றாள் (ஆதி 4 : 1) பாருங்கள் ஒளியையும், இருளையும் ; சமாதானத்தையும் தீங்கையும் உண்டாக்குகிறவர் கர்த்தர் (ஏசா 45 : 7) இது தேவ நீதி. இந்த நீதியின் அடிப்படையில் சாத்தானின் வித்தாகிய காயீனின் ஜீவனை தேவனிடமிருந்து பெற்றான். பாருங்கள் ஒருவன் களையை ஒரு நல்ல நிலத்தில் விதைத்தால் அந்த களையும் முளைத்து, வளரும், இது உற்பத்தி பிரமாணத்தில் தேவனுடைய நீதி. ஒரு விதை விதைக்கப்பட்டால், அது முளைத்து வளர வேண்டும். அது தேவனுடைய பிரமாணம். ஏவாளின் கர்ப்பம் ஒரு நல்ல நிலம். அதில் சாத்தான் / பொல்லாங்கன் பொல்லாத விதையை விதைத்தான். அது பலன் கொடுத்தது. காயீன் பிறந்தான். பாருங்கள் இது தேவனுடைய உற்பத்தி பிரமாணம். பின் நீங்கள் ஆதி 6 : 4 க்கு வந்தால் அங்கு காணப்படும் இரட்சதர் அவன் சந்ததியாரே. **சர்ப்பமானது தனக்கு வித்தை உடையதாக இருக்கவில்லையென்றால் அப்பொழுது கிறிஸ்துவும் பிறக்கவில்லை. ஏனெனில் அவர் சர்ப்பத்தை நோக்கி : உன் வித்துக்கும் ஸ்திரீயின் வித்துக்கும் பகை உண்டாக்குவேன் என்று கூறினார். சர்ப்பத்தின் வித்தை பற்றிய விஷயம் ஒரு கட்டு கதையாக இருக்குமானால், அப்பொழுது கிறிஸ்துவின் பிறப்பும் ஒரு புராண கட்டுக்கதையாக ஆகிவிடும். சர்ப்பத்திற்கும் ஒரு வித்து உண்டாயிருந்தது. இதை அநேகர் புரிந்துக்கொள்ள முடியவில்லை. ஏனெனில் அவர்களுக்கு அதைப்பற்றிய வெளிப்பாடு இருக்கவில்லை.**

121. தேவன் தம்முடைய சாயலாக மனுஷனை சிருஷ்டித்தார். அவனை தேவசாயலாகவே சிருஷ்டித்தார். ஆணும் பெண்ணுமாக அவர்களை சிருஷ்டித்தார். பின்பு தேவன் அவர்களை நோக்கி : நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிறப்பி... பூமியின் மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டுக் கொள்ளுங்கள் என்று சொல்லி தேவன் அவர்களை ஆசீர்வதித்தார் (ஆதி 1 : 27, 28). ஆணுக்கு ஆண் குறியையும், பெண்ணுக்கு பெண் குறியையும் தேவன் கொடுத்ததன் நோக்கமே அவர்கள் பலுகிப்பெருக. அதாவது மனுக்குல இனஅபிவிருத்திக்காக. அவர்கள் தங்கள் தங்கள் ஜாதியின் படியே விதையை பிறப்பிக்கவும், தங்கள் தங்கள் விதையையுடைய கனிகளை கொடுக்கவும் படைத்தார். ஆனால் ஏதேன் தோட்டத்தில் இந்த அவயவமானது தவறான முறையில் பயன்படுத்தப்பட்டது. **சாத்தான் மாம்ச இச்சையை ஏவாளிடத்தில் உண்டாக்கினான். ஏவாள் அந்த காட்டு மிருகம் இச்சிக்கப்படத் தக்கதாய் இருக்கக்கண்டாள். மாம்ச இச்சையோடு அவனுடன் உடலுறவுக்கொண்டாள். பலுகிப்பெருக அல்ல மாறாக மாம்ச இச்சையை நிறைவேற்ற. ஆனால் சாத்தான் தந்திரமாக தன் வித்தை மனுக்குலத்துக்குள் நுழைக்க செயல்பட்டான். ஏவாளை ஆசைக்காட்டி மோசம் போக்கினான். ஆக ஏவாளுக்கு பலுகிப்பெருக கொடுக்கப்பட்ட அவயவம் மாம்ச இச்சையை பூர்த்தி செய்ய அவளால் பயன்படுத்தப்பட்டது. ஆனாலும் பலுகிப் பெருகுவதன் நோக்கம் நிறைவேறப்பட்டது. கணவனும் மனைவியும் மாம்ச இச்சையோடு உடலுறவு கொள்கிறார்கள். ஆனாலும் அதன் முடிவு இனஅபிவிருத்தியில் வந்துமுடிகிறது. இந்த இச்சையை தான் சாத்தான் ஏவாளுக்கு ஆதியில் கற்ப்பித்தான். அந்த விருட்சம் (காட்டு மிருகம்) இச்சிக்கப்படதக்கதாய் இருந்தது (மாம்ச இச்சை). பார்வைக்கு இன்பமாய் இருந்தது (கண்களின் இச்சை) ஏவாளை சாத்தான் கவர்ச்சியின் வழிகளில் திருப்பி அவளை வஞ்சித்தான். ஆனால் பாருங்கள் மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்தில் உள்ளவைகளெல்லாம் பிதாவினால் உண்டானவைகள் அல்ல. அவைகள் உலகத்தினால் உண்டானவைகள் (1 யோ 2 : 16). அவைகள் பிசாசினால் உண்டானவைகள்.**

122. இனஅபிவிருத்திக்காக கொடுக்கப்பட்ட அவயவங்கள் மாம்ச இச்சைகளை பூர்த்தி செய்ய உபயோகப்படுத்தப்பட்ட பின் அவர்கள் கண்கள் திறக்கப்பட்டது. அவர்கள் நிர்வாணிகள் என்று அறிந்தார்கள். ஏவாள் தன் வேசித்தனங்களை வெளிப்படுத்தி தன்னை நிர்வாணமாக்கினாள் (எசே 23 : 18) தன் கணவன் இருக்க வேறொரு நபரோடு உடலுறவு கொண்டு, விபச்சாரம் செய்து தன்னை விபச்சாரி ஆக்கினாள். **அந்த காட்டு மிருகத்திற்கு அதன் ஜோடு (மனைவி) இருந்தும், ஏவாளுக்கு அவள் புருஷன் இருந்தும் ஒருவர் மீது ஒருவர் மோகம் கொண்டனர். ஏவாள் காட்டு மிருகத்தின் அழகை இச்சித்தாள். கண்களின் இச்சை, மாம்சத்தின்இச்சை, ஜீவனத்தின் பெறுமை (நீங்கள் தேவர்களைப்போல் இருப்பீர்கள்) ஏவாளுக்குள் சாத்தான் கொண்டுவந்தபின், ஏவாள் நிர்வாணத்தின் மேல் மோகம் கொண்டவனாக தன் காரியத்தை சாதித்தான். சாத்தான் தன் காரியத்தில் வெற்றிப்பெற்றான். ஏவாள் தன் காரியத்தில் இழந்துபோனாள். முடிவு சர்ப்பத்தின் வித்து ஏதேன் தோட்டத்தில் ஏவாளின் கர்ப்பத்தில் உருவாக்கி மனுக்குலத்துடன் வந்து கலந்தது. ஆக உலகில் முதல் விபச்சாரம் செய்த குற்றம் ஏவாளை சாரும். அவள் ஜீவனுள்ளோருக்கெல்லாம் தாயானாள் (ஆதி 3 : 20) ஏவாள் தன் கர்ப்பத்தை கலப்பினமாக்கி, ஜீவனில்லாமல் மரணத்திற்கு பிறந்த தவறான பிள்ளைகளை இவ்வுலகத்திற்கு கொண்டு வந்தாள்.**




123. இந்த மனித குரங்கின் இரத்தம் இந்த மனிதனின் இரத்தத்தோடு கலவாது. ஆனால் இந்த மனித குரங்கிற்கும் மனிதனுக்கும் இடையில் ஒரு காட்டு மிருகம் இருந்தது. அதன் இரத்தம்

மனிதனுடைய இரத்ததோடு கலக்கக்கூடியதாக இருந்தது. இது ஏவாளை வஞ்சித்து தன் வித்தை மனுக்குலத்திற்குள் பிரவேசிக்க செய்தது. தேவனால் சபிக்கப்பட்டு ஒரு மாற்று உருவத்தை பெற்றது. அது தான் சர்ப்பம் / பாம்பு. தொடக்கத்தில் சாத்தான் / காட்டு மிருகம் நிமிர்ந்து நின்றது. மனுஷ சுபாவங்களை உடையதாகக்காணப்பட்டது. தேவன் அந்த மிருகத்தை சபித்த போது அது சர்ப்பமாயிற்று. ஆனால் தொடக்கத்தில் அது சர்ப்பமல்ல. மாறாக ஒரு காட்டு மிருகம். சபிக்கப்பட்ட பின்புதான் அது சர்ப்பமாயிற்று. சபிக்கப்பட்ட பின்பு நிமிர்ந்து நடந்து சென்ற அந்த காட்டு மிருகம் ஊர்ந்து செல்லும் ஒரு ஜந்துவாகிவிட்டது. ஆனாலும் சாபம் அதன் அழகை முற்றிலும் எடுத்துப்போடவில்லை. பாருங்கள் பாம்பு ஊர்ந்து செல்வதிலும் ஒரு அழகு உண்டு. அதனுடைய அழகை, புத்திசாலித் தனத்தை சாபம் எடுத்துப்போடவில்லை.

124. ஒரு இனத்தை தேவன் சிருஷ்டித்து பின்பு அதை அழிக்க முடியாது. ஒன்றை அழிப்பதற்காக அவர் அதை சிருஷ்டிக்கவில்லை. பாருங்கள் தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார், அது மிகவும் நன்றாயிருந்தது (ஆதி 1 : 31) பாருங்கள் மிருகங்களில் ஆண் பெண், பறவைகளில் ஆண் பெண், மச்சங்களில் ஆண் பெண் யாவும் நன்றாயிருந்தது. ஆனால் மனுக்குலத்தில் இன்னும் பெண் வெளிப்படவில்லை. இந்த திருஷ்டாந்தத்தின்படி தேவன் அந்த காட்டு மிருகத்தை அழிக்கமுடியாது. அது அவருடைய மூல சிருஷ்டிப்பில் ஆணும் பெண்ணுமாக இடம் பெற்றுள்ளது. ஆதலால் தேவன் அந்த காட்டு மிருகத்தை சபித்து, அதற்கு மாற்று சரீரம் (பாம்பு, ஊர்ந்து செல்லும் ஒரு ஜந்து) கொடுத்தார். இப்பொழுது பாம்பின் ஒரு எலும்புக்கூட அந்த காட்டு மிருகத்தின் எலும்பு போல் இல்லை. முற்றிலுமான ஒரு மாற்றம். ஜீவனை கொடுத்து, அதன் பின் தேவன் அந்த ஜீவனை அழிப்பவர் அல்ல. அவர் நம்முடைய சாவை விரும்புவதில்லை. அவர் ஜீவனை அழிக்க வரவில்லை. மாறாக இரட்சிக்கவே வந்தார்.

125. ஏவாள் ஒரு மரத்தின் கனியை புசித்து தான் நிர்வாணி என்று அறிந்தால், இப்பொழுது அந்த விருட்சம் எங்கே? அதன் கனி எங்கே? தேவன் ஒவ்வொன்றும் அதனதன் இனத்தை பிறப்பிக்க கடவது என்றாரே? அந்த நீதியின் படி இந்த இனம் ஏன் தன் இனத்தை பிறப்பிக்கவில்லை? பின்பு தேவன் : பூமியானது ஜாதி ஜாதியான ஜீவஜந்துகளாகிய நாட்டு மிருகங்களையும், ஊரும் பிராணிகளையும், காட்டு மிருகங்களையும், ஜாதி ஜாதியாய் பிறப்பிக்கக்கடவது என்றார். அது அப்படியே ஆயிற்று. தேவன் பூமியிலுள்ள ஜாதி ஜாதியான காட்டு மிருகங்களையும், ஜாதி ஜாதியான நாட்டு மிருகங்களையும், பூமியில் ஊரும் பிராணிகள் எல்லாவற்றையும் உண்டாக்கினார். தேவன் அது நல்லது என கண்டார் (ஆதி 1 : 24, 25) தேவன் பூமியானது புல்லையும், விதையை பிறப்பிக்கும் பூண்டுகளையும் பூமியின் மேல் தங்கள் தங்கள் விதையையுடைய கனிகளை தங்கள் தங்கள் ஜாதியின்படியே கொடுக்கும் கனி விருட்சங்களையும் முளைப்பிக்கக்கடவது என்றார். அது அப்படியே ஆயிற்று. பூமியானது புல்லையும், தங்கள் தங்கள் ஜாதியின்படியே விதையை பிறப்பிக்கும் பூண்டுகளையும் தங்கள் தங்கள் ஜாதியின்படியே தங்கள் தங்கள் விதையையுடைய கனிகளை கொடுக்கும் விருட்சங்களையும் முளைப்பித்தது. தேவன் அது நல்லது என கண்டார் (ஆதி 1 : 11, 12) தேவன் நல்லது என கண்ட அந்த கனிக்கொடுக்கும் விருட்சம் எங்கே?. ஏன் அது தன் இனத்தை பிறப்பிக்கவில்லை?

126. பொதுவாக ஸ்தாபன சபை போதகர்களை இந்த கருத்துக்கு / வெளிப்பாட்டிற்கு இணங்கச் செய்வது கடினமாக இருக்கிறது. அவர்கள் வேறுவிதமான கருத்துக்களை கொண்டவர்களாக இருக்கிறார்கள். ஆதாமும் ஏவாளும் ஆப்பிள் பழத்தை தின்றதாக கூறுகிறார்கள். ஆப்பிள் பழங்களை தின்னது ஆதாமையும் ஏவாளையும் நிர்வாணிகள் என்று அறிந்துக்கொள்ள செய்யுமானால், நாம் மறுபடியும் அவர்களுக்கு ஆப்பிள் பழங்களை கொடுப்பது நலம். பாருங்கள் அவர்களுடைய செயல் அவர்கள் நிர்வாணிகள் என்று அறிந்துக்கொள்ள செய்தது. அப்படியானால் நிச்சயமாக அது நூறு சதவீதம் இனசேர்க்கைக்கடுத்த செயலாகத்தான் இருக்கவேண்டும். ஏனென்றால் புசிக்க வேண்டாம் என்ற கனியை அவர்கள் புசித்த போது அவர்கள் நிர்வாணி என்று அறிந்துக்கொண்டார்கள். அவர்கள் நிர்வாணிகள் என்பதை அறிந்து கொள்ளாமலிருக்க, அவர்கள் சரீரத்தின் மத்தியில் உள்ள கனியில் பங்குக்கொள்ளாமலிருக்க அவர்கள் கட்டளையிடப்பட்டனர். ஆனால் சாத்தான் அவர்களை வஞ்சித்தான். அவர்கள் அதில் பங்கு கொண்டார்கள். இப்பொழுது அவர்கள் தாங்கள் நிர்வாணிகள் என்று அறிந்துக்கொண்டார்கள். பாருங்கள் ஒரு ஸ்திரீ கனி தரும் மரம். நீங்கள் உங்கள் தாயின் கனி. அந்த கனியைத்தான் புசிக்க கூடாது என்று கட்டளை பெற்றனர்.

127. பாருங்கள் பாவம் என்று ஒன்று இருக்கிறது என்றால் அதற்கு மூலப்பாவம் இருக்கவேண்டுமல்லாவா? பத்திரம் என்று ஒன்று இருக்குமானால் அதற்கு மூலப்பத்திரம் ஒன்று இருக்கவேண்டும் அல்லவா? பாருங்கள் பாவமும் இங்கே தான் இருக்கிறது. அதன் மூலப்பாவமும் இங்கே தான் இருக்கிறது. அது தான் சர்ப்பம். அந்த காட்டு மிருகத்திலும் ஆண் இருந்ததென்றால், பெண்ணும் இருந்திருக்க வேண்டும். மிருகங்கள் அனைத்தும் ஆணும் பெண்ணுமாக பலுகிப்பெருக சிருஷ்டிக்கப்பட்டது. சர்ப்பத்திலும் ஆண் பெண் உள்ளது. அது தன் இனத்தை பெருக்குகிறது. அந்த காட்டு மிருகத்தோடு அதன் பெண் வர்க்கமும் சபிக்கப்பட்டு மாற்று சரீரம் பெற்று அதுவும் சர்ப்பமாயிருக்கவேண்டும். பெண் மட்டும் தனிமையாக இருக்க முடியாது. அது முதிர்வயதடைந்து மரிப்பது தேவநீதியாகாது. அது தன் தன் இனத்தை பிறப்பிக்க வேண்டும். ஆதலால் அந்த காட்டு மிருகத்தில் ஆணும் பெண்ணும் மாற்று சரீரம் பெற்றது.

128. இப்பொழுது பாருங்கள் ஆதாம், தன் மனைவியாகிய ஏவாளை அறியுமுன் அந்த காட்டு மிருகம் /

சாத்தான் அறிந்தான். காயீன் பிறந்தான். பிறக்கும் எந்த குழந்தையும், அது முறை தவறின செயலினால் பிறந்தாலும், அல்லது வேறுஎவ்விதம் பிறந்தாலும், தேவனுடைய கிரியையினால் மாத்திரமே தோன்ற முடியும். அவர் ஒருவர் மாத்திரமே ஜீவனை உற்பத்தி செய்ய முடியும். நிச்சயமாக. அது உண்மை. அவள் கர்த்தரால் நான் ஒரு மனுஷனை பெற்றேன் என்றாள். அவள் அவ்விதம்தான் கூறவேண்டும். அது ஒரு வித்து. அவன் தன் தகப்பனின் சுபாவத்தை உடையவனானான். கொலை செய்தான் (ஆதி 4 : 8) காயீன் தன் சகோதரனாகிய ஆபேலோடே பேசினான் ; அவர்கள் வயலின் வெளியில் இருக்கும் சமயத்தில், காயீன் தன் சகோதரனாகிய ஆபேலுக்கு விரோதமாய் எழும்பி அவனை கொலை செய்தான். இயேசு தம்மை விசுவாசிக்கிற யுதர்களை நோக்கி : நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசானவனால் உண்டானவர்கள் ; உங்கள் பிதாவினுடைய இச்சையின்படி செய்ய மனதாய் இருக்கிறீர்கள் ; அவன் ஆதிமுதற்கொண்டு மனுஷ கொலை பாதகனாக இருக்கிறான். சத்தியம் அவனிடத்தில் இல்லாதபடியினால் அவன் சத்தியத்திலே நிலை நிற்கவில்லை. அவன் பொய்யனும் பொய்க்கு பிதாவுமாயிருக்கிறபடியால் அவன் பொய் பேசும் போது தன் சொந்தத்தில் எடுத்து பேசுகிறான் என்றார் (யோ 8 : 31, 44, 45) பாருங்கள் இங்கு இயேசு மனுஷ கொலைபாதகன், பொய்யன் என்று யாரை குறிப்பிடுகிறார்? காயீனை அல்லவா? அவன் தன் சகோதரனை கொலை செய்ததோடு மட்டுமல்ல, கர்த்தர் அவனிடம் உன் சகோதரனாகிய ஆபேல் எங்கே என்றார். அவன் தன் சகோதரனாகிய ஆபேலை கொலை செய்தும், நான் என் சகோதரனை அறியேன் ; நான் என் சகோதரனுக்கு காவலாளியோ என்றான் (ஆதி 4 : 8, 9) பாருங்கள் சாத்தானுடைய வித்து காயீன் என்பதை இயேசு கிறிஸ்துவும் உறுதிப்படுத்துகிறார். காயீன் ஆதாமுடைய குமாரனே அல்ல. பாருங்கள் தேவனால் பிறந்த எவனும் பாவம் செய்யான். ஏனென்றால் அவருடைய வித்து அவனுக்குள் தரித்திருக்கிறது. அவன் தேவனாலே பிறந்தப்படியால் பாவம் செய்யமாட்டான் (1யோ 3 : 9) பாவம் செய்கிறவன் பிசாசினாலே உண்டாயிருக்கிறான். ஏனென்றால் பிசாசானவன் ஆதி முதல் பாவம் செய்கிறான். (1யோ 3 : 8) ஆதாம் தேவனுடைய குமாரனாய் இருப்பதால், தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட முதல் குமாரனாக இருக்கிறபடியால், தேவனுடைய வித்து அவனுக்குள் தரித்திருக்கிறபடியால், அவனுடைய பிறப்பு ஒரு கொலை பாதகனாகவும், பொய் சொல்கிறவனாகவும் ஒருக்காலும் இருக்க முடியவே முடியாது.

129. இப்பொழுது கவனியுங்கள். ஆதாமின் மனைவியாகிய ஏவாள், இதை இன்னும் சற்று விளக்கமாக கூறப்போனால் ஏவாள் இன்னும் ஆதாமின் மனைவியாகவில்லை. அவள் அவனுக்கு நியமிக்கப்பட்டிருந்தாள் என்றே கூறலாம். ஒரு ஆணுக்கு ஒரு பெண் எப்பொழுது மனைவியாகிறாள்? அவர்கள் இருவரும் ஒன்றாக இணையும் போது தான். அன்று முதல் தான் அவர்கள் ஒரே சரீரமாகிறார்கள். அது வரை அவர்கள் ஒரே சரீரம் என கூற முடியாது. ஆக இங்கு ஆதாம் ஏவாளை அறியும்முன் அந்த காட்டு மிருகம் / சாத்தான் ஏவாளை அறிந்தது. அதன் பின் தான் ஆதாம் ஏவாளை அறிந்தான். இப்பொழுது காட்டு மிருகம் ஏவாளை அறிந்தது, ஆதாமும் ஏவாளை அறிந்தான். இருவரும் ஏவாளை அறிந்தார்கள். ஆதி 4 : 1 ல் காட்டு மிருகத்தை பற்றி எதுவும் கூறப்படாமல் ஆதாம் தன் மனைவியாகிய ஏவாளை அறிந்தான், அவள் கர்ப்பவதியானாள். முதலாவது காயீனைப் பெற்று கர்த்தரிடம் ஒரு மனுஷனை பெற்றேன் என்றாள். பின்பு அவனுடைய சகோதரனாகிய ஆபேலை பெற்றாள் என்று வாசிக்கிறோம். காட்டு மிருகமும், ஆதாமும் ஏவாளை அறிந்தார்கள். ஏவாள் கர்ப்பவதியானாள். அவள் வயிற்றில் இரு கர்ப்பங்கள் அடுத்து அடுத்து உருவானது. முதலாவது கர்ப்பப்பையிலிருந்து காயீன் பிறந்தான். இரண்டாவது கர்ப்பப்பையிலிருந்து அவன் சகோதரனாகிய ஆபேல் பிறந்தான். பாருங்கள் ஆதாம் ஏவாளை ஒரு முறைதான் அறிந்தான் (ஆதி 4 : 1) ஆனால் இரு குழந்தைகள் அடுத்தடுத்து பிறந்தனர். இதில் ஒன்று காட்டு மிருகத்தின் / சாத்தானின் குழந்தை. அது காயீன். அவன் பொல்லாங்கானால் உண்டானவன். ஆயினும் பக்தி உள்ளவன். தேவனை விசுவாசித்தான். அவருக்கு காணிக்கை செலுத்த முன்வந்தான். இன்று ஸ்தாபன சபைகளை சேர்ந்த மக்களை போன்று. இரண்டாவது குழந்தை ஆபேல். அவன் ஆதாமின் குழந்தை. கர்த்தர் ஆபேலையும் அவன் காணிக்கையும் அங்கீகரித்தார் (ஆதி 4 : 4)

130. ஆதாம் தன் மனைவியாகிய ஏவாளை அறிந்தான். அவள் கர்ப்பம் தரித்து காயீனை பெற்று கர்த்தரிடத்தில் ஒரு மனுஷனை பெற்றேன் என்றாள். பின்பு அவனுடைய சகோதரனாகிய ஆபேலை பெற்றாள் (ஆதி 4 : 1, 2) பின்னும் ஆதாம் தன் மனைவியாகிய ஏவாளை அறிந்தான். அவள் ஒரு குமாரனை பெற்று அவனுக்கு சேத் என்று பெயரிட்டாள் (ஆதி 4 : 25) இங்கு நீங்கள் நன்கு கவனிப்பீர்களானால் **அறிதல்** என்ற செயல் இருமுறை மட்டுமே செய்யப்பட்டது. ஆனால் பிறந்தது மூன்று பிள்ளைகள். ஆதாம் ஏவாளை முதலில் அறிந்தபோது அவள் இரட்டை பிள்ளைகளை பிரசவித்தாள். ஒருவன் சர்ப்பத்தின் வித்து காயீன். அடுத்தவன் ஆதாமின் வித்து ஆபேல். அந்த காட்டு மிருகத்துடன் உடலுறவுக் கொண்ட பிறகு, ஏவாள் ஆதாமிடம் சென்று அது என்னவென்று கூறினாள். அதன் பிறகு ஆதாமும் ஏவாளுடன் கூடி வாழ்ந்ததினால் அதன் மூலமான ஏவாள் ஆபேலை பெற்றாள். தொடக்கத்தில் இரு வெவ்வேறு நபர்களால் ஏவாள் இரட்டை பிள்ளைகளை கர்ப்பம் தரித்தாள்.

131. பின்னும் ஆதாம் தன் மனைவியை அறிந்தான் ஆதி 4 : 25. அவள் ஒரு குமாரனை பெற்று : காயீன் கொலை செய்த ஆபேலுக்கு பதிலாக தேவன் எனக்கு வேறொரு புத்திரனை கொடுத்தார் என்று சொல்லி அவனுக்கு சேத் என்று பெயரிட்டாள். பாருங்கள் ஆதாம் இருமுறை மட்டுமே ஏவாளை அறிந்தான் (ஆதி 4 : 1, 25) ஆனால் பிறந்தது மூன்று குழந்தைகள். முதல் குழந்தை காயீன் அந்த காட்டு மிருகத்தின் / சாத்தானின் குமாரன். ஏனென்றால் அவன் தான் முதலில் ஏவாளை அறிந்தான். பின்பு ஆதாம் ஏவாளை அறிந்தான். அதன் காரணமாக ஆபேல் பிறந்தான். இதன் பின்பும் ஆதாம் ஏவாளை இரண்டாம் முறையாக அறிந்தான், அவள் சேத்தை பெற்றாள். ஆக ஏவாள் காட்டு மிருகத்துடனும், ஆதாமுடனும் உடலுறவுக்கொண்டு இரண்டு விதமான

பிள்ளைகளை பெற்றாள். அதில் ஒன்று காயீன், அவன் பொல்லாங்கானால் உண்டானவன். அவன் பொய்யன். தன் சகோதரனை கொலை செய்தான். ஆதாம் தன் மனைவியாகிய ஏவாளை அறியவில்லை. அவன் அந்த இடத்திற்கு வரவில்லை. சாத்தான் அங்கே அவனை மடங்கடித்தான். முதலில் ஏவாள் சாத்தானால் கர்ப்பம் தரித்தாள்.

132. காயீன் சர்ப்பத்தின் வித்தாயிருப்பானாகில், ஏவாள் கர்த்தரால் ஒரு குமாரனை பெற்றேன் என்று எப்படி சொல்ல முடியும் என்று கேட்கிறார்கள். ஏவாள் காயீனைப் பெற்று, கர்த்தரால் ஒரு மனுஷனை பெற்றேன் என்றாள் (ஆதி 4 : 1). அது அவளுக்கு கர்த்தரிடத்திலிருந்துதான் கிடைத்திருக்க வேண்டும். அது கர்த்தரிடத்திலிருந்து தான் வரவேண்டும். ஏனென்றால் அது தேவனுடைய பிரமாணம். அது தேவனுக்கு கீழ்படியும். ஒவ்வொரு விதையும் தன்னில் தானே முளைக்கப்பெற்று, அறுவடைக்கு செல்ல வேண்டுமென்று தேவனுடைய பிரமாணமாயிருக்கிறது. ஆகவே அது சர்ப்பத்தின் வித்தையும் முளைப்பிக்க வேண்டியதாயிருந்தது. அது ஒதுபோதும் தேவனை தடைசெய்வதில்லை. மாறாக அது அவருடைய திட்டத்தை நிறைவேற்றச் செய்து அவரை மீட்பராக்குகிறது. சூரியன் பிரகாசிக்க வேண்டுமென்று அவர் அதை உண்டாக்கினார். அது பிரகாசிக்கிறது. மழை நீதியுள்ளவர்கள் மேலும் அநீதியுள்ளவர்கள் மேலும் பெய்யவேண்டுமென்று அவர் தீர்மானித்தார். அது அப்படியே நடக்கிறது. வயலில் விதைக்கப்படும் விதைகள் நல்லவையானாலும், கெட்டவையானாலும் முளைத்து, வளர்ந்து, மேலே வருகிறது. ஏனென்றால் அது ஒரு விதை. சர்ப்பம் தன் விதையை நடக்கூடிய ஒரே வழி அந்த மிருகம். அது மட்டுமே மானிட வர்க்கத்திற்கு அடுத்தபடியாக இருந்தது. சிருஷ்டிப்பில் தேவன் பறவைகளை தோன்ற செய்தார். பின் ஜீவராசிகளுக்கு வந்தார். பிறகு வாலில்லா குரங்கு (Chimpanzee) பின் அந்த காட்டு மிருகம் (சர்ப்பம்). இது பாதி மனிதனாய் பாதி மிருகமாய் இருந்தது. வாலில்லா குரங்கிலிருந்துதான் மனிதன் தோன்றினான் என்பதை அவர்கள் நிருபிக்கமுடியாமல் போயிற்று. குரங்குக்கு அறிவு கிடையாது. ஆத்துமா கிடையாது. அதினால் சிந்தித்து புரிந்துக்கொள்ள முடியாது. ஆக அதற்கு அது நிர்வாணமாயுள்ளது என்பது தெரியாது. அது உணர்ச்சியினாலும், கேட்பதினாலும் ஏதோ ஒரு சத்தம் இடுகிறது. அவைகளுக்கு எந்த விதமான பிரமாணமும் கிடையாது. ஏவாள் கர்ப்பத்தில் பொல்லாத விதை விதைக்கப்பட்ட போது, அது குழந்தையை உற்பத்தி செய்ய வேண்டும். ஏனென்றால்அது தேவனுடைய உற்பத்தி பிரமாணம். அதை உற்பத்தி செய்வதை தவிர அது வேறொன்றும் செய்ய முடியாது. அது தேவனிடத்திலிருந்து தான் வரவேண்டும். ஏனென்றால் அவர்தான் ஜீவனின் அதிபதி. ஆனால் இந்த காட்டு மிருகத்திற்கு ஏறக்குறைய ஆத்துமா இருந்தது. அது தேவனை வஞ்சிக்க எண்ணி தன்னை சாத்தானுக்கு விற்று போட்டது.


133. அடுத்து நீங்கள் ஆதாமின் வம்ச வரலாறுக்குள் வந்தால் அது சேத் வழியாகவே வருகிறது. ஆதாமின் முதல் குமாரன் காயீன் என்றால். ஆதாமின் வம்சவரலாறு காயீன் மூலமாக வரவேண்டும். அவன் தேவனுடைய வம்ச வரலாற்றில் அங்கீகரிக்கப்படவில்லை. மனித வம்ச வரலாற்றிலும், ஆதாமின் வம்ச வரலாற்றிலும் அவன் அங்கீகரீக்கப்படவில்லை. ஏனென்றால் அவன் சர்ப்பத்தின் வித்து. சர்ப்பத்தின் வித்தாகிய காயீன் ஆதாமின் முதற்பேறானவனை கொன்றுப்போட்டான். காயீன் ஆபேலை கொலை செய்தான். காயீன் மூத்தமகன் இன்னும் உயிரோடிருக்கிறான். அப்படியிருக்க வம்சவரலாறு எப்படி மூன்றாவது பிறந்த சேத் மூலம் வரமுடியும்? ஏனென்றால் காயீன் ஆதாமின் குமாரன் அல்ல. தியானியுங்கள் ஆதி 5 : 3. சேத், ஆதாமின் சாயல் மற்றும் ரூபம் என்று கூறப்பட்டுள்ளது. மேலும் லூக் 3 : 38 யை தியானியுங்கள். ஆதி 5:3, லூக் 3 : 38 ஏனோக்கு ஆதாமுக்கு ஏழாம் தலைமுறை என்று கூறுக்கிறது. ஆதாம் சேத்தை பெற்றான். ஆதாம் காயீனை பெற்றான் என்று கூறப்படவில்லை. ஏனென்றால் காயீன் ஆதாமின் சந்ததியல்ல. தேவனுயைட வம்ச வரலாற்றில் காயீன் ஒருவனாக கருதப்படவில்லை. பாருங்கள் ஒரு இனசேர்க்கையில்லாமல் காயீன் பிறந்திருக்க முடியாது. காயீன் ஆதாமின் முதல் குமாரனாக இருப்பானாகில் சேஷ்டபுத்திரபாகம் அவனுக்குதான் சொந்தம். ஆனால் ஆதாமின் மூத்தகுமாரனாக காயீன் இடம் பெறவில்லை. அவன் தேவனுடைய வித்தல்ல, ஆதாமின் வித்துமல்ல, மாறாக சாத்தானின் வித்து. சர்ப்பத்தின் வித்தாகிய காயீன் ஆதாமின் முதற்பேரானவனை கொன்றுப்போட்டான். அந்த சர்ப்பம் தேவனுடைய மற்றொரு குமாரனாகிய இயேசுவையும் கொன்றுப்போட்டான். உங்களில் யாராகிலும் காயீனை வம்ச வரலாற்றில் பொருத்தி அவன் ஆதாமுடைய குமாரன் என்று காண்பிக்க முடியுமா? காயீன் சாத்தானுடைய வித்தாக இருப்பதால் அவன் தேவனுடைய வம்ச, மனித வம்ச, ஆதாமின் வம்ச வரலாற்றிலும், வேறு எந்த ஒரு வம்ச வரலாற்றிலும் அவன் பெயர் அங்கீகரிக்கப்படவில்லை / காணப்படவில்லை.

134. ஒரு பெண்ணோடு இரு ஆண்கள் உறவுக்கொள்ள அவள் சரீரத்தில் இரு கர்ப்பங்கள் உருவாக சாத்தியமா? சாத்தியம் என்பதற்கு இங்கு சில ஆதாரங்களை தருகிறேன்.
**இதுவும் ஒரு அதிசயம்** என்ற தலைப்பில் **தினமலர் நெல்லை பதிப்பில்** 06.06.1994 ல் ஒரு செய்தி வந்தது. அதை வந்த பிரகாரமாக கீழே உங்களுக்கு தருகிறேன். மணிலா, ஜீன் 6. 24 வயதுடைய ஒரு பெண்ணுக்கு இரண்டு குழந்தைகள் பிறந்துள்ளது. முதல் குழந்தையை பெற்றுக்கொண்ட இரண்டே மாதத்தில் இரண்டாவது குழந்தை பிறந்தது தான் இதில் அதிசயம். இதில் ஒன்று ஆண் குழந்தை : மற்றொன்று பெண். பிலிப்பைன்சின் தென் பகுதியில் உள்ளது ஜம்போங்கா நகரம். இங்கு வசிப்பவள் ஜெசிகா சபாகஜன் (24) இவளது கணவன் விமானப்படையில் வேலை பாரக்கிறார். பெயர் ஜீஸ்பிரைட் சபாகஜன். (வயது 30) ஜெசிகாவுக்கு கடந்த ஏப்ரல் மாதம் 19-ம் தேதி இடுப்புவலி ஏற்பட்டது. அழகான ஆண் குழந்தை பிறந்தது. சில நாட்களில் குழந்தையுடன் ஜெசிகா வீடு திரும்பினால். கடந்தமாதம் தன் கணவனை பார்க்க அவரது அலுவலகத்திற்கு போனாள் குழந்தையை கொஞ்சிய ஜீஸ்பிரைட், கையோடு மனைவியையும் சிறிது கொஞ்சினான். ஆனால் ஜீஸ்பிரைட்க்கு

ஒரு சந்தேகம். குழந்தை பிறந்த பிறகும் மனைவியின் வயிறு பெரிதாக இருப்பதை பார்த்து குழம்பினான். சரி, சில நாட்களில் சரியாகிவிடும்என்று விட்டு விட்டான். ஆனால் அடுத்த மாதமே ஜெசிகாவுக்கு மீண்டும் இடுப்புவலி ஏற்பட்டது. ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டாள். அங்கு அழகான பெண் குழந்தை பிறந்தது. இவை இரட்டை குழந்தைகள் அல்ல என டாக்டர்கள் கூறுகின்றனர். ஜெசிகாவுக்கு இரண்டு கர்ப்பபைகள் இருந்ததாகவும் இவற்றிலிருந்து தனி தனியே கரு முட்டைகள் உருவாகியதாகவும், முதல் கரு உண்டான ஒரு மாதத்திற்கு பின் இரண்டாது கரு உருவானது என்று டாக்டர்கள் விளக்கினர்.

135. அடுத்து இந்த செய்தி **தினமலர், சிறுவர் மலர் 24.06.1994** ல் வெளிவந்தது. ஆஸ்திரேலியாவில் சிட்னி நகரில் 1952 ம் ஆண்டு ஒரு பெண்ணுக்கு குழந்தை பிறந்தது. பின் 56 நாட்கள் சென்று இன்னொரு குழந்தை பிறந்தது. இரட்டை குழந்தைகள். டிசம்பர் 16-ந் தேதி 1952ம் ஆண்டு ஒரு குழந்தையும், 1953 ம் ஆண்டு பிப்ரவரி 10-ந் தேதி ஒரு குழந்தையும் பிறந்தது. அடுத்து 31.01.2010 அன்று **தினத்தந்தி** வெளிநாட்டு தகவல் செய்திகளில் வெளிவந்த மற்றொரு சம்பவத்தையும் இங்கு பிரசுரிக்கிறேன். அந்த செய்தி **2 தந்தைகளுக்கு பிறந்த இரட்டை குழந்தைகள்** என்ற தலைப்பில் உள்ளது. துருக்கிநாட்டில் ஒரு பெண்ணுக்கு ஒரே பிரசவத்தில் இரட்டை குழந்தைகள் பிறந்தனர். மரபணு சோதனை நடத்தப்பட்டதில் 2 குழந்தைகளில் ஒரு குழந்தை தான் அவரது கணவருக்கு பிறந்தது என்பதும் அடுத்த குழந்தை இன்னொருவருக்கு பிறந்தது என்பதும் தெரியவந்தது. இதை தொடர்ந்து அந்த பெண்ணை அவர் கணவர் விவாகரத்து செய்ய இருக்கிறார். அந்த பெண்ணின் பெயர் விவரங்களை அதிகாரிகள் தெரிவிக்க மறுத்து விட்டனர், அவரை சி.கே. என் பெயரில் சுட்டுகிறார்கள். அவர் கணவரை ஏ.கே என்று குறிப்பிடுகிறார்கள். ஏ.கே. இஸ்தான்புல் நகரில் காவல்காரராக வேலை செய்கிறார். குழந்தை பிறந்து 3 ஆண்டுகள் ஆன பிறகு அவருக்கு குழந்தைகளில் ஒருவர் மீது ஏற்பட்ட சந்தேகத்தில் அவர் மனைவியை விவாகரத்து செய்ய கோர்ட்டில் வழக்கு தொடர்ந்தார். கோர்ட்டு கேட்டுக்கொண்டதின் பேரில் மரபணு சோதனை நடத்தப்பட்டது. இதில் அவர் ஒரு குழந்தைக்கு மட்டும் தான் தந்தை என்பதும், இன்னொரு குழந்தைக்கு அவர் தந்தை இல்லை எனவும் தெரியவந்தது. திருமணம் செய்துகொள்வதற்கு முன்பு சி.கே. ஒருவரை காதலித்தார். திருமணத்துக்கு பிறகும் அவர் காதலனுடன் உறவை தொடர்ந்தார். இரட்டைக் குழந்தைகளில் ஒரு குழந்தைக்கு மட்டும் ஒருவர் தந்தையாக இருப்பது அரிதிலும் அரிதானது என்று கூறப்படுகிறது. இது பற்றி அங்காரா பல்கலைக்கழக கைனகாலாஜி பேராசிரியர் ரூசன் அய்டாக் கூறுகையில் இந்த பென் மிக குறைந்த அவகாசத்தில் 2 வேறு ஆண்களுடன் உறவு வைத்து இருந்து இருகிறார் என்றும் இதனால் தான் வெவ்வெறு மரபணுவுடன் கரு உருவாகி உள்ளது என்று குறிப்பிட்டார். மரபணு சோதனை மூலம் கள்ளக்காதலில் சி. கே ஈடுப்பட்டது தெரியவந்ததை தொடர்ந்து அவருக்கு அவர் குடும்பத்தில் இருந்தும், அவர் கணவர் குடும்பத்தில் இருந்தும் கொலை மிரட்டல் வந்துள்ளது.





136. கீழே நான் எழுதுகிற இந்த எடுத்துக்காட்டை சகோ வில்லியம் மாரியன் பிரன்காம் **ஏழு சபைகாலங்களின் வியாக்கியானம்** என்ற புத்தகத்தில் 122ம் பக்கத்தில் குறிப்பிடுகிறார். சர்ப்பத்தின் குமாரன் காயீன், ஆதாமின் குமாரன் ஆபேல் இரட்டை குழந்தைகளாக ஏவாளின் கர்ப்பத்தில் வளர்ந்தனர். ஆபேல் உண்டாவதற்கு சிறிது காலம் முன்பு காயீன் ஏவாளின் கர்ப்பத்தில் உண்டானான். இது சாத்தியமல்ல என்று எண்ணுபவர்கள் மருத்துவக்குறிப்புகளை (Medical Reports) படிக்க வேண்டும். சமீபத்தில் நார்வே (Norway) தேசத்திலிருந்த ஒரு ஸ்திரீ இரட்டை குழந்தைகளை பிரசவித்தாள். அவைகளில் ஒரு கருப்புநிறமாகவும் மற்றொன்று சிகப்பாகவும் இருந்தன. அவளுடைய நடத்தையை சந்தேகித்த கணவன் அவளை விவாகரத்து செய்தான். அவளுக்கு ஒரு நீக்ரோ காதலன் இருந்ததாக அவள் நீதிமன்றத்தில் ஒப்புக்கொண்டாள். ஒரு கர்ப்பம் உண்டான மூன்று வாரங்கள் கழித்து மற்றொரு கர்ப்பம் அவளுக்கு உண்டாயிற்று என மருத்துவர்கள் கூறினர்.

மீண்டும் நான் கீழே தரும் இந்த நான்காவது எடுத்துகாட்டும் மேற்கண்ட எடுத்துக்காட்டின் தொடர்ச்சியாக உள்ளது. 1963 - ம் வருடத்தில் டெக்ஷாஸ் (Texas) பட்டனத்திலுள்ள போமாண்ட் (Beaumont) என்னும் ஸ்தலத்தில் தங்கியிருந்த ஒரு பெண் இரண்டு வித்தியாசமான சமயங்களில் கர்ப்பமுற்றாள். முதல் பிரசவத்தில், மற்றொரு குழந்தை கர்ப்பத்தில் உள்ளவாறே மரித்தாள்.

137. பாருங்கள் ஒரு மிருகத்தின் கருவை எடுத்து மனிதனுக்குள் புகுத்தினால் அதன் தைராய்டு அணுக்கள் (Thyroid Cells) மனிதனினின் தைராய்டுக்குள்ளும், அதன் பிருக்கங்களின் அணுக்கள் (Kidney Cells) மனிதனின் பிருங்களுக்குள்ளும் செல்லுகின்றன என விஞ்ஞானம் கண்டுபிடித்துள்ளது. காணக்கூடாது ஒரு சக்தி இவைகளை சரியான இடங்களில் சேர்க்கிறது. இக்காலத்தில் மனிதனும் மிருகமும் புணர்ந்து கலப்பினங்களை உண்டாக்க முடியாவிட்டாலும் மனிதனுக்கும் மிருகங்களுக்குமிடையே காணப்படும் இத்தகைய இரசாயனத் தொடர்பு (Chemical Affinity) ஏதேன் தோட்டத்தில் ஏவாளுக்கும் சர்ப்பத்திற்கும் உண்டான புணர்ச்சியை நிருபிக்கிறது (ஏ.ச.கா. வியாக்கியானம் பக்கம் 123 ).

138. பிரியமானவர்களே மேற்கூறியது போன்ற சம்பவம் ஒன்று தான் ஏதேன் தோட்டத்தில் நடந்தது. முன்பு நடந்ததே இப்பொழுதும் நடக்கிறது. (பிர 3 : 15) பாருங்கள் ஏவாள் ஜீவனுள்ளோர்கெள்ளாம் தாயானாள் (ஆதி 3 : 20) ஆனால் ஆதாம் ஜீவனுள்ளோருக்கெல்லாம் தகப்பன் என வேதவாக்கியங்களில் எங்கும் எழுதப்படவில்லை. ஏனென்றால் அவன் ஜீவனுள்ளோருக்கெல்லாம் தகப்பன் இல்லை. ஏவாளின் முதல் குமாரன் காயீன். அந்த காட்டு மிருகத்தினால் பிறந்தவன். அவன் சாத்தானின் வித்து. முடிவில் சாத்தான் தன்னுடைய திட்டத்தில் வெற்றிப்பெற்றான். அவன் தன் வித்தை மனுக்குலத்தில் பிரவேசிக்க செய்து வெற்றிப்பெற்றான். பேர்கிறிஸ்தவர்கள் தேவனை ஆராதிப்பதாக நினைத்து சாத்தானை வழிப்பட்டு வருகிறார்கள். ஏனென்றால் அவர்கள் சார்ந்திருக்கும் ஸ்தாபன திரித்துவ சபைகளில் தேவனுடைய வார்த்தை இல்லை. இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து, தங்கள் உதடுகளினால் என்னை கனம்பண்ணுகிறார்கள். அவர்கள் இருதயமோ எனக்கு தூரமாய் விலகியிருக்கிறது. மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாக போதித்து வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் என்று எசாயா தீர்க்கதரிசி நன்றாய் சொல்லியிருக்கிறான் (மத் 15 : 8, 9) ஆம் ஸ்தாபன சபைகள் தங்கள் பாரம்பரியத்தினாலே தேவனுடைய கற்பனையை அவமாக்கிவருகிறார்கள். இவர்களை மாயக்காரர் என்று தேவன் அழைக்கிறார். ஆவிக்குரிய வித்து தேவன் பேரில் சார்ந்திருந்து, எளிமையான ஜீவியம் செய்து, செல்வத்தை காட்டிலும் சத்தியத்தை சார்ந்து வாழ்கிறார்கள். இன்று நாகரீகமற்ற ஜனங்கள் பாம்பை மாம்ச புணர்ச்சியோடு சம்பந்தப்படுத்தி அதை தொழுது வருகிறதை நாம் காண்கிறோம். ஆக சாத்தானும் ஆராதனைக்குரியவனாகிவிட்டான்.



139. விபச்சாரக்காரரையும் தேவன் நியாந்தீர்ப்பார் எபி 13 : 4. தேவனாகிய கர்த்தர் சர்ப்பத்தை பார்த்து : நீ இதை செய்தபடியினால் சகல நாட்டு மிருகங்களிலும், சகல காட்டு மிருகங்களிலும் சபிக்கப்பட்டிருப்பாய். நீ உன் வயிற்றினால் நகர்ந்து, உயிரோடிருக்கும் நாளெல்லாம் மண்ணை தின்பாய் ; உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும், அவள் வித்துக்கும் பகையை உண்டாக்குவேன் ; அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய் என்றார் (ஆதி 3 : 14, 15) தேவனுடைய நியாயத் தீர்ப்பு அந்த காட்டு மிருகத்தின் மேல் விழுந்தது. இப்பொழுது அந்த காட்டு மிருகத்தில் காணப்படும் ஒரு எலும்புகூட மனிதனுடைய எலும்புபோல் காணப்படவில்லை. அனைத்து உறுப்புகளும் மாற்றப்பட்டது. புழுதி (Dust) அதற்கு ஆகாரமாக கொடுக்கப்பட்டது. சிலர் பாம்பு என்ன புழுதியையா ஆகாரமாக கொண்டிருக்கிறது என்ன தர்க்கிப்பதுண்டு. அன்றைய ஏதேன் தோட்டத்தில் ஜீவராசிகளின் ஆகாரம் வெஜிடேரியன் தான். (ஆதி 1 : 29) சாவதற்காக எதுவும் உண்டாக்கப்படவில்லை. இந்த சம்பவம் ஏதேன் தோட்டத்தில் நடந்ததால் காட்டு மிருகம் சர்ப்பமாக உருமாற்றப்பட்டு அதற்கு புழுதி (Dust) உணவாக கொடுக்கப்பட்டது. நீங்கள் ஏசா 65 : 25 யை தியானித்தால் அங்கு ஆயிரம் வருட அரசாட்சியில் புழுதி சர்ப்பத்திற்கு இரையாகும் எனக்கூறப்பட்டுள்ளது. அங்கு நான்வெஜிடேரியன் ஆகாரமே கிடையாது. அன்று ஏதேன் தோட்டம் ஆயிரம் வருட அரசாட்சி போன்ற உலகம். தேவன் ஆதாமையும் ஏவாளையும் தோட்டத்திலிருந்து அனுப்பிவிட்ட பிறகு நோவா காலத்து ஜலபிரளயத்திற்கு பின்புதான் நான்வெஜிடேரியன் உணவு ஜனங்களுக்கு கொடுக்கப்பட்டது. நடமாடுகிற ஜீவஜந்துக்கள் யாவும் ஆகாரமாக கொடுக்கப்பட்டது. பின்பு தேவன் நோவவையும் அவன் குமாரரையும் ஆசீர்வதித்து : நீங்கள் பலுகி பெருகி, பூமியை நிரப்புங்கள். உங்களைப் பற்றிய பயமும் அச்சமும் பூமியில் உள்ள சகல மிருகங்களுக்கும். ஆகாயத்தில் உள்ள சகல பறவைகளுக்கும் உண்டாயிருக்கும் : பூமியிலே நடமாடுகிறயாவும், சமுத்திரத்தின் மச்சங்கள் யாவும், உங்களுக்கு கையளிக்கப்பட்டன. நடமாடுகிற ஜீவ ஜந்துக்கள் யாவும் உங்களுக்கு ஆகாரமாய் இருப்பதாக : பசும்பூண்டுகளை உங்களுக்கு தந்தது போல, அவைகள் எல்லாவற்றையும் உங்களுக்கு தந்தேன். மாம்சத்தை அதின் உயிராகிய இரத்ததோடே புசிக்கவேண்டாம் என்றார். ஆதி :9 : 1-4. ஆதலால் தான் நாம் இக்காலத்தில் நான்வெஜிடேரியன் சாப்பாடு சாப்பிடுகிறோம். சர்ப்பமாகிய பாம்பும் நான்வெஜிடேரியன் சாப்பாடு சாப்பிடுகிறது. ஆனால் இனி வரபோகும் ஆயிரம் வருட அரசாட்சியில் மீண்டும் நாம் வெஜிடேரியன் சாப்பாடிற்கு திரும்புவோம். அப்பொழுது சர்ப்பமாகிய பாம்பு மீண்டும் புழுதியை தான் தின்னும்.

**140. ஆதி 3 : 15, தேவன் ஏதேன் தோட்டத்தில் அளித்திருந்த மீட்பை குறித்த வாக்குதத்தம் : உன் வித்து சர்ப்பத்தின் தலையை நசுக்கும் என்றார். அவர் நியாயபிரமாணத்தைக்கொண்டு அதை நசுக்க முடியவில்லை. தீர்க்கதரிசிகளை கொண்டும் அவர் அதை நசுக்கமுடியவில்லை. ஆனால் ஸ்திரீயின் வித்து கிறிஸ்துவாக ஆனபோது அவர் அதை நிறைவேற்றினார். பிள்ளைகள் மாம்சத்தையும், இரத்தத்தையும் உடையவர்களாய் இருக்க அவரும் அவர்களை போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார். மரணத்திற்கு அதிகாரியாகிய பிசாசானவனை தமது மரணத்தினாலே**

**அழிக்கும்படிக்கும், ஜீவகாலமெல்லாம் மரணபயத்தினாலே அடிமைத்தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலையாக்கும்படிக்கும் அப்படியானார். அவளுக்கு ஒரு வித்து கொடுக்கப்பட்டது. அது கிறிஸ்து. ஸ்தாபன சபைகள் அது கன்னியின் மூலம் பிறந்த ஹீமோகுலோபின் என நம்புகின்றனர். அது சிருஷ்டிக்கப்பட்ட தேவனுடைய இரத்தம் என்றும் அதில் கிருமிகள் உண்டாயிருந்தன என்றும், ஆனால் முட்டை அவளுடையது என்று அவர்கள் நம்புகின்றனர். அது அப்படியல்ல. உணர்ச்சியில்லாவிட்டால் அந்த முட்டை அந்தகுழாயின் வழியாக கருப்பைக்குள் வரமுடியாது. அப்படியானால் ஆவியாகிய தேவன் ஒரு ஸ்திரீயுடன் இனசேர்க்கையில் ஈடுபட்டார் என்று நீங்கள் கூறுவதுபோல் ஆகிவிடுகிறது. அது எப்படி முடியும்? அது முழுவதும் தேவனுடைய சிருஷ்டிப்பினால் உண்டான பொருட்கள் முட்டை, கிருமி இரண்டுமே.**

**141. ஏவாளும் தனக்குரிய தண்டனையை பெற்றாள். நீ கர்ப்பவதியாய் இருக்கும்போது உன் வேதனையை மிகவும் பெருகப்பண்ணுவேன். வேதனையோடே பிள்ளைபெறுவாய். உன் ஆசை உன் புருஷனை பற்றியிருக்கும். அவன் உன்னை ஆண்டுக்கொள்வான் என்றார் (ஆதி 3 : 16) காட்டு மிருகமும் ஏவாளும் தங்கள் சரீரத்தின் மத்தியில் உள்ள பாகத்தை தங்கள் இச்சைகளுக்கு உபயோகப்படுத்தினதினால் ஸ்திரீயின் அந்த அவயவத்தை தேவன் வேதனைக்குட்படுத்தினார். வேதனையோடே இனி அவள் பிள்ளைபெற வேண்டியதாயிற்று. ஏவாளுடைய தண்டனை முற்றிலும் கர்ப்பம் தரித்தல் மற்றும் பிள்ளை பேறு சம்பந்தமாகவே இருக்கிறது. கனியை புசித்தற்கும், கர்ப்பதிற்கும், பிள்ளை பேறுக்கும் என்ன சம்மந்தம்? அது தகாத உறவாக இருந்தால் அதனோடு சம்மந்தபட்ட அவயவங்கள் தண்டனைக்குரியதாயிற்று.**

142. ஆதாம் தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கபட்டான். அவன் தேவனுடைய குமாரனாக இருந்தபடியினால் சோதிக்கப்பட்டு பாவத்தில் விழக்கூடாதிருந்தது. மனிதன் பாவத்தில் விழுவதற்கென்று ஸ்திரீயானவள் மனிதனிலிருந்து பிரித்தெடுக்கப்பட வேண்டியதாயிற்று. ஸ்திரீயானவள் நேரடியாக தேவனால் உண்டாக்கபட்டவள் அல்ல. அதன் காரணமாகத்தான் சாத்தான் அவளை கற்பழிக்க முடிந்தது. பாருங்கள் தேவனுடைய சிருஷ்டிப்புக்களில் வேறெந்த பெண் வர்க்கமும் கற்பு தவற முடியாது. ஸ்திரீனிடத்தில் காணப்பட்ட பெலவீனமோ சாத்தான் அந்த காட்டு ஜீவன் மூலமாக அவளை கற்பழிக்க காரணமாயிருந்தது. இதன் காரணமாக ஸ்திரீயானவள் தேவனுக்கு முன்பாகவும் அவருடைய வார்த்தைக்கு முன்பாகவும் ஒரு விசேஷித்த நிலை அடைந்து நன்மை, தீமையான தன்மைகளை ஒருங்கே பெற்றவளானாள். பாருங்கள் ஒருபுறம் ஸ்திரீயை நோக்கும் போது அவள் அசுத்தமும் அருவருக்கப்படதக்கவளுமாய் இருக்கிறாள். ஆனால் மற்றொரு புறம் அவள் சுத்தமாயும் அழகுள்ளவளாகவும், தேவனுடைய ஆவியையும் ஆசீர்வாதத்தையும் பெற்றவளாய் இருக்கிறாள். ஒருபுறம் வேசித்தனத்தின் மதுவை குடித்த வேசி என்று அழைக்கப்படுகிறாள். மறுபுறம் அவள் கிறிஸ்துவின் மணவாட்டி என்று அழைக்கப்படுகிறாள். ஒருபுறம் தேவனுக்கு அருவருப்பான **மகா பாபிலோனின் ரகசியம்** என்று அழைக்கப்படுகிறாள். மறுபுறம் கிறிஸ்துவின் மனவாட்டியாக **புதிய எருசலேம்** என்று அழைக்கப்படுகிறாள். ஒரு புறம் அவளுடைய அசுத்தமான தன்மையின் காரணமாக அவள் கந்தக அக்கினி கடலில் தள்ளப்படுகிறாள். மறுபுறம் வானத்திற்கு உயர்த்தப்பட்டு தேவனுடைய சிங்காசனத்தை பகிர்ந்துகொள்ளும் இராணியாய் இருக்கிறாள்.

143. ஆதாமும் தன் தண்டனையை பெற்றான். எந்தவிதமான உழைப்புமின்றி நேரத்திற்கு நேரம் தன் ஆகாரத்தை புசித்து இராஜவாழ்க்கை வாழ்ந்து வந்த அவன் இப்பொழுது உழைத்து சாப்பிடவேண்டியதாயிற்று. சாவாமையுடையவன் இப்பொழுது தான் எடுக்கப்பட்ட மண்ணுக்கே திரும்பவேண்டியதாயிற்று. மனிதன் மரிப்பதற்காக அல்ல என்றென்றைக்கும் ஜீவிப்பதற்காகவே சிருஷ்டிக்கப்பட்டான். ஆனால் ஏவாள் செய்த வந்த காரியம் மரணத்தை கொண்டு வந்தது. ஆதாமை தேவன் சபிக்க முடியாது. ஏனென்றால் அவன் தேவனுடைய குமாரன். ஆதலால் அவனுக்கு பதிலாக தேவன் பூமியை சபித்தார். அவன் மண்ணுக்கு திரும்புவது தேவசித்தமல்ல. அவனுக்கு கொடுக்கப்பட்ட தண்டனையின் விளைவாய் மண்ணுக்கு திரும்ப அனுப்பப்பட்டான் (ஆதி 3 : 19). ஆதாம் 930 வது வயதில் மரணமடைந்தான். ஆயிரம் வருடம் வாழவில்லை. தேவனுடைய காலகணக்கின் படி ஆயிரம் ஆண்டுகள் ஒரு நாள். ஆதாம் பாவம் செய்த அதே நாளில் மரித்தான். (ஆதி 5 : 5, 2 : 17). மேலும் மாம்சத்தின் இச்சையில் இன்பம் கண்ட ஆதாமும், ஏவாளும் எழுபது பிள்ளைகளை பெற்றார்கள் என சரித்திர ஆசிரியர் ஜோசப்பஸ் (Josephus) கூறுகிறார். அன்று முதல் இன்று வரை மனுக்குலத்தில் மாம்ச இச்சையினாலே குழந்தை பிறப்பு உண்டாகிறது. ஆனால் அது தேவனுடைய சித்தம் அல்ல. இயேசு எவ்வாறு மாம்ச இச்சைக்கு அப்பாற்பட்டவராக பிறந்தாரோ, அதேப்போன்று மாம்ச இச்சைக்கு அப்பாற்பட்ட விதத்தில் பிள்ளைகள் பிறக்கவேண்டியவர்களாய் இருந்தார்கள் ஆனால் சாத்தான் அதை சீர்குலைத்தான். ஆனாலும் இனி அது வரயிருக்கும் ஆயிரம் வருட அரசாட்சியில் நிகழும்.

144. முடிவாக ஜீவவிருட்சத்தை சார்ந்தவர்களும், நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தை சார்த்தவர்களும் உள்ள ஒருசில முக்கியமான வித்தியாசங்களை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். இதிலிருந்து யார் யார் ஜீவவிருட்சத்தையும், நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தையும் சார்த்தவர்கள் என்பதை நீங்கள் அறிந்துகொள்ளலாம்.

1. ஜீவவிருட்சத்தை சார்ந்தவர்கள் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் அவயவமாய் உள்ளவர்கள். நம்மைதீமை அறியத்தக்க விருட்சத்தை சார்ந்தவர்கள் ஸ்தாபன திரித்துவ சபைகளை சார்ந்த பேர் கிறிஸ்தவர்கள்.
2. ஜீவவிருட்சத்தை சார்ந்தவர்கள் தங்கள் பாவங்களுக்காக மனந்திரும்பி பாவமன்னிப்புகென்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றவர்கள். நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தை சார்ந்தவர்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பதவிகள் / பட்டங்களினால் ஞானஸ்நானம் பெற்றவர்கள். ஏனென்றால் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து யார் என்கிற அறிவை அவர்கள்இன்னும் அடையவில்லை.

3. ஜீவவிருட்சத்தை சார்ந்தவர்கள் கர்த்தருடைய இராபோஜனப் பந்தியை யாத் 12 அதிகாரத்திற்கு இசைவாக இரவு வேளையில் புசிப்பார்கள். நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தை சார்ந்தவர்கள் பகலில், எந்த வேளைகளிலும் புசிப்பார்கள். இவர்களுக்கு கர்த்தருடைய இராபோஜனம் என்றால் என்ன என்ற அறிவே கிடையாது.

4. ஜீவவிருட்சத்தை சார்ந்தவர்கள் நாள் நட்சத்திரங்களை, முகூர்த்தங்களை கவனித்து நடப்பவர்கள் அல்ல. கர்த்தருடைய சித்தத்தை வேதவாக்கியங்களை கொண்டு அறிந்து அதன் மூலம் செயல்படுவார்கள். நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தை சார்ந்தவர்கள் நாள் நட்சத்திரங்களை பார்த்து குறி கேட்டு அஞ்ஞனம் பார்த்து நடப்பார்கள் / செயல்படுவார்கள்.

5. ஜீவவிருட்சத்தை சார்ந்தவர்கள் மத்தியில் ஐந்து வகையான ஊழியங்கள் காணப்படும் எபே 4 : 11-13 . நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தை சார்ந்தவர்கள் மத்தியில் ஐந்து வகை ஊழியங்கள் என்பதே கிடையாது. இவர்கள் நினைத்தையெல்லாம் தேவசித்தம் எனக்கூறிக்கொண்டு, தேவசித்திற்கு புறம்பாக அவருக்கென்று ஒரு ஊழியம் செய்பவர்கள்.

6. ஜீவவிருட்சத்தை சார்ந்தவர்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து ஒருவரே தேவன் அதாவது இயேசுவே கிறிஸ்து என்றும் (அப் 5 : 42) கிறிஸ்து இயேசு கர்த்தர் என்றும் (2கொரி 4 : 5) பிரசங்கிப்பவர்கள். ஆனால் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தை சார்ந்தவர்கள் தேவத்துவத்தில் மூன்று நபர்கள் உண்டு / இரு நபர்கள் உண்டு. அவர்களில் ஒருவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்று பிரசங்கிப்பவர்கள்.

7. ஜீவவீருட்சத்தை சார்ந்தவர்கள் பொதுவாக பண்டிகைகள் எதுவும் ஆசரிக்கமாட்டார்கள். அவைகளை ஆசரிக்க தேவனுடைய சபைக்கு கட்டளை எதுவும் இல்லை. ஆனால் நன்மை தீமைஅறியத்தக்க விருட்சத்தை சார்ந்தவர்கள் வேதவாக்கியங்களில் காணப்படாத அநேக பண்டிகைகளை ஆசரிப்பார்கள். உதாரணமாக கிறிஸ்துமஸ், ஈஸ்டர், லெந்து நாட்கள், மரித்த பரிசுத்தவான்களின் திருநாட்கள், கல்லறை திருநாள் இப்படி எழுதிக்கொண்டே போகலாம்.

145. கிறிஸ்துவுக்குள் எனக்கு பிரியமானவர்களே இக்காலத்திற்குரிய செய்தியை எடுத்து உங்களிடம் கொண்டுவர நான் ஒரு பொறுப்புள்ளவனாய் இருக்கிறேன். நீங்கள் அதற்கு செவி கொடுப்பீர்களா, அல்லது மாட்டீர்களா என்பதற்கு பொறுப்புள்ளவர்களாய் இருக்கிறீர்கள். ஆதலால் இந்த செய்தித் தொகுப்பை ஜெபசிந்தையுடன் தேவனுடைய வார்த்தையை (பரிசுத்த வேதாகமத்தை) கையில் வைத்துக்கொண்டு ஒரு முறையல்ல பலமுறை தியானியுங்கள். கர்த்தர் உங்கள் ஆத்தும வாஞ்சையை அறிந்து உங்களுக்கு தேவ இரகசியங்களை வெளிப்படுத்திக் கொடுப்பார். உன் வித்துக்கும் அதாவது சாத்தானின் வித்துக்கும், அவள் வித்துக்கும் / அதாவது ஸ்திரீயின் வித்துக்கும் பகை உண்டாக்குவேன் (ஆதி 3 : 15) என்றார். சாத்தான் அவன் வித்தை அந்த காட்டு மிருகம் மூலம் ஏவாளோடு இடைப்பட்டு உலகில் பிரவேசிக்க செய்தான். அதோடு மட்டுமல்ல **நாகதேவதை** என அழைக்கப்பட்டு, தேவனை அறியாத ஜனங்களின் தொழுகைக்கும் உரியவனானான். சிருஷ்டி கர்த்தாவாகிய தேவனை போல், சிருஷ்டிப்பை தாறுமாறாக்கும் சாத்தானும் ஆராதனைக்குரியவனானான். ஸ்திரீயும் தன் வித்தை பிரவேசிக்க செய்தாள். எப்படியெனில் காலம் நிறைவேறினபோது ஸ்திரீயினிடத்தில் பிறந்தவரும், நியாயப்பிரமாணத்திற்கு கீழானவருமாகிய தம்முடைய குமாரனை தேவன் அனுப்பினார். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும் ஆராதனைக்குரியவரானார், தொழுகைக்குரியவரானார். ஒருவேளை கிழக்குக்கும், மேற்குக்கும் எவ்வளவு தூரமோ அவ்வளவு தூரமாய் நாம் ஒருவருக்கொருவர் இந்த வெளிப்பாட்டில் ஒவ்வாமல் இருந்தாலும், வாருங்கள் நாம் ஒருவரை ஒருவர் நேசிப்போம். நமக்குள் விரோதம் வேண்டாம், பகை வேண்டாம். நான் எழுதிய கருத்துக்களோடு நீங்கள் இணங்காமற்போனால் நான் இங்கு உபயோகித்துள்ள வேதவாக்கியங்களை குறித்து வைத்துக்கொண்டு அவைகளை ஜெபசிந்தையுடன் ஆராய்ந்து ஒரு தீர்மானம் செய்யுங்கள். தேவன் நமக்குள் ஒருமனதை கொண்டுவர நிச்சயமாக உங்களுக்கு உதவி செய்வார்.

146. நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை உங்கள் ஆவியுடனே கூட இருப்பதாக. ஆமென்

மூன்றாம் பதிப்பு : மார்ச் / மே 2011

கிறிஸ்துவின் அன்பில்
**சகோ. காலேப் யோசுவா**